372.06
அன்ன
SL|PR

Ransca GREETINGS
142, 144, St. Anthony's Mawatha,
Colombo 13, Sri Lanka.

தமிழ்த் தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பிலும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சூடர்க் தமிழ் நாடே
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே





பெருமையுடன் வழங்கும்

முத்தமிழ் விழா.

2-6-99

பிரதம விருந்தினர்

கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர்

சோ. சந்திரசேகரம்

சிறப்பு விருந்தினர்

நீதி இன விவகார நல்லிணக்க அமைச்சு

சிரேஷ்ட உதவிச் செயலாளர்

கே. எம். எம். ஷெரிவ்.

தமிழ் இலக்கிய மன்றம். புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு - 13.

சமர்ப்பணம்

பொதிகையில் பிறந்து

மதுரையில் தவழ்ந்து

சங்க நாதம்

பாடி வரும்

தமிழே!

தமிழ்த் தாயே!

உன் பாதக் கமலங்களில்

இம்மலர்

சமர்ப்பணம்

தமிழ் இலக்கிய மன்றம். புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு - 13.

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம்

தமிழ் இலக்கிய மன்றக் கீதம்

அன்னம் ஆவே அணிதர முதலாய்
வரவரை வரவளர் வளர்மதியே
திருமகளே! உனக்கெவர் நிகர் அன்னமே!
அன்னம்மா! புனித அன்னம்மா!

அன்றும் இன்றும் என்றும் கனியாய்
அகல் விசும்பிடையே ஒளிவிடும் பாவு!
சிந்தைக் கெட்டாத் தென்னவன் தமிழே!
நாடித்துடிபோ நாட்டமு மதுவோ?
அன்னம்மா! புனித அன்னம்மா!

சிந்திக்க ஆசான் சிந்தை செய் மாணவியர்
வந்திக்க வல்லவள் நீ வரப்புயர நீருயரும்
சந்திக்குள் நிற்கின்றாய். சாய்ந்தாடும் மின்வலுக்கள்
புந்திக்குள் புதுப்புனலே பாயட்டும் புதுப் பெண்ணே
அன்னம்மா! புனித அன்னம்மா!

பாயும் சிங்கமும் சீறும் வேங்கையும்
பைந்தமிழ் கேட்டுப் பணி செய்யும்
பாவும் பரவும். பாவை நல்லாரும்
பயிலும் கவிச் சாலையே!
தேயம் புகழக் கட்டியம் கூறிடும்
தொன்னகர் ஆயர் தவச்சாலை.
அன்னம்மா! புனித அன்னம்மா!

ஆக்கம்
பூம்புகாரின் புதல்வி.

With Best Compliments from

EB

ESWARAN BROTHERS

No :- 104/11, Grandpass Road,
Colombo - 13.
No :- 267, Sea Street,
Colombo -11, Sri Lanka.
Tel : 421015, 435341, 432599
TLX :21275, 21866 ESWARAN CE, CABLE :TEDESIPRO
FAX : 448720

பிரதம விருந்தினரின் ஆசிச் செய்தி

வட கொழும்பு வாழ் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக நீண்டகாலமாக உழைத்து வரும் புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம் வெளியிடுகின்ற இச்சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி ஒன்றை வழங்குவதில் மிக மகிழ்வடைகிறேன்.

கல்வி எனும் பதத்திற்கு ஏராளமான வியாக்கியானங்கள் உண்டு. அண்மைக் கால கல்வியியல் சிந்தனைகளின்படி கல்வி, கற்றல் எனும் எண்ணக்கருக்கள் வேறுபடுத்தி நோக்கப்படுகின்றன. கல்வி என்பது நிறுவனங்களின் தொழிற்பாடு என்றும், கற்றல் என்பது தனியாளுக்குரிய தொழிற்பாடு என்றும் வேறுபடுத்தி நோக்கப்படுகின்றது. கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற பாடசாலைகள் வெறுமனே வகுப்பறைக் கற்பித்தல் பணிகளுடன் மட்டும் நில்லாது மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான பல்வேறு செயற்பாடுகளை அறிமுகம் செய்யவேண்டியதன் அவசியத்தை இன்றைய கல்விச் சிந்தனைகள் வலியுறுத்துகின்றன. பாடசாலைக்கல்வி பரந்த பாட உள்ளடக்கத்தைக் கற்பிக்கும் அதே வேளையில் பரந்துபட்ட கற்றல் திறன்களையும் கற்பிக்க வேண்டும் என்றும் பல்வேறு மூலாதாரங்களிலிருந்து கல்வித் தேர்ச்சியை பெறுவதற்கு பாடசாலைகள் வழிகாட்ட வேண்டும் என்பது ஒரு புதிய கல்விச் சிந்தனை ஆகும்.

இப்பின்புலத்தில் இச்சஞ்சிகையின் வெளியீடு முக்கியத்துவம் பெறுகின்றது. மாணவர்களின் ஆக்கங்களுக்கான ஒரு களமாக அமைவதுடன் அவர்களுக்குப் பயனுடைய சிறந்த கட்டுரைகளையும் தாங்கி இச் சஞ்சிகை வெளிவந்துள்ளமை பாராட்டிற்குரியதே. இவ்வெளியீட்டிற்குப் பொறுப்பான அனைவரும் பாராட்டிற்குரியவர்கள். இத்தகைய முயற்சிகள் தொடர்ந்தும் இடம் பெற வேண்டும் என்பதே எனது பேரவா.

பேராசிரியர். சோ. சந்திரசேகரம்
கல்விப் பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

With Best Compliments from

EXPO CORGO LINKS (PVT) LTD.

3rd Floor, 123/3/19,
Y.M.B.A. Building, Fort, Colombo 1.

Phone : 441938,
348105,
330481
Fax : 441881.

சிறப்பு விருந்தினரின் ஆசிச் செய்தி

கே: எம்.எம். ஷெரீப்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
இன உறவு அலுவல்கள் தேசிய ஒருங்கிணைப்புப் பிரிவு
நீதி, அரசியலமைப்பு விவகார, இன உறவு அலுவல்கள்,
தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு,
152, காலி வீதி, கொழும்பு -03.

கொட்டாஞ்சேனை புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய தமிழ் மன்றத்தினால் வெளியிடப்படும் ஆண்டு மலரில் எனது ஆசிச் செய்தியும் இடம் பெறுவதையிட்டு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றேன். கல்லூரியின் தமிழ் மன்றத்தினர் தமிழரின் கலை, கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றை வளர்ப்பதில் காட்டும் ஆர்வம் போற்றுதற்குரியது.

வெறும் ஏட்டுக்கல்வியினால் மட்டும் தங்களின் அறிவை வளர்த்துக் கொள்ளாமல் பிறந்த நாட்டுக்குப் பெருமைதேடித் தரக்கூடிய பிரஜைகளாகத் தங்களை ஆக்கிக்கொள்ளத் தக்கதான ஏனைய பல ஆக்கபூர்வமான முயற்சிகளில் இக்கல்லூரியின் மாணவிகள் ஈடுபடுவதைக் கண்கூடாகக் கண்ட பலரில் அடியேனும் ஒருவன் என்பதில் பெருமை அடைகின்றேன்.

நமது நாட்டினது வருடாந்த வருமானத்தில் சுமார் மூன்றில் ஒரு பங்கு நடந்து கொண்டிருக்கும் உள் நாட்டுப் பிரச்சினை தொடர்பாகச் செலவழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் அப்பிரச்சினையைத் தீர்த்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையும், சமாதான சகவாழ்வும் அவசியமென்பதை ஆதார சுருதியாகக் கொண்டதோர் இளைய தலைமுறை இக்கல்லூரியில் உருவாகி வருவதையும், அத்தகைய உயர்ந்த சிந்தனை விதைகள் மரியாதைக்குரிய ஆசிரியைகளினால் அவர்களின் மனங்களில் விதைக்கப்படுகின்றன என்பதையும் நானறிவேன்.

"சாந்து பூசி, கற்களினால் கட்டப்படும் கட்டிடங்கள் கல்லூரிகள் ஆகாது. அவைகளில் கற்கும் மாணவ சமூகமே கல்லூரிகளை உருவாக்குபவர்கள்" என மகாத்மா காந்தியடிகள் கூறியதை நினைவு கூற விரும்புகிறேன்.

பொதுவாக ஒரு நாடு தன்னிறைவு அடைவதென்பது அந்நாட்டின் வாழ் மக்கள் கல்வியிலும். பொருளாதாரத்திலும் தன்னிறைவு அடைவதையே குறிக்கிறது. கல்வியில் தன்னிறைவு அடையும் போது, அது பொருளாதாரம். கலாச்சாரம், சுக வாழ்வு, மனித நேயம் ஆகிய சகலதிலும் நிறைவு அடையக் கூடிய வழிகளுக்கான வாசல்களைத் திறந்துவிடும்.

மனித வாழ்வுக்கேற்ற சகல வளங்களும் அமையப் பெற்ற இலங்கைத் தீவின் பிரசைகளென்பதில் நாம் பெருமையடைகிறோம். அத்தகைய வளங்களை நாம் முழுதாகப் பயன்படுத்துகிறோமா? சமமாக பயன்படுத்துகிறோமா? என்றால் பதில் இல்லை என வேதனையுடன் கூறவேண்டியுள்ளது. நம்மோடு சமகாலத்தில் அல்லது அதற்குப் பின்னர் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சுதந்திரம் பெற்ற ஏனைய நாடுகளின் அபிவிருத்தியோடு நமது நாட்டில் நாம் ஈட்டியதை ஒத்துப்பார்க்கும் போது நமது முன்னேற்றம் மிகவும் குறைந்ததாயுள்ளதை அறிய முடிகிறது. இதிலிருந்து நமக்குத் தெரியவருவது நாம் முன்னேறுவது மட்டுமல்ல ஏனைய நாடுகளுடன் போட்டியிட்டு அவர்களை எட்டிப்பிடிக்கக் கூடிய வேகத்திலும் முன்னேற வேண்டும் என்பதுதான்.

நாட்டின் வளங்களை உச்சமாகப்பயன் படுத்தி தானும் முன்னேறி, அதன் காரணமாக அழகிய இலங்கைத் தீவு சகல அம்சங்களிலும் தன்னிறைவு அடையக்கூடியவாறான நற்பிரசைகளை மேன் மேலும் உருவாக்குவதில் புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்றும், அதற்கான உந்து சக்தியாக கல்லூரியின் தமிழ் மன்றம் தோள் கொடுத்துதவ வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

கொழும்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய தமிழ் இலக்கிய மன்றத்தினால் வெளியிடப்படும் மலருக்கான ஆசியுரை வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு சமுதாயத்தின் ஏற்றமும் எழுச்சியும் அச்சமுதாயத்தின் சூழலில் உள்ள பாடசாலையின் கல்வி, கலை, கலாசாரத்திலே தங்கியுள்ளது. இத்தகைய ஒரு உன்னதமான இடத்தைப் புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம் பெற்றுள்ளதைக் கண்டு நான் பூரிப்படைகிறேன்.

கொழும்பு வடக்கு பாடசாலைகளில் மிகச்சிறந்த இடத்தை இப்பாடசாலை பெற்றுள்ளதை நான் கண்கூடாகக் கண்டுள்ளேன். மாணவர்களின் திறமை, ஆளுமை, தலைமைத்துவப் பண்பு, வளர்ச்சி என்பன படிப்படியாக முன்னெடுத்துச் செல்லப்பட்டதை என் அனுபவத்தில் உணர்ந்துள்ளேன். இது மட்டுமன்றிப் பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்பினை தமிழ் இலக்கிய மன்றம் வழங்கியுள்ளது என்றால் மிகையாகாது.

அதிபரின் ஆக்க பூர்வமான செயற்பாடுகளும், அவருடன் உற்றுழி உதவும் ஆசிரியர் குழாத்தின் சேவைகளும் என்றும் போற்றுதற்குரியது.

எனவே இம்மலரின் வெளியீட்டு விழா எல்லா வழிகளிலும் சிறப்பாக அமைய தமிழ் அன்னையை வேண்டி வாழ்த்துகிறேன்.

R. Shanmugasarma
Deputy Director of Education
Colombo Zonal Education Office
Vithanage Mawatha,
Colombo 02.

With Compliments from

DEVA

DEVA METAL STORE

DEVA METAL STORE

DEALERS IN SCRAP BRASS
COPPER & ALL KINDS OF METALS.

151/16, PRINCE STREET,
COLOMBO - 11.

TELEPHONE : 541058

அதிபரின் ஆசிச் செய்தி

எமது பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றத்தினரால் வெளியிடப்படும் "பொதிகை" மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். மொழி என்பது சமூகப் பிராணியான மனிதன், சமூகத்துடனான தனது தொடர்பாடலினால் நிறைவடைய உதவும் ஒரு சாதனமாகும். இச்சாதனம் சமூகத்தில் உருவாகி, சமூகத்தில் வளரும் அதே நேரம் சமூகத்தையும் நிறைவு செய்கிறது. இவ்வகையில் மொழி தானும் முழுமையடைந்து சமூகத்தையும் முழுமையடையச் செய்கின்றது. கற்றல், கற்பித்தல் முயற்சியோடு பாடசாலை மட்டத்தில் ஆரம்பமான இச்செயற்பாடு சமூகத்தை அடைய வேண்டும் என்ற நோக்கில் பொதிகை மூலம் இதனை செயற்படுத்துகின்றோம்.

சமூக, கலை, கலாச்சார விழுமியங்களைத் தாங்கி வருவதாக இம்மலர் அமைய வேண்டும், என்று வாழ்த்தும் அதே நேரம், இம்மலர் வெளியீட்டுக்காக அயராது உழைத்த பொறுப்பாசிரியர் திருமதி விமலேஸ்வரனுக்கும், மற்றும் மன்ற ஆசிரியர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும், மாணவத் தலைவிகளுக்கும், மாணவிகள், அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

அதிபர்,
அருட் சகோதரி மேரி கமலா,
புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம்,
கொழும்பு - 13.

With Compliments from

V. R. P. Traders

Old Moor Street,
Colombo - 12.

பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி

பேரன்பிற்குரிய என் இனியவர்களே.....
உங்களுடன் சில நிமிடம்.....

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத் தமிழ் இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியர் என்ற வகையில் "பொதிகையூடு சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். கல்லூரியின் இலக்கிய மன்றம் பையப் பைய நடை பயின்று இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது என்றால், அதற்கு எமது மாணவர்களது அயராத முயற்சியும் அவர்களது ஆளுமையும், அறிவுத்திறனும், தலைமைத்துவபண்புகளுமே காரணம் எனலாம்.

தமிழர்களின் சமுதாய விழுமியங்களை பேணி வளர்ப்பதை முதன் நோக்காகக் கொண்டதே எமது இலக்கிய மன்றமாகும். இன்று இம்மன்றம் சிறந்த ஒரு சமுதாயப் பின்புலத்தை உருவாக்கிவருவது வெள்ளிடைமலையாகும். இதனைக் களமாகக் கொண்டே "பொதிகை" மலர் தோன்றியது. இம்மலர் பூரணத்துவம் பெற என்னுடன் தோளோடு தோள் நின்று உதவிய உயர்தர வகுப்பு மாணவ மணிகள் போற்றுதற்குரியவர்கள். மேலும் எனக்குச் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அதிபருக்கும், ஒத்துழைப்பு நல்கிய மன்ற உறுப்பினர்களுக்கும், அபிவிருத்திச்சபை உறுப்பினர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், குறுகிய காலத்தில் இம் மலரை நிறைவு படுத்தித் தந்த வீனஸ் அச்சகத்தாருக்கும் நயதக்க நன்றிகள் என்றும் உண்டு.

எமது இலக்கிய மன்றத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மேலும் மேலும் வளர வேண்டும் என்று மனமார வாழ்த்துகிறேன்.

திருமதி. இந்திராணி விமலேஸ்வரன்.
தமிழ் மன்றப் பொறுப்பாசிரியர்,
புனித அன்னம்மாள் மகளிர்
மகா வித்தியாலயம்,
கொழும்பு ~ 13.

With Best Compliments from

BRILLIANT TEX

(Southa Market)

Wholesale & Retail Dealers in Textiles



439272
336692

55 A/8, 3rd Cross Street, Colombo - 11.
Sri Lanka.

தலைவியின் பொன் மனதிலிருந்து

என் இனிய தமிழ் நெஞ்சங்களே!

"தங்கமே தமிழுக்கு இல்லை கட்டுப்பாடு
உயர்ச்சி உண்டு முயற்சி உண்டு மெட்டுப் போடு"

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய இலக்கிய மன்றத் தலைவி என்ற முறையில் இந்தப் "பொதிகை" மலருக்கு எனது நல் ஆசிகள் உரித்தாகட்டும்.

முற்காலத்தில் தென்னிந்தியாவில் தமிழ் பிறந்து வளர்ந்த இடம் பொதிகை மலை என்பதால் எமது மலருக்கு "பொதிகை" என்று நாமம் சூட்டியுள்ளோம். எமது தமிழ் இலக்கிய மன்றம் கடந்த காலங்களில் பல சாதனைகளைச் செய்துள்ளது. அவற்றில் சில இம் மலரில் இடம் பெறுகின்றன. இவை எமது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகளிற்கு ஊக்கமளிக்கும் என நம்புகிறேன்.

மேலும் இம் மலருக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த அதிபர் அருட்சகோதரி மேரி கமலா அவர்களிற்கும், பொறுப்பாசிரியை திருமதி. இ. விமலேஸ்வரன் அவர்களிற்கும், வேறு வழிகளில் உதவி புரிந்த அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களிற்கும், ஆசிரியைகளிற்கும், மாணவிகளிற்கும், விளம்பரங்களை தந்து உதவிய வியாபார நிறுவனங்களிற்கும், உரிய காலத்தில் இம் மலரை நூலுருப்பெறச் செய்த அச்சகத்தாருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எமது பாடசாலையில் இலை மறை காயாக இருக்கும் எம் மாணவிகளின் திறமைகளுக்கு இம் மலரும் இனி வரும் மலர்களும் நல் வழியமைக்கும் என்று கூறிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். எமது தமிழ் இலக்கிய மன்றம் எதிர்காலத்திலும் தமிழ்ப் பணியாற்றி எமது தேன் தமிழை உலகெல்லாம் பரப்பும் என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

"பொங்கும் தமிழிற்கு இன்னல் விழைந்தால்,
சங்காரம் நிசம் என்று சங்கே முழங்கு."

கா. ஆனந்தி
தலைவி,
தமிழ் இலக்கிய மன்றம்,
புனித அன்னம்மாள் ம.ம.வி.

With Best Compliments from

MATHURAI STORES

IMPORTERS & DISTRIBUTORS OF TOYS & SUNDRIES

49, China Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 324048 , 525539
Fax : 522171 , 445559

விவாதக் குழுத்தலைவியின் சிந்தனைத்துளிகள்

கல்தோன்றி மண் தோன்ற முன் தோன்றியது எம் முத்தமிழ் இப்படிப்பட்ட பெருமையையுடைய தமிழுக்கு விழா எடுத்துச் சிறப்பிப்பது எம் கடமையாகும். அதே போன்று ஒவ்வொரு வருடமும் தமிழுக்கு விழா எடுத்துச் சிறப்பிக்கும் எமது பாடசாலை இவ் வருடமும் தமிழை சிறப்பிக்கத் துணிந்துள்ளது பொதிகை எனும் மலரின் மூலம் எமது எண்ணத் துளிகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவும் தமிழ் மேல் நாம் கொண்ட காதலைப் பிரதிபலிக்கவும் சிறந்த சான்றாக இம்மலர் அமையும் என எதிர்பார்க்கிறேன்.

மற்றும் இந்நூலைச் சிறந்த முறையில் வெளியிட எமக்கு உதவி புரிந்த எமது பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி கமலா அவர்கட்கும் மற்றும் எமக்கு எல்லா வகையிலும் தமது ஒத்துழைப்பை நல்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூலை வெளியிட எமக்குத் தமது உடல் ரீதியாகவும் பண ரீதியாகவும் உதவி புரிந்து எமக்குத் தோள் கொடுத்துதவிய எமது பாடசாலை ஆசிரியர்களுக்கும் என் நன்றி உரித்தாகட்டும். மற்றும் இந்நூலை வெளியிடுவதில் முழு மூச்சாக நின்று அல்லும் பகலும் தனது கடமைகளின் மத்தியில் இந்நூலைச் சிறப்பாக வெளியிட உதவிய எமது மன்றத்தின் பொறுப்பாசிரியர் திருமதி இந்திராணி விமலேஸ்வரன் அவர்கட்கும் எனது இதயம் கனிந்த நன்றி உரித்தாகட்டும். மற்றும் எமக்கு விளம்பரங்கள் கொடுத்துதவிய அனைத்து வியாபார ஸ்தாபனங்களிற்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

இம் மலரில் குறைகள் ஏற்படினும் அவற்றை நீங்கள் நிறைகளாக ஏற்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

"பாரெங்கும் தமிழ் மணம் வீசுக"

ஆ. மரியா லோஷினி
விவாதக் குழுத்தலைவி
புனித அன்னம்மாள் ம.ம.வி.

With Compliments from



Dealers in all kind off textiles.

No. 140, Main Street, Colombo -11.
Phone : 320127, 447698

இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து.....

"தமிழுக்கும் அமுதென்று பேர்! அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!"

எனக் கூறியுள்ளார் கவிஞர் பாரதிதாசன். இந்தத் தமிழ் அமுதுக்கு வருடந்தோறும் விழா எடுத்து போற்றும் எம் பாடசாலையானது இவ்வருடமும் போற்றுகின்றது. வருடந்தோறும் போற்றி மகிழும் நாம் இவ்வாண்டு பல பூவிதழ் எடுத்து மலராக்கி தமிழன்னைக்கு சமர்ப்பித்து மகிழக்கண்டதோடு உங்கள் மடிகளிலும் தவழக்கண்டோம்.

அதன்படி செயற்பட்டு பல சிரமங்களுக்கு மத்தியில் "பொதிகை" மலரை உருவாக்க எம் மன்றத்திற்கு ஆக்கங்களும் ஆசிச் செய்திகளும் வழங்கி உதவிய எம் பெரியோருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் எம்மைப் பூமிக்கு ஒரு மலராக ஈன்றெடுத்த அன்னையருக்கும், பல வழிகள் காட்டி அறிவூட்டி வளர்த்தெடுத்த அதிபர், ஆசிரியர்கள், பெரியோர்கள் ஆகியோருக்கும் பண்புடனும் பாசத்துடனும் பழகித்தோள் கொடுத்த எம் சக மாணவத் தோழர்களுக்கும் மற்றும் விளம்பரங்கள் கொடுத்துதவிய வியாபார ஸ்தாபனங்களிற்கும் எமதூர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலரில் ஏதேனும் குறை இருப்பின் அதனைக் குறையெனக் கொள்ளாது நிறையாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

"தாய்மை தருவது தமிழ் ~ கல்வி
தலங்கச் செய்வது தமிழ்!"

இதழாசிரியர்கள்
ந. வேர்ஜின் நிரஞ்சலா
ப. சுபாஷினி
ஆ. மைதிலி
புனித அன்னம்மாள் ம.ம.வி

With Compliments from

MISS T. AATHITHYAA.

In memory of
her late grand father
former Senator T. Neethiraja J.P, M.M.C.
Industrialist and founder chairman of
Greenlands Hotels Private Ltd,
Colombo -04.

No. 89 New Chetty Street,
Colombo 13.

செயலாளரின் எண்ணத்துளிகள்.....

"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா"

என்ற பாரதியின் வாக்குப்படி தமிழன் என்று சொல்லவே அஞ்சும் இக் காலப்பகுதியில் ஆக்கங்கள் சேர்த்து அதனை புத்தகமாகக் தொகுக்க நாம் பட்ட கஷ்டம் அளப்பரியது. இந்த முயற்சியால் இதோ உங்கள் மடியில் தவழ்கிறது "பொதிகை".

மலர்கள் அழகு நிறைந்ததாக காணப்பட மரங்களும் அதற்குரிய உழைப்பும் அவசியம். அதே போல் இப் பொதிகை அழகு பெற மலைகளாகத் தாங்கும் எம் அதிபர், ஆசிரியர்களின் தன்மையும் எம் மாணவர்களின் உழைப்பும் முழுமூச்சாக நின்று பொதிகையை உயர்த்த ஊக்கம் அளித்தது.

செயலாளர் என்ற ரீதியில் முதலில் இறைவனுக்கும் என்னை இந்த பூமிக்கு ஈன்றெடுத்து செயலாளராக செயல்பட ஆக்கி கொடுத்த என் தாய்க்கும், தந்தைக்கும் எம்மை இந்த அளவு உயர்த்த காரணமாயிருந்த அதிபர், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பண உதவி அளித்த அனைவருக்கும் விளம்பர உதவி அளித்தவர்களுக்கம், இன்னும் குறிப்பிட மறந்தவர்களுக்கும், குறிப்பிட வேண்டியவர்களுக்கும் புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய தமிழ் இலக்கிய மன்றச் செயலாளர் என்ற ரீதியில் நன்றிகள் பல கோடி.

"வீழ்வது நாமானாலும்
வாழ்வது தமிழாகட்டும்"

ரா. தினேஷ்னி
செயலாளர்
புனித அன்னம்மாள்
ம.ம.வி.

With Best Compliments From

Scan Imports Ltd.

36, D. R. Wijewardena Mawatha,
Colombo 10.

பொருளாளரின் உள்ளக் கிடக்கையின் ஓசை

சங்கு முழங்குது! சங்கு முழங்குது.
தமிழ் முழங்குது கேள் ~ புதுமைத்
தமிழ் முழங்குது கேள்

பொதிகை மலருக்கு மணிமுடி சூட்டும் தருணத்தில் தமிழ் அன்னையின் பாதச்சுவடுகளை நோக்கி விரைகிறோம்.

தித்திக்கும் தேன் மதுர தமிழ் ஓசை உலகெங்கும் நீர் ஊற்றுகளாக பாயந்து கொண்டிருக்கும். இவ்வேளையில், புனித அன்னம்மாள் பாடசாலையில் தமிழ் இலக்கிய மன்றம் பல பெரு விழாக்கண்டு இன்னுமொரு அத்தியாயத்தில் அடியெடுத்து வைப்பது தமிழ் அன்னைக்கு செய்யும் மரியாதையாகும். இது வரை காலமும் எம் உள்ளங்களில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்த "பொதிகை" உங்கள் கைகளில் தவழ்வதைக்கண்டு பூரிப்படையும் இவ்வேளையில் :~

இப் "பொதிகையை" வைரம் போன்றுபிரகாசிக்க முன்வந்து ஒத்துழைத்த வர்களுக்கும், முத்தமிழ் அன்னையை மலர் கொண்டு பூசித்த விளம்பரதாரர்களுக்கும், தமிழ்த் தாயின் மழலைகளாகிய எங்களுக்கு தமிழ்த்தாயாக நின்று உதவிக்கரம் அளித்த அதிபர் ஆசிரியர்களுக்கும், கலைப்பெட்டகங்களை பெற்றெடுத்து அவர்களின் கலைத்திறமைகளை வளர்க்க அரங்கமாக இருந்த பெற்றோர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகள்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞானத்தினால் மானப்பெரிது."

டொறின் அமுதா றொபெட்
பொருளாளர்
புனித அன்னம்மாள் ம.ம.வி.

With The Best Compliments From

NOVELTYS ART SUPPLIES CO.

NOVELTYS ART SUPPLIES COMPANY

Apple®
Artist Brushes

Paints & Materials
for Arts & Grafix

25 Palmyrah Mw., Colpitty, Colombo 3. Tel: 581 262
286 1/1 Gall Road, Colpitty, Colombo 3. Tel: 337 518
Fax : (94 1) 430 969

With Compliments from

விஸ்ரா விரைவான கலர் புகைப்படச் சேவை

இல. 22-1/12, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு 13.
ஐந்துலாம்பு சந்தியில் ஓர் புகைப்படக் களஞ்சியம்
30நிமிடங்களில் உங்கள் புகைப்படச்சுருளை படமாக்கிய பெற்றுக் கொள்ள புறக்கோட்டையில் ஓர் இணையற்ற நிறுவனம்.

Vista உங்களுக்குத் தேவையான சகல அளவுகளிலும் உங்கள் புகைப்படங்களை நவீன முறையில் அமைந்த தொழில்நுட்பத் திறன் கொண்ட கணணி இயந்திலம் மூலம் படமாக்கிப் பெற்றுக்கொள்ள இன்றைய ஈடு இணையற்ற முன்னோடி நிறுவனம்.

Vista

கலர், கறுப்பு வெள்ளை புகைப்படங்களை குறுகிய நேரத்தில் எல்லா அளவுகளிலும் படம் பிடித்துப்பெற்றுக்கொள்ளலாம்.

Vista INSTANT PHOTO (Passport, Visa, Etc..)

ஒரு சில நிமிடத்தில் புகைப்படத்தை உடன் பெற்றுக் கொள்ளலாம். கடவுச்சீட்டு அளவுகளின் அனைத்து தேவைகளுக்கும் உபயோகிக்கக் கூடியது. (விடுமுறை நாட்களில் விசேட சேவை)

"நிழல் படங்களின் நிலையான நினைவுக்கு"

Vista

STUDIO
QUICK PHOTOS
& COLOUR LAB

No. 22,1/12, First Floor, Wolfendhal Street, Colombo 13.
Tel : 338226 Fax : 337309

With The Best Compliments From

Sharanya

JEWELLERY.

NO. 66 A/1, GALLE ROAD,
DEHIWALA
T. P. 732 636



தமிழ் இலக்கிய மன்ற ஆசிரியர் குழாம்

திருமதி இந்திராணி விமலேஸ்வரன்

திருமதி சாந்தினி கமலநாதன்

திருமதி சூபினி ரொஹான்

செல்வி கந்தமூர்த்தி கலாரமணி

திருமதி தஸ்நெவிஸ் பீற்றர்

செல்வி அன்ரோனியா சந்தியாபிள்ளை

திருமதி பற்றீஷியா சுதர்ஷன்

தமிழ் இலக்கிய மன்ற உறுப்பினர்கள்

தலைவர்:

ஆனந்தி கார்த்திகேசு

உப தலைவர்:

தேவிகா ராசையா

செயலாளர்:

தினேஷ்னி ராமச்சந்தரன்

உப செயலாளர்:

யசோதா பாலசுப்பிரமணியம்

பொருளாளர்:

டொறின் அமுதா ஜேசுதாசன்

உப பொருளாளர்:

திருவளர்ச்செல்வி அருணாச்சலம்

பத்திராதிபர்:

வேர்ஜின் நிரஞ்சலா நடராஜ்

உப பத்திராதிபர்கள்:

சுபாஷினி பர்னாந்து

மைதிலி ஆனந்தன்

செயற்குழு:

மரியா லோஷினி ஆனந்தகுமார்

சிரோசினி ஞானானந்தம்

லக்மினி ஸ்டீபன்

ஜீடித் இமானுவேல்

மேரி மில்ரட் தோமஸ்

அபர்ணா ஸ்ரீகாந்தன்

உதயசாந்தி இராஜேந்திரன்

ஜெயதர்சினி கனகரத்தினம்

வியாகுலம் டெறன்சி பர்னாந்து

ரோஸ்மேரி ஜோன் பீற்றர்

தமிழ் மன்ற உறுப்பினர்களும் ஆசிரியர்களும்

இடமிருந்து வலமாக ஆசிரியர்கள்

திருமதி சு. பற்றீசியா, திருமதி த. பீற்றர், திருமதி இ.விமலேஸ்வரன் (மன்றப் பொறுப்பாசிரியர்), அதிபர் அருட்சகோதரி மேரிகமலா, செல்வி அ. சந்தியாப்பிள்ளை, செல்வி க. கலாரமணி, திருமதி சா.கமலநாதன் (செயலாளர்).

இடமிருந்து வலமாக மாணவர்கள்

செல்வி கா.ஆனந்தி (தலைவி), ஆ.மைதிலி (உபபத்திராதிபர்), செல்வி ரா. தேவிகா (உப தலைவி), செல்வி ந.வேர்ஜின் நிரஞ்சலா (பத்திராதிபர்), செல்வி ப.சுபாஷினி (உப பத்திராதிபர்), செல்வி ரா.தினேஷினி (செயலாளர்), செல்வி அ.திருவளர்ச்செல்வி (உப பொருளாளர்), செல்வி ஜே.டொறின் அமுதா (பொருளாளர்), செல்வி பா.யசோதா (உப செயலாளர்).

நிகழ்ச்சி நிரல்

1. தமிழ்த்தாய் வாழ்த்து
2. மங்கள விளக்கேற்றல்
3. இலக்கிய மன்றக் கீதம்
4. வரவேற்புரை
5. புஸ்பாஞ்சலி ~ நடனம்
6. மலர் வெளியீடு
7. பேச்சு ~ மூன்றாம் பிரிவு
8. பாவோதல் ~ இரண்டாம் பிரிவு
9. வில்லுப் பாட்டு
10. இசை ~ குழு
11. நாட்டுக்கூத்து
12. நாடகம்
13. பிரதம விருந்தினர் உரை
14. நாட்டார் பாடல்
15. சிறப்பு விருந்தினர் உரை
16. நடனம்
17. வீணை இசை
18. குழு நடனம்
19. வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை
20. நடனம்
21. பரிசளிப்பு வைபவம்
22. நன்றியுரை

With Best Compliments from

CAPITOL OVERSEAS COURIER SERVICE (PVT)LTD

6 MAHBOOBA MANZIL
66, Vivekananda Hill,
Colombo 13.
Tel : 448668 / 347003

விவாதக் குழு உறுப்பினர்களும், ஆசிரியர்களும்

இடமிருந்து வலமாக ஆசிரியர்கள்

திருமதி த. பீற்றர், திருமதி இ.விமலேஸ்வரன் (மன்றப்பொறுப்பாசிரியர்), அதிபர் அருட்சகோதரி மேரிகமலா, செல்வி அ. சந்தியாப்பிள்ளை, திருமதி சா.கமலநாதன் (செயலாளர்).

இடமிருந்து வலமாக மாணவர்கள்

செல்வி ஆ. மரியாலோஷினி (தலைவி), செல்வி ரா. தேவிகா, செல்வி ந. வேர்ஜின் நிரஞ்சலா, செல்வி ஞா. சிரோஷினி, செல்வி ரா. தினேஷினி, செல்வி எஸ். லக்மினி, செல்வி ஜே.டொறின் அமுதா, செல்வி ச. சுலேக்கா.

97/98 விவாதக்குழு உறுப்பினர்கள்

1. தேன் மொழி மரியசிலுவை
2. ஜெயசுதா ப்ரிதிவிராஜ்
3. மரியா லோஷினி ஆனந்தகுமார்
4. தினேஷ்னி இராமச்சந்திரன்
5. குயின் மேரி ஜெயசுதாசன்
6. வேர்ஜின் நிரஞ்சலா நடராஜா
7. சிரோஷினி ஞானானந்தம்

98/99 விவாதக்குழு உறுப்பினர்கள்

1. மரியா லோஷினி ஆனந்தகுமார்
2. வேர்ஜின் நிரஞ்சலா நடராஜ்
3. சிரோஷினி ஞானானந்தம்
4. தினேஷ்னி இராமச்சந்திரன்
5. தேவிகா ராசையா
6. டொரின் அமுதா ஜேசுதாசன்
7. சுலேக்கா சண்முகநாதன்
8. லக்மினி ஸ்டீபன்

97/98 விவாதக்குழு சாதனைகள்

1. 97/98க்கான இசிபதன கல்லூரியினால் நடாத்தப்பட்ட விவாதப் போட்டியில் வெற்றிக் கேடயத்தை நமதாக்கிக் கொண்டோம். இதில் சகலவற்றிலும் சிறந்த விவாதியாக தினேஷ்னி இராமச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

98/99 விவாதக்குழு சாதனைகள்

1. 98/99க்கான உவெஸ்லிக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட விவாதப்போட்டியில் வெற்றிக் கேடயத்தை நமதாக்கிக் கொண்டோம்.

2. 98/99 காலப்பகுதியில் எமது பாடசாலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கல்விச்சேவை நடாத்திய விவாதப் போட்டிகளில் பிரபல்யமான பாடசாலைகளுடன் போட்டியிட்டுப் பல தடவைகள் வெற்றியீட்டியுள்ளது.

98ம் ஆண்டுக்கான தமிழ்த் தினப் போட்டி வலயம் முடிவுகள்

மேற்பிரிவு கட்டுரை

முதலாம் இடம் ~ அபர்ணா ஸ்ரீகாந்தன்

பேச்சு

முதலாம் பிரிவு

1ம் இடம் ~ அஷ்வினியா ரத்ன செனவிரட்ண

பேச்சு

இரண்டாம் பிரிவு

2ம் இடம் ~ ஜோஜினி ஜோர்ஜ்

பேச்சு

ஐந்தாம் பிரிவு

2ம் இடம ~ குயின் மேரி ஜேசுதாசன்

வில்லுப்பாட்டு

3ம் இடம்

பங்கு பற்றிய மாணவர்கள்

1. ப. டெப்னி ஜீலியன்
2. ப. ஜெசிந்தா அன்டனட்
3. செ. இயலரசி
4. செ. இசையரசி
5. சி. இந்திராதேவி
6. அ. கிருஷாந்தி
7. சக்திகலா

புனித ஆசிர்வாதப்பர் கல்லூரியினால் நடாத்தப்பட்ட
98/99 ம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டப்
பாடசாலைகளுக்கிடையிலான
பேச்சுப் போட்டி முடிவுகள்

நான்காம் பிரிவு

1ம் இடம் ~ சிவாஜினி சிவபாலன்

மூன்றாம் பிரிவு

1ம் இடம் ~ ஜோர்ஜினி ஜோர்ஜ்

றோயல் கல்லூரியினால் நடாத்தப்பட்ட 98ம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டப் பாடசாலைகளுக்கான தமிழ்த்திறன் போட்டி முடிவுகள்

கட்டுரை

மேற்பிரிவு
1ம்இ இடம் அபர்ணா ஸ்ரீகாந்தன்
2ம் இடம் சர்மிளா தாசன்

பேச்சு

மேற்பிரிவு
2ம் இடம் மரியா லோஷினி ஆனந்தகுமார்
மத்திய பிரிவு
2ம் இடம் லக்மினி ஸடீபன்

பொது அறிவுப் போட்டி சிறப்புப் பரிசு

உதயசாந்தி ராஜேந்திரன்

97ம் ஆண்டுக்கான றோயல் கல்லூரியினால் நடாத்தப்பட்ட பாடசாலை மட்டங்களுக்கிடையிலான நாடகப் போட்டியில் திரு. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட எந்தையும் தாயும் என்ற நாடகம் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது.

இதில் பங்கு பற்றிய மாணவர்கள்

பெரியையய்யா - மேரி எடல்குயின் ஜேசுதாசன்
ஐயாத்துரை - தினேஷ்னி இராமச்சந்திரன்
கண்ணன் - வேர்ஜின் நிரஞ்சலா நடராஜா
வசந்தி - மேரி ஜெனிட்டா பீற்றர்
செல்வரத்தினம் - ஜெயசுதா ப்ரிதிவராஜ்
மகேஸ்வரி - ஆனந்தி கார்த்திகேசு

98ம் ஆண்டு றோயல் கல்லூரியினால் நடாத்தப்பட்ட பாடசாலை மட்டங்களுக்கிடையிலான நாடகப் போட்டியில் திரு. பாலகுமார் அவர்களால் எழுதப்பட்ட ''வானம் நமக்கொரு வரையறையா?'' என்ற நாடகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இதில் பங்கு பற்றிய மாணவர்கள்

யாகக்குழு	:	வேர்ஜின் நிரஞ்சலா நடராஜா இயலரசி செல்வராஜா இசையரசி செல்வராஜா
பாகவதர் குழு	:	மரியாலோஷினி ஆனந்தகுமார் தினேஷ்னி இராமச்சந்திரன் யசோதா பாலசுப்பிரமணியம்
கொடும்பாவி குழு:		ஜெயசுதா ப்ரிதிவராஜ் ஆனந்தி கார்த்திகேசு சிரோஷினி ஞானானந்தம்
விளையாட்டுக்குழு:		ஆஷாபானு பசீர் பானுமுகி நவாநந்தகுமார்
பெரியவர்	:	சிவாஜினி சிவபாலன்

இலங்கைக் குடும்பத்திட்ட சங்கத்தினால் கொழும்பு மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட "எயிட்ஸ்" பற்றிய கட்டுரைப்போட்டியில் எமது பாடசாலை சார்பில் பரிசு பெற்ற மாணவர்கள்.

செல்வி அபர்ணா ஸ்ரீகாந்தன் (இரண்டாமிடம்)
வெள்ளிப்பதக்கமும்
3500ரூபா சன்மானம்

ஆறுதல் பரிசு பெற்றோர்

1. மரிலோஜினி ஆனந்தகுமார்
2. உதயசாந்தி ராஜரட்ணம்
3. யசோதா பாலசுப்ரமணியம்

99ம் ஆண்டுக்கான தமிழ்த்தின போட்டி வலய மட்ட முடிவுகள்.

மேற் பிரிவு கட்டுரை
முதலாம் இடம் ~ ஆனந்தி கார்த்திகேசு

மேற் பிரிவு குறுநாடகம்
இரண்டாம் இடம் ~ அபர்ணா ஹரிகாந்தன்

மேற் பிரிவு பேச்சு
மூன்றாம் இடம் ~ மரியா லோஷினி ஆனந்தகுமார்

1ம் பிரிவு வாசிப்பு
மூன்றாம் இடம் ~ அமல் அஷ்வினியா ரட்ண செனவிரட்ண

திறந்த போட்டி
வில்லுப் பாட்டு
மூன்றாம் இடம்

<u>பங்கு பற்றியோர்</u>
ஆனந்தி கார்த்திகேசு
டொறின் அமுதா யேசுதாசன்
வேர்ஜின் நிரஞ்சலா நடராஜா
சொபியா சுபலோஜினி மரியதாஸ்
தேவிகா இராசையா
சுபாஷினி பர்னாந்து
ரேணு நிரஞ்சலி சேவியர்.

With Best Compliments

From

ஆண்டு - 10C மாணவிகள்

W. எவோன் - 9C

J. ஜெயசீலி - 9C

T. சுபாசினி - 9C

R. தேவிகா - A/L2000

S. மீரா - 10A

M. நிலாஜினி - 8A

P. திவ்யா - 8B

J. திவ்யா - 6A

X. ஜஸ்டினா - 6A

B. கீர்த்திகா - 9A

A. ஜீவொளி - 8B

S. சகிதா - A/L2000

J ஜெயசிந்தா - A/L/2000

M. சிந்துஜா - 8B

S. பிரியதர்சினி - 8B

T. பவித்ரா - 8B

R. வளர்மதி - 10B

S. பத்மினி - A/L2000

A. ஸ்டீபன் - 6B

T. நுலாணி - 11A

M. அனோமா - 6A

E. யுடித் - A/L2000

R. அனுஷா - 9A

T. ரின்சி - A/L1999

K தர்மினி - A/L2000

M. சொபியா - A/L2000

B. அனுஷா - 8B

S. துளசிக்கா - 6C

S. தொளரி - A/L99

K. டயானாடயாழினி - 9A

P. நியோமி - 9A

J. காயத்ரி - A/L1999

S. ஜோதினி - A/L1999.

குழந்தாய் நீயும் கதை கேளாய்

ஆசிரியர் : பாடம் கற்றுத் தருவார்
படங்கள் வரையச் சொல்வார்

பாட்டும் கதையும் சொல்வார்
பண்பை நெஞ்சிற் பெய்வார்

பாலா நீ சொல் யார் இவர் ?
பாமா நீ சொல் எவரவர் ?

படி : கற்றவர் சொல்லி வைத்த படி ~ நீ
கடமையை ஒழுங்காய்ச் செய்து முடி

அன்னையும் தந்தையும் சொன்னபடி ~ நீ
அன்புடன் வாழ்ந்தாய் சிறந்த படி

எப்படி எதனால் என்ற படி ~ நீ
எதையும் செய்வாய் தெளிந்த படி

துன்பம் வந்தால் நகைத்த படி ~ நீ
தொடர்ந்தே செய்வாய் துணிந்த படி

உண்மையும் உறுதியும் சொன்ன படி நீ
உயர்ந்திட வேண்டும் நல்ல படி.

இன்றே கற்பாய் :

கற்றவர் வாழ்வில் சிறந்திடுவார்
கல்லார் நாளும் இடர்படுவார்.

அறியும் அறிவால் பொருட் செல்வம்
அழியாதென்றும் கலைச் செல்வம்.

இளமையில் கற்றல் பதிந்திடுமே
என்றும் மனதில் நிலைத்திடுமே.

பின்னர் வருந்திப் பலனில்லை
இன்றே கற்பார் உயர்ந்திடுவார்.

வெற்றி பெறுவீர்:

அழுது கொண்டே இருப்பவர்
அடைவதில்லை இன்பமே

அஞ்சி நிதம் அரள்பவர்
அடைவதில்லை வெற்றியே.

தூங்கித் தூங்கித் துவள்பவர்
சுடர்வதில்லை என்றுமே.

சிரித்து நெஞ்கில் திறனுடன்
செயல்கள் நாளும் செய்பவர்

வெற்றி பெற்றுச் சிறப்புடன்
விளங்கி வாழ்வார் உறுதியே

வாழ்ந்திடுவோம் :

ஆயகலைகள் அறிந்திடுவோம்
அறிவு நூல்கள் அளித்திடுவோம்
தூய எண்ணம் கொண்டடிடுவோம்
துடிப்பாய் பண்கள் ஆற்றிடுவோம்

கற்றவை நினைவில் பதித்திடுவோம்
கல்லார் நட்பை ஒதுக்கிடுவோம்
பெற்றோர் மகிழ உயர்ந்திடுவோம்
பெருமையோடு வாழ்ந்திடுவோம்.

"இந்தி"

வான் வெளியில் சிதைந்து போன வின் மீன்கள்

" வாசுகி என்னோட சாப்பாடு ரெடியா?"
"கொஞ்சம் நில்லுங்க ரூபிக்கு சாப்பாட்டை எடுத்து வச்சிட்டு வாரன்" .....என்று கூறி ரூபியை பாடசாலைக்குச் செல்ல ஆயத்தப்படுத்திவிட்டு தன் கணவன் பக்கம் திரும்புகிறாள் வாசுகி....
"என்னங்க இந்தாங்க இன்னும் ரெண்டு இட்லி சாப்பிடுங்க."
"போதும் போதும் இதுக்கு மேலே என்னால சாப்பிட முடியாது."
வாசலில் ஓன் சத்தம் கேட்டும் ரூபியோ நிதானமாக தேவாரம் பாடிக் கொண்டிருந்தாள்.

"ரூபிக் குட்டி சீக்கிரம் வாகனம் வந்து காத்துக்கிடக்கிறது." என்று தீபன் கூற, ரூபியும் தேவாரத்தை முடித்துவிட்டு தன் தாய், தந்தை,பாட்டியின் கால்களில் விழுந்து கும்பிட்டு விட்டு "மாமா டாட்டா" என்று கூறி பாடசாலை வாகனத்தை நோக்கி ஓடினாள்.

இத்தகைய பரபரப்பான நிகழ்ச்சி கொழும்பு மாவட்டத்தில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் அழகான மாடி வீடுகளில் ஒரு பெரிய வரவேற்பறையுட்டன் ஐந்து தனி அறைகள், ஒரு சமயலறை, ஒரு சாப்பாட்டறை என அனைத்து அம்சங்களும் அளவாக பொருந்திய அருமையான வீடொன்றில் தான் நடந்து கொண்டிருக்கிறது.

சமுதாயத்தில் நல்லதொரு அந்தஸ்து பெற்ற குடும்பமாகிய வாசுகி, தீபன் தம்பதியினரின் ஆசைக்கும், ஆஸ்திக்கும் என்று ஒரே ஒரு பெண் குழந்தை. அவள் பெயர் ரூபி. மேலும் குடும்பத்தினரின் அங்கத்தவர்களாக தீபனின் அம்மா கமலாம்பாள், வாசுகியின் தம்பி இருபத்திரெண்டு வயது நிரம்பிய வசந்த். ஆகியோரே இக்குடும்பத்தின் அங்கத்தவர்களாவர்.

"அக்கா இன்றைக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருக்கு. அதனால வர நேரமாகும்."
"சரி காசு ஏதாச்சும் வேணுமா? "வேண்டாங்க்கா"
மகன் ரவி ஸ்பெஷல் கிளாஸ், கிளாஸ் எண்டு உடம்பைக் கெடுத்துக்கிறாதேப்பா" "இல்ல மாமி இந்த மாசம் மட்டும் தான் ஸ்பெஷல் கிளாஸ் இருக்கும் அதுக்கப்புறம் இல்லை" "சரிடாப்பா கவனமா போய் படிச்சிட்டு வா"
"அத்தான் நீங்க இன்னும் ரெடியாகல்லையா" என்று வசந்த் கூற
"இல்லை நீ போய் ஸ்கூட்டரை ரெடி பண்ணு நான் சிக்கிரம் வந்திடுறன்" என்று தீபன் கூறினான்.
"வாசுகி இங்கே வச்ச சப்பாத்து எங்கே?" என்று கூறிய தீபனை, ஏன்டா அவளோட உயிர வாங்கிறே? இரு நான் எடுத்துத்தாறேன்" என கமலாம்பாள் இடைமறித்தாள்.

பின்னர் தீபன் அவசர அவசரமாக உடுத்தி விட்டு "டார்லிங் போயிட்டு வாறன்", "அம்மா வாசுகிய கவனமா பார்த்துக் கோங்க" "சரிதான் போடா" என்று கூறிய கமலாம்பாள் கொல் என்று சிரிக்க வாசுகியும், தீபனும் அவளுடன் செர்ந்து சிரித்தனர். பின்பு தீபன் இவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டான் .....

தீபன் ஒரு உயர்தர தனியார் கம்பனி ஒன்றில் பணிபுரிபவன். அவன் தோற்றத்தில் மட்டுமல்ல நேர்மை, உண்மை, கடமை என்று எதிலுமே தவறாதவன். தீபனின் கம்பனியில் அவனைக் கண்டு பொறாமைப்படாதவர்களே கிடையாது.

"இவனுடைய நேர்மையும் கடமையும் எத்தனை நாளுக்குத்தான்? பார்த்து விடுவோமே" என்று தனது நண்பர்கள் கூடிக் கூடி கதைப்பது தீபனுக்குத் தெரிந்ததே. இருப்பினும் அவன் அதை சட்டை செய்வதில்லை. இவன் அனைவருடனும் அளவாகப் பழகும் சுபாவம் கொண்டவன். அனாவசியமாக எவருடனும் கதைக்கச் செல்ல மாட்டான். இதனாலோ என்னவோ தீபனின் கம்பனி முதலாளிக்கு இவனை மிகவும் பிடித்திருந்தது.

வாசுகி ஒரு அழகான பண்பான நல்ல குடும்பத்தில் பிறந்த பெண் அன்பான கணவன், கொடுமைப்படுத்தாத மாமியார், ஆசைக்கு ஒரு பிள்ளை, எந்த வித சண்டை சச்சரவும் செய்யாத தம்பி என்று ஒரு கறையுமின்றி எப்பொழுதும் மனதில் மகிழ்ச்சியோடு இருப்பவள். காலை விடிந்து விட்டால் எப்பொழுது இரவு வந்ததென்று கூட தெரியாத அளவிற்கு தன் கணவன், பிள்ளை என்று கடும்ப வேலை செய்வதிலே தன் நேரத்தைக்கடத்தி வருவாள். இவள் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இயங்கிக் கொண்டிருப்பாள். சுருங்கக்கூறின் நல்லதொரு குடும்பத் தலைவி என்றே கூற வேண்டும்.

கமலாம்பாள் கணவனை இழந்தவள் இருப்பினும் வயதான காலத்திலும் இளமையான தோற்றமுடையவள். அதேபோல் எப்பொழுதும் நல்ல விலை உயர்ந்த ஆடையுடனும், அணிகலன்களுடனுமே காட்சி அளிப்பாள். இவள் தன் ஒரே மகனுக்கு திருமணத்தை நல்லபடியாக நடத்தி முடித்துவிட்ட நிம்மதியிலும் தான் எதிர்பார்த்ததை விட குடும்பத்துடன் ஒத்துப்போகக் கூடிய மருமகளை அடைந்த மகிழ்ச்சியிலும் தன் பேத்தியின் சுட்டித்தனங்களை இரசித்துக்கொண்டும் "எனி நிம்மதியாக போய் சேரலாம்" என்ற எண்ணத்துடன் தனது இறுதி நாட்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இருதய நோயாளி.

ரூபி இவள் தன் தாய்தந்தையை போலவே சுறுசுறுப்பானவள். எப்பொழுதும் வகுப்பில் முதலாவதாகத்தான் வருவாள். படிப்பில் மாத்திரமல்ல விளையாட்டிலும் ஆர்வம் உடையவள் ஆறு வயது நிரம்பிய இவள் தனது ஆற்றலினாலும், சுட்டித்தனத்தினாலும் எல்லோரையும் கவர்ந்தவள். வசந்த், இவன் வாசுகியின் ஒரே தம்பி தாய்தந்தை இறந்த பின்னர் அக்காவின் வீட்டில் தஞ்சம் புகுந்தவன் இவன். இவன் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் துறையில் பயில்பவன். இவன் படிப்பில் மாத்திரமல்ல நன்பர்களுடன் அரட்டை அடிப்பதிலும் கெட்டிக்காரன். வீட்டில் நல்ல பிள்ளை என்ற பெயர் வாங்கிக் கொண்டிருப்பவன். ....

இவ்வாறு இந்த தீபனின் குடும்பம் சில வருடங்கள் மகிழ்விலும் மன அமைதியிலும் கழிந்தது. இப்படியாக வாழ்ந்து கொண்டிருக்கும் இக்குடும்பத்தில் புயல் வீசியது போல் ஒரு சம்பவம் நடந்தது. அப் புயலோ வசந்தின் ரூபத்திலேயே அக்குடும்பத்தினுள் நுழைந்தது.

வசந்த் சந்தர்ப்பவசத்தால் போதை பழக்கத்திற்கு உள்ளானான். இதை அவனது வீட்டார் எவரும் அறிந்திருக்கவில்லை. வசந்த் போதை தரக்கூடிய வில்லைகளையே தனது பழக்கத்திற்கு

உட்படுத்திக் கொண்டான். இவனது நிலமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே சென்றது. இறுதியில் இவன் போதை வில்லைகளை தனது வீட்டில் வைத்தே யாருக்கும் தெரியாமல் உண்ணத் தொடங்கினான். ஆனால் அவன் போதை வில்லைகளை தனது அறையில் வைத்து சாப்பிடுவதை சூபி ஒரு நாள் பார்த்து விட்டாள். அதனைக் கண்ட வசந்தோ

"சூபி குட்டி என்ன கண்ணே பார்கிறே? இங்கே வா"

"இல்ல வேணாம் மாமா" என்று சூபி கூற "இல்ல சபாப்பிடு சாப்பிடு இது மிட்டாய் நல்லா இருக்கும். சாப்பிட்டு பாரு" என்று சூபிக்கும் போதை வில்லைகளைக் கொடுத்தான் வசந்த், சூபியும் வாங்கி உண்டாள். "மாமா நல்லாயிருக்கு. இன்னும் வேணும்." "இந்தா சாப்பிடு" என்று கூறிய வசந்த் சுய நினைவிழந்து தான் செய்வது என்னவென்றே அறியாது, அந்தப் பிஞ்சு கைகளில் போதை வில்லைகளை வைத்தான்.

இதனைத் தொடர்ந்து, சூபியும் வசந்த் அறையில் இல்லாத சந்தர்பங்களில் அடிக்கடி போதை வில்லைகளை எடுத்து உண்ணத்தொடங்கினாள். போதை வில்லைகளைப் பற்றி எதுவுமே அறியாத சூபியோ தன் தந்தையிடம் "அப்பா மாமா சாப்பிடும் மிட்டாய் எனக்குவேணும்." என அடிக்கடி தீபனை நச்சரிக்கத் தொடங்கினாள். ஆனால் தீபனோ அதை ஒரு பொருட்டாக எண்ணவில்லை.

நாட்கள் செல்லச் செல்லத் தான் வசந்த்தின் சுயரூபம் வீட்டில் உள்ளோருக்குத் தெரியவந்தது. ஒரு நாள் வசந்த்

"அக்கா எனக்கு அவசரமா காசு கொஞ்சம் வேணும்"

"என்னத்துக்கு இப்ப அவ்வளவு அவசரம்."

"இல்ல அக்கா ப்ளீஸ் எனக்கு இப்ப காசு வேணும் இல்லைனா இந்த ஊசியைக் குத்திக் கொள்ளுவேன். ப்ளீஸ் அக்கா காசு தாங்க...."

கத்திக்கொண்டே மயங்கித் தரையிலே விழுந்தான் ....

வசந்த் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டான். அங்கு மருத்துவரின் பரிசோதனையில் பின்பு தான் வசந்த் போதை பழக்கத்திற்கு அடிமையாகியபோது வாசுகியின் குடும்பத்திற்கு தெரிய வந்தது. மருத்துவரோ வசந்தை மருத்துவ மனையில் தங்கியிருந்து சிகிச்சைபெறுமாறு கூறினார்.....

ஒரு நாள் சூபி வசந்தின் அறையிலிருந்து போதை வில்லைகளை எடுத்து சாப்பிடுவதை கமலாம்பாள் அவதானித்தாள்.

"அடேய் தீபா இங்கே வந்து பாருடா உன் பிள்ளையை" என கூறி ஓ.... வென கதறி அழ ஆரம்பித்தாள் ...

இதை மருத்துவ மனையில் இருந்து அறிந்த வசந்த் "தான் கெட்டதோடு அந்தப் பச்சைக் குழந்தைக்கும் இக்கூடாத பழக்கத்தை பழக்கி விட்டேனே." என தன்னைத்தானே நொந்துகொண்டு இனியும் தான் உயிரோடு இருக்கக் கூடாதென்று தற்கொலை செய்து கொண்டான் .....

சூபி சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். அதற்குப் பணம் அதிகமாக செலவாகியது. இதனால் தீபன் தன் சொத்துக்களையும் விற்றதோடு மட்டுமன்றி தன் சொந்த வீட்டையும் விற்கக் கூடிய நிலைமைக்கு வந்தான்.

பின்பு வாடகைக்கு சிறிய வீடொன்று வாங்கி அங்கு தான் தீபனும், வாசுகியும், கமலாம்பாளும் தங்கியிருந்தனர். சூபியோ மருத்துவமனையில் மிகவும் மோசமான நிலையில் உயிரிற்குப் போராடிக் கொண்டிருந்தாள். கமலாம்பாள் வசந்த் காரணமாக வாசுகியை வெறுத்தாள். "ஏன்டி நீ மட்டும் உயிரோட இருக்க? நீயும் போய் தொலையிறதுதானே எங்க குடும்பமானத்த சீரழிக்கன்னே உன் தம்பியை இங்கே கூட்டி வந்தியா? சவங்கள்" என வார்த்தை அம்புகளால் வாசுகியின் மனதை துளைத்தாள். அது மாத்திரமன்றி வாசுகியை தீபனிடமும், சூபியிடமும் அண்டவிடாமல் ஒதுக்கி வைத்தாள் கமலாம்பாள். வாசுகி தன் பிள்ளையின் கவலையிலும், தம்பியின் மரணத்துயரத்திலும் வாட தன் மாமியார் தன்னை நடத்தும் விதம் "வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது போல் இருந்தது. இதனால் மனமுடைந்து போனால் வாசுகி.

தங்கள் சொத்துக்கள் அனைத்தும் கைவிட்டுப் போனதையிட்டும் தன் குடும்பத்தின் மானம் கௌரவம் அனைத்தையும் இழந்து விட்ட அவமானத்திலும் இருதய நோயாளியான கமலாம்பாள் சிறிது நாட்களில் இறந்து போனாள். .....

தன் குடும்பத்திற்கு ஏற்பட்ட கதியையும், இவை அனைத்திற்கும் வாசுகி தான் காரணம் என்றும், எண்ணிய தீபன் குடிப்பழக்கத்திற்கு உள்ளானான், நாட்கள் செல்லச் செல்ல தீபன் வீட்டிற்கு வருவதையும், சூபியை மருத்துவ மனையில் சென்று பார்ப்பதையும் அடியோடு நிறுத்தினான் இவன் சில சமயங்களில் குடித்துவிட்டு வீதியில் விழுந்து கிடப்பதுண்டு.

சூபி கேட்பார் பார்ப்பார் எவரும் இன்றி ஆதரவற்ற அனாதைபோல் மருத்துவமனையில் கிடந்தாள். வாசுகியோ செய்வதறியாது தவித்தாள். வான் ஏனும் தனது குடும்பத்தில் சிதைந்து போன உறவுகளை எண்ணி அழுதாள், புலம்பினாள் ஆனால் அவளுக்கென்று அருகிலிருந்து ஆறுதல் கூற எவரும் இருக்கவில்லை.

இது தாண்டா வாழ்கை, இறைவன் மனித பொம்மைகளை ஆட்டி வைக்கும் நாடக மேடையல்லவோ இவ் உலகம். அதில் நீயும் நானும் நடிகர்கள். நடித்துப்பார் நாடகம் புரியும்.

முற்றும்.

செல்வி. யசோதா பாலசுப்பிரமணியம்.
A/L. 99.

பெண்ணின் பெருமை

அரிது அரிது மானிடர் ஆதல் அரிது அதிலும் பெண்ணாய்ப் பிறப்பது அதை விட அரிது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் பெண்கள் தான் இந்த நாட்டின் கண்களாகத் திகழ்கிறார்கள். ஒரு பெண் ஒரு குடும்பத்திற்கு ஒளியாகப் பூவைப்போன்று நறுமணமான அன்பையும் ஒரு குடும்பத்தின் மீது வைக்கிறாள். நாம் பேசும் மொழியைத் தாய் மொழியாகவும் நாம் வசிக்கும் நாட்டைத் தாய் நாடு என்று கூறியும் பெண்ணைப்பெருமைப் படுத்துகின்றோம். பெண் என்பவள் பூவிற்குச் சமனாக மதிக்கப்படுபவள். ஒரு பெண் திருமணத்தின் பின் கணவனுக்கு நல்ல மனைவியாகவும் பத்து மாதம் கர்ப்பப்பையில் பிள்ளையைச் சுமந்து பெற்றெடுத்து நல்ல தாயாகவும் இருக்கிறாள். பின் நல்ல மனைவியாகவும் நல்லதொரு தாயாகவும் இருக்கிறாள்.

நம் நாட்டுத் தேசிய கீதத்தை எடுத்துக் கொண்டால் 'ஸ்ரீலங்கா தாயே' இலங்கைத் தாயே என்று ஒரு பெண்ணை வைத்துப் போற்றுகின்றோம். அதேபோல் பெண்ணின் பெருமையைப் போற்றிப்பாடாத கவிஞர்களோ புலவர்களோ இல்லை. சக்தியின் வடிவமாகத் திகழும் பார்வதியும் ஒரு பெண், கல்வியைத் தரும் கடவுளாகிய லக்ஷ்மியும் ஒரு பெண், வீரத்தைத் தரும் கடவுளாகிய காளியும் ஒரு பெண்தான். கல்வி, செல்வம், வீரம் இவற்றைத் தரும் கடவுள்களும் பெண்களே. தன் கணவன் அநீதியாய்க் கொலையுண்டதைக் கேட்டு மதுரையை எரித்த கண்ணகியும் ஒரு பெண்தான். அரசகுடும்பத்தில் பிறந்தாலும் ஏழை மக்களுக்காக அரச மரியாதைகளை விட்டு வந்த அன்னை திரசாவும் ஒரு பெண்தான். ஆண் செய்யக்கூடிய அனைத்து வேலைகளையும் பெண் செய்கிறாள் அதை விடக் கூடுதலாகவும் பெண் செய்கிறாள்.

பெண் அழகு என்பது தீபங்கள் போல பிரகாசமானது. ஒரு தாயின் அன்புதான் பிள்ளையின் ஆரம்பப் பள்ளிக்கூடம். தாயானவளும் ஒரு பெண்தான். தாயே உன் பெயர் சொல்லும் போது இதயத்தில் மின்னல் பாய்கிறது. முற்காலப் பெண்கள் அடுப்பங்கரைப் பெண்கள். தற்காலப் பெண்கள் மருத்துவர், தாதி, ஆசிரியை, விமான ஓட்டி, பட்டதாரி போன்றவர்களாக இருக்கின்றார்கள்.

"அம்மா என்றழைக்காத உயிரில்லையே அம்மாவை வணங்காத உயர்வில்லையே" என்று பெண் என்பவளுக்கு தாயை உதாரணமாக வைத்து கவிஞர் வைரமுத்து ஓர் பாடலை இயற்றியுள்ளார். "தாயென்ற ஒரு தெய்வம் வீட்டோட இருக்கு. நீ தனித்தனியே கோயில் குளம் அலைவதுவும் எதற்கு? அம்மாவின் பாதத்தில் கற்பூரம் கொழுத்தி ஆனந்நதக் கண்ணீரால் அபிஷேகம் நடத்து" என்று எவ்வளவு அழகாய் அற்புதமாய்ப் பாடிப் பெண் குலத்திற்காக எவ்வளவு அழகாக இயற்றியுள்ளார்.

அமுதசுரபி
தரம் ९८

சிந்தனைக்குச் சில துளிகள்

துன்பத்தையும் தோல்வியையும் துச்சமாக
மதித்து விடா முயற்சியோடு செயல்படு
வெற்றி வெகுதூரமில்லை.

இதயம் மட்டும் உறுதியாக இருந்தால்
சுண்டெலி கூட யானையைத் தாக்கும்.

பாதையைப் பார்த்து பயணத்தைத் தொடருங்கள்
வானத்தைப் பார்த்து வழி தவறாதீர்கள்.

ஏதையும் சாதித்திட விரும்பும் மனிதனுக்கு
நிதானம் அற்புதமான ஆயுதமே தவிர கோபமல்ல

பாதையில்லை என்று எண்ணாதே தொடர்ந்து நட
உனது நடையே புதியதோர் பாதையை
போட்டுக்கொடுக்கும்.

மடிவதில் வாழ்வும்
கொடுப்பதில் திருப்தியும்
துன்பத்தில் இன்பமும் பெறுவது தான்
வாழ்கையின் அடிப்படை தத்துவம்.

ஜே. டொறின் அமுதா,
உயர்தரம் 99,
வர்த்தகப் பரிவு.

மனித உரிமைகளும் குழந்தைகளின் உரிமைகளும்

பேராசிரியர். சோ. சந்திரசேகரம்.
(கொழும்பு பல்கலைக்கழகம்).

மனித உரிமைகளை மேம்படுத்தும் அண்மைக்கால முயற்சிகளில் குழந்தைகளின் உரிமைகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. இன்று வளர்முக நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமை பற்றிய பட்டயத்திற்குத் தமது முழு ஆதரவையும் தெரிவித்துள்ளன. தமது நாடுகளில் வாழும் குழந்தைகளின் நிலைமை, அவர்களின் உரிமைகள் முதலிய விடயங்களில் இன்று கூடிய அக்கறை செலுத்தப்பட்டு வருகின்றது. 1990ம் ஆண்டு செப்டம்பர் 30ம் திகதி எழுபது அரசாங்கத் தலைவர்கள் பங்கு கொண்ட குழந்தைகள் பற்றிய உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட முக்கிய பிரகடனத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது:

"ஒவ்வொரு நாளும் இலட்சக்கணக்கான பிள்ளைகள் வறுமை, பொருளாதார நெருக்கடி, எழுத்தறிவின்மை, நோய்கள், சுற்றாடல்சீரழிவு என்பவற்றால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வெளிநாட்டுக் கடன் பிரச்சனை, பேண்தகு அபிவிருத்தி இல்லாமை என்பவற்றாலும் இப்பாதிப்பு அதிகரிக்கின்றது. போஷாக்கின்மையாலும் நோயினாலும் ஒவ்வொரு நாளும் 40,000 குழந்தைகள் மரணமடைந்து வருகின்றனர். அரசியல் தலைவர்கள் இச்சவால்களுக்கு முகங் கொடுத்தல் வேண்டும்".

ஐ.நா வின் குழந்தைகள் பற்றிய பட்டயத்தின் அடிப்படைத் தத்துவம், மனிதர்கள் என்ற முறையில் குழந்தைகளும் மனித உரிமைகளுக்கு சமமான உரித்துடையவர்கள் சிறுபிள்ளைகளுக்கு விளையாடித்திரியவும் உரிமையுண்டு என்று தற்போது வலியுறுத்தப்படுவதாய் மனித உரிமை நிலைப்பாட்டிலிருந்து குழந்தைப் பருவமும் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை உணரலாம். குழந்தைப் பருவம் என்பது வளர்ந்தோராக வாழப் பயிற்சிபெறும் பருவம் மட்டுமன்று, இத்தகைய சிந்தனை இன்றைய உலகில் சற்று தீவிரமானதாகவே நோக்கப்படுகின்றது.

குழந்தைகள் இளமையில் தமது மனித உரிமைகளை முழுமையாக அனுபவிக்கப் பல தடைகள் உண்டு. எனவே அவர்கள் தமது உரிமைகளை அனுபவிக்க விசேட ஆதரவு அளிக்கப்படல் வேண்டும். பிள்ளைகளுக்கு சகல மனித உரிமைகளும் வழங்கப்படல் வேண்டும். அதே வேளையில் அவர்களுக்குப் பாதுகாப்பும் வழங்கப்படல் வேண்டும். இது சாத்தியமானதா என்பதே முக்கிய கேள்வி. பட்டயத்தின் 3(1) பிரிவில் இதற்கான விடை தரப்பட்டுள்ளது. குழந்தைகள் தொடர்பாக அரசாங்கங்கள், பொது நல தாபனங்கள்,

நீதிமன்றங்கள் நீர்வாக பீடங்கள், சட்டமன்றங்கள் என்பன ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவை குழந்தைகளின் சிறப்பான நலன்களைக் கருத்திற்கொண்டவையாக ('The best interests of the child') அமைதல் வேண்டும் எனக் குழந்தைகள் பட்டயம் கூறுகின்றது. இவ்வகையில் அரசாங்கத்தினதும் பெற்றோர்களினதும் உரிமைகள் இரண்டாம் இடத்தையே பெறுதல் வேண்டும். இதுவே இப்பட்டயம் வழங்கும் முக்கிய வழி காட்டல் தத்துவமாகும்.

இத்தத்துவத்தைத் தொடர்ந்து வரும் மற்றொரு கோட்பாடு அவர்களுடைய ம னி த உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் செயற்பாட்டில் "குழந்தைகளின் அபிப்பிராயங்களுக்கு" முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதாகும். குழந்தைகளின் சிறப்பான நலன்கள் என்ன என்பதைத் தீர்மானிக்க அவர்களுடைய கருத்துக்களுக்கு முக்கியத்துவமளித்தல் அவசியம். "குழந்தைகள் சொந்தமாகக் கருத்துக்களை உருவாக்கும் ஆற்றலுடையவர்கள். அவர்களைப் பாதிக்கும் விடயங்களில் கருத்துக்களைத் தெரிவிக்க அவர்களுக்குரிய உரிமைகளை அரசாங்கங்கள் உறுதி செய்ய வேண்டும். குழந்தைகளின் வயது, முதிர்ச்சி என்பவற்றிற்கேற்ப அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்." என்று படடயத்தின் பிரிவு 12(1) கூறுகிறது. இதனைத் தொடர்ந்து சில நாடுகள் 12 வயதுப் பிள்ளைகள் தமது பெயரையோ அல்லது குடியுரிமையையோ மாற்றிக் கொள்ள உரிமை உள்ளவர்கள் என அறிவித்துள்ளன. பொதுவாக உலக நாடுகள் இவ்விடயத்தில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

குழந்தைகளின் சமூக, பொருளாதாதார உரிமைகளைப் பொறுத்த வரையில் நேரடி முக்கியத்துவம் வாய்ந்த பிரிவு 6(2) ஆகும். இப்பிரிவு வாழ்வுரிமை பற்றியதாகும். குழந்தைகள் கொல்லப்படாது உயிர் வாழவும் தம்மை விருத்தி செய்து கொள்ளவும் உரிமையுடையவர்கள். சகல அரசுகளும் குழந்தைகளின் இம்மனித உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என்று அப்பிரிவு கூறுகின்றது. இவ்விடத்து "விருத்தி" என்பது உடல் விருத்தியைப் பேணும் உரிமை மட்டுமன்றி குழந்தைகளில் ஏற்பட வேண்டிய உளவிருத்தி, அறிவு சார் விருத்தி (cognitive), மெய்ப்பாடுகளின் விருத்தி (emotional), சமூக பண்பாட்டு விருத்தி என்னும் பல்வேறு அம்சங்களைக் கருதுகின்றது. நவீன குழந்தை உளவியல் நிபுணர்களின் ஆய்வுகளின்படி குழந்தைகள் பிறந்து வளரும் முதலாவது வாரங்கள், மாதங்கள் என்பன அவர்களுடைய எதிர்கால வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். பட்டயத்தின் ஆறாம் பிரிவில் கூறப்பட்டுள்ள மேற்படி உரிமையை நடைமுறைப்படுத்தும் போது இவ்வுண்மை கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

குழந்தைகளின் உரிமை பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மற்றொரு தத்துவம் சகல பிள்ளைகளும் தமது உரிமைகளை அனுபவிக்கும் உரித்துடையவர்கள், இவ்விடயத்தில் எதுவித பாரபட்சமும் காட்டப்படக் கூடாது. (Principles of non-dia-crimination) பட்டயத்தின் 2ம் பிரிவானது சகல பிள்ளைகளுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று கூற அடிப்படையான தத்துவம் இதுவாகும். பெற்றோரின் இனம், நிறம், மொழி, சமயம், அரசியல் கருத்து, சொத்து, செல்வம், அந்தஸ்து என்பவற்றைக் கருத்திற் கொள்ளாது குழந்தைகளின் மனித உரிமைகள் நிலைநாட்டப்படல் வேண்டும் என அப்பிரிவு கூறுகின்றது.

குழந்தைகளின் அடிப்படைக் கல்வி உரிமைகள் பற்றிய இப்பட்டயம் பல விரிவான ஏற்பாடுகளைக் கொண்டு விளங்குகின்றது:

- கல்வி உரிமை தொடர்பான ஏற்பாடுகள், குழந்தைகளின் விருத்தி பற்றிய உரிமையுடன் தொடர்புடையவை.
- கல்வி உரிமை பற்றிய ஏற்பாடுகள், பாரபட்சம் எதுவும் காட்டப்படக் கூடாது என வலியுறுத்துகின்றன.
- யாவருக்கும் ஆரம்பக் கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் வழங்கப்பட வேண்டும்.
- இடை நிலைக் கல்வியானது சகல பிள்ளைகளுக்கும் கிடைக்கத்தக்கதாக இருத்தல்வேண்டும், தேவையான இடத்து நிதியுதவியும் வழங்கப்படல் வேண்டும்.
- குழந்தைகளின் ஆற்றலின் அடிப்படையில் உயர் கல்வி வாய்ப்புகள் வழங்கப்படல் வேண்டும். (பிரிவு 28)
- குழந்தைகள் பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்தாது தொடர்ந்து கல்வி பெறுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.
- பாடசாலை என்பது தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் வழங்கும் நிலையமன்று, பாடசாலை உயர்ந்த விழுமியங்களையும் பண்புகளையும் கற்பித்தல் வேண்டும், கற்பித்தல் முறைகள் யாவும் குழற்தைகளின் வயது, முதிர்ச்சி, ஆர்வம் என்பவற்றை மையமாகக் கொண்டு தீர்மானிக்கப்படல் வேண்டும். பாடசாலையின் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் குழந்தைகளின் கௌரவத்தைக் கருத்திற் கொண்டவையாக அமைதல் வேண்டும். உடல் ரீதியான தண்டனை வழங்கப்படக் கூடாது. (பிரிவு 28(2))
- பாடசாலைக் கல்விச் செயற்பாட்டின் முக்கிய நோக்கம் குழந்தைகளின் ஆளுமை,

ஆற்றல்கள், உள,உடற் திறன்கள் என்பவற்றை முழுமையாக வளர்த்தலாகும். அவர்கள் சுதந்திரமான சமூகத்தில் சகல இன, மத, சமயக் குழுவினருடனும் சமாதானமாகவும் சகிப்புத்தன்மையுடனும் புரிந்துணர்வுடனும் வாழ அவர்களை ஆயத்தப்படுத்துவது கல்வியின் பணியாகும்.

- பிரிவு 31ன் படி குழந்தைகள் கலாசார, அழகியல் வாழ்வில் பங்கு கொள்ள உரிமை உடையவர்கள். அரசாங்கங்கள் அதற்கான சம வாய்ப்புகளை யாவருக்கும் வழங்குதல் வேண்டும்.
- 1989 ஆம் ஆண்டின் ஐ.நா. பட்டயத்தின் 22ஆவது பிரிவில் அகதிக் குழந்தைகளின் உரிமைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இப்பட்டயத்தில் வலியுறுத்தப்படும் குழந்தைகளின் உரிமைகள் அகதியாக உள்ள குழந்தைகளுக்கும் பொருந்துவன என இப்பிரிவு கூறுகின்றது.

பட்டயத்தின் 5 வெவ்வேறு பிரிவுகளில் குழந்தைகளைச் சுரண்டும் முயற்சிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 32வது பிரிவானது பொருளாதாரச் சுரண்டல் பற்றியதாகும். அத்துடன் குழந்தையின் கல்வி, உடல் நலம், உள, உடல், சமூக விருத்தி என்பவற்றைத் தடை செய்யும் காரணிகளுக்கு எதிரான பாதுகாப்புகளை அப்பிரிவு வழங்கியுள்ளது. வேலைக்குச் செல்லும் குறைந்த பட்ச வயது, வேலை நேரம், வேலைச் சூழல், வேலை நிபந்தனைகள் பற்றிய சட்டங்களை அரசாங்கங்கள் இயற்றும் போது குழந்தைகளின் உரிமைகள் பற்றிய இவ்வம்சங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். போதை மருந்துப் பாவனை பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றிற்க்கெதிராக இளம் பிள்ளைகள் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற ஏற்பாடுகள் பிரிவு 33, 34, 35 இல் தரப்பட்டுள்ளன.

குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விடயத்தில் அண்மைக் காலங்களில் கூடிய அக்கறை செலுத்தப்பட்டது. இவ்வுரிமைகள் மனித உரிமைகளின் ஓர் முக்கிய அம்சமாக கருதப்பட்டமையால் சில விளைவுகள் ஏற்பட்டன. பிரதானமாக இம்முயற்சியின் காரணமாக பொருளாதார, சமூக உரிமைகள் அரசியல், சிவில் உரிமைகளுடனும் தொடர்பு படுத்தப்பட்டன. இதனால் சகல உரிமைகளும் பிரிபட முடியாதவை, ஒன்றுடனொன்று தொடர்புள்ளவை, ஒன்றில் ஒன்று தங்கியுள்ளவை என்ற எண்ணக்கருவாக்கம் உருவாக முடிந்தது.

மற்றொரு முக்கிய விளைவு அபிவிருத்தியடைந்த செல்வந்த நாடுகளை விட மூன்றாம் உலக வளர்முக நாடுகளே பிள்ளைகளின் உரிமைகளில் அதிக ஈடுபாடு காட்டியமையாகும். ஐ.நா. குழந்தைகள் உரிமைப் பட்டயம், உலக உச்சி மகாநாட்டு

முடிவுகள் என்பவற்றின் அடிப்படையில் வளர்முக நாடுகள் குழந்தைகளின் உரிமைகள் எவ்வாறு உள்ளன என்பது பற்றிப் பரிசீலனை செய்ய முற்பட்டன. இம்முயற்சிகளுக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளும் தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன.

குழந்தைகளின் உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனமானது உலகளாவிய ரீதியில் மனித நாகரிகத்தின் ஒருமைப்பாட்டைச் சித்தரிக்கின்றது. நாடு, சமூகம், அரசியல் கோட்பாடு என்ற வேறுபாடின்றிச் சகல நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் குழந்தைகளின் உரிமைப் பிரகடனம் மனித நாகரிக மேம்பாட்டில் மற்றொரு முக்கிய முன்னேற்றமாகும்.

ஆசிரியர்கள்

ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் தகைமை உடையவர்கள் ~ ஆசிரியர்கள்
கல்வியின் முதல் ஏணிப் படி ~ ஆசிரியர்கள்
முது குரவருள் ஒருவர் ~ ஆசிரியர்
இளஞ்சமுதாயத்தினருக்குக் கல்வியை
அழகாகப் பதிய வைப்பவர்கள் ~ ஆசிரியர்கள்
நாட்டிலே கல்வி அறிவை வளப்பவர்கள் ~ ஆசிரியர்கள்
ஏழை, பணம், ஜாதி, மதம் போன்றவற்றை பார்க்காது
கல்வியைக் கற்றுக் கொடுப்பவர்கள் ~ ஆசிரியர்கள்
பொறுமையுடனும் நிதானத்துடனும் கல்வியைக்
கற்றுக் கொடுப்பவர்கள் ~ ஆசிரியர்கள்
ஒவ்வொரு மாணவரையும் நல்ல நிலையில் உயர்த்த
வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் ~ ஆசிரியர்கள்
மாணவர்க்கு எந்த வேளையிலும் உற்சாகத்தையும்
ஊக்கத்தையும் அளிப்பவர்கள் ~ ஆசிரியர்கள்
கருணை உள்ளம் கொண்டவர்கள் ~ ஆசிரியர்கள்
நேரம் தவறாமல் பாடசாலைக்குச் சமூகம் அளித்து
தமது சேவையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் ~ ஆசிரியர்கள்

தாய் மொழியை மதித்திடடா தமிழா !

ஆங்கில மோகம் பிடித்த தமிழா !
தேன் தமிழிலும் இனியதா உன் ஆங்கிலம் ?
ஆங்கிலம் கதைத்தால் பெருமையாடா ?
தேன் தமிழைப் பேசினால் இழிவாடா ?
பெற்ற பிள்ளைக்கு ஆங்கிலத்தை திணிக்கிறாய்
தமிழை பேசினால் காலால் உதைக்கிறாய்
ஆங்கிலம் தெரிந்தவனுக்கு கொடுக்கிறாய் பதவியை
தமிழனே புரியாதே கொடும் தமிழ் வதை
என்ன குறையடா எம் தாய்த் தமிழிற்கு
உரிய அந்தஸ்தை கொடடா தமிழிற்கு
தலை நிமிர்ந்து சொல்லடா நான் தமிழனென்று !

செல்வி நிதர்ஷினி ராஜதாஸ்
ஆண்டு ~ 12 (கலைப்பிரிவு)

பாரதி பாடலும் இலங்கையின் எளிமையான கவிதைகளும்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்.
கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

எமது நாட்டின் இலக்கிய வளர்ச்சியினை ஏன் "பாரதிக்குப் பின்" என்று நோக்க வேண்டும் என்பதனை முதலிலே தெளிவாக்குதல் அவசியமாகும். தமிழ் இலக்கிய வளர்ச்சியிலே பாரதி ஒரு மைல்கல். சங்க இலக்கியங்கள் தொடக்கம் பல்வேறு மாற்றங்களையும் மரபுகளையும் கொண்டமைந்து வந்த தமிழ் இலக்கியம் பாரதியுடன் புதிய மாற்றத்தினையும் புதிய மரபினையும் பெற்று அமைந்தது. அப்புதிய மாற்றமும் மரபும் என்ன?

சென்ற நூற்றாண்டிலே தமிழ்நாடும் மக்கள் யுகத்தின் பண்புகளை உணரத் தலைப்பட்டது. குறிப்பிட்ட சிலருக்காக இருந்து வந்த கல்வி மக்கள் யாவருக்கும் வழங்கப் படவேண்டிய சூழ்நிலை உருவாகியது. கற்றவர்கள் சிலர் மற்றவர்கள் பலர் என்னும் நிலை மாற்றமடையத் தொடங்கியது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றினையாவது வாசித்து உணரக்கூடிய கல்வி பலருக்கும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் இலக்கியங்களைப் படைக்கும் இலக்கிய ஆசிரியர்களும் கற்ற ஒரு சிலருக்கு என்ற நோக்கத்தினைக் கைவிட்டு மக்கள் பலரும் படித்துப் பயனடைவதற்காக இலக்கியம் படைக்க வேண்டியவர்களாயினர். அவ்வாறு மக்களுக்கு இலக்கியம் படைக்க வேண்டி இதுவரை காலமும் இருந்து வந்த இலக்கியப் போக்கிலும் மரபிலும் மாற்றம் தேவைப்பட்டது. இது வரை காலமும் இருந்து வந்த இலக்கியப்போக்கு எத்தகையது? கம்பனுடைய காலத்தில் அவனுடைய இராமாயனச் செய்யுட்களை அக்காலப் பொதுமக்களும் இலகுவிலே விளங்கிக்கொண்டார்களோ என்னவோ எமக்குத் தெரியவில்லை. ஆனால் சென்ற நூற்றாண்டிலும் அதற்கு முற்பட்ட நூற்றாண்டிலும் இயற்றப்பட்ட செந்தமிழ் இலக்கியங்களைச் சாதாரண மக்கள் விளங்கிக்கொண்டாரில்லை என்பதை நாம் தெளிவாக அறிவோம். இத்தகைய இலக்கியப் போக்கினை மாற்றி, சாதாரண கல்வி அறிவுடைய யாவரும் விளங்கிக்கொள்ளும்படி இலக்கியம் படைக்கவேண்டிய காலத்தின் தேவையினைப் பாரதி உணர்ந்து செயற்பட்டான். அதனால் எல்லோருமே எளிதில் விளங்கிக் கொள்ளும்படியான எளிய நடை, பதம் ஆகியன கொண்ட கவிதை நடையினையும் உரை நடையினையும் பாரதி இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்தான். பாரதி தமிழ் இலக்கியப் போக்கிலும் மரபிலும் ஏற்படுத்திய இப்புதிய மாற்றம், இலங்கை நாட்டு இலக்கியங்களிலும் வந்து சேரலாயிற்று.

பாரதியினுடைய கவிதைகளின் சிறப்பினைத் தமிழகத்துக் கற்றவர் பலரும் உணரத்தலைப்படாத காலத்திலே துணிந்து அப்பாடல்களைப் பல்கலைக்கழகச் சமூகத்திற்கு அறிமுகஞ்செய்து வைத்தார் அருட்திரு சுவாமி விபுலானந்த அடிகள். அண்ணாமலைப்

பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்த அடிகள் மூலமாக இலங்கை நாடு பாரதியினைத் தரிசிக்கத் தொடங்கியது. அடிகளார் பாரதியின் கவிதைகளைப்பற்றி கூறுகிறார்.

> "சங்கச் செய்யுட்களுக்குள்ளே செறிந்து கிடக்கும் காதலின்பத்தையும் வீரமேம்பாட்டையும் யாவரும் எழிதிலுணர்ந்து கொள்ளற்பொருட்டு இலகுவான நடையிலமைந்த இன்னிசைத் தமிழ்ப் பாடல்களாற் சொல்ல வல்ல கவிவாணர் தமிழ் நாட்டுக்குப் பேருபகாரிகளாவர். இத்தகைய கவிவாணர்களுள் முதல் வைத்தெண்ணப்பாடும் தகமை சான்றவர் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார். தமிழ் செய்த தவப்பயனாயுதித்த பாரதியார் தமது இன்னிசைப் பாடல்களினால் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் அளத்தற்கரிய பேருபகாரத்தைச் செய்திருக்கிறார்."

இவ்வாறு பாரதியின் பாடல்களின் எளிமைப் பண்பினையும் இன்னிசைப் பண்பினையும் சுவாமி விபுலானந்த அடிகள் கூறுவர். இனிய எழிமையான கவிதைகள் மட்டுமன்றி, சிறு கதைகள், கட்டுரைகள் ஆகியனவற்றையும் பாரதி எழுதியுள்ளார். இவ்விலக்கியங்களிலே புலப்பட்ட புதிய பண்புகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கும் வழிகாட்டிகளாக அமையலாயின.

ஈழத்திலே நவீன இலக்கியம் தோன்றுவதற்குக் காலாயிருந்தவர்கள் யாவருமே பாரதியினால் கவரப்பட்டுள்ளனர். அவனுடைய இலக்கிய ஆக்கங்களிலே பரிச்சயமுடையவர்களாயிருந்துள்ளனர். திரு.நா. பொன்னையா அவர்களாலே தொடக்கப்பெற்ற 'ஈழகேசரி' மூலமாக பாரதியினையும், மணிக்கொடி எழுத்தாளர்களையும் ஈழத்து இலக்கிய கருத்தாக்கள் நன்கு அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஈழத்து நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சியினை எடுத்துநோக்குமிடத்து அதன் ஆரம்பகாலக் கவிஞர்கள் பாரதியின் செல்வாக்குக்குட்பட்டவர்களாயுள்ளனர். பாரதி எவ்வாறு நாட்டுப்பற்றுப் பாடல்களை முதலிலே பாடித் தமிழ் நாட்டில் அறிமுகமானானோ அதேபோல் ஈழத்திலும் ப.கு.சரவணபவன், முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, அல்வாயூர் மு.செல்லையா, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் போன்றோர் இலங்கையைப் பற்றிப் பாடியே தமிழ்க் கவியுலகிலே திகழ்ந்தனர். ப.கு.சரவணபவன் பாரதியையே தன்வீட்டு மணிவிளக்காக கொண்டவர் அவர்,

"பாரதியே தெய்வப் பழமேயென் பாக்கியமே
பேருலகில் யான் பெற்ற பேறே பெருமானே
வீரனே யானேற்று வீட்டு மணி விழக்கே
வாரியே யென்மனத்துடன் மலர்த்தாண் மலராதோ"

என்று பாரதியினைப் பாடியவர். பாரதியின் தேசியப் பாடல்களிலே காணப்பட்ட பண்புகளையுடைய பாடல்களைச் சரவணபவன் பாடினார்.

"மாவலிகங் கைப்புனலாந் தாவணியை வீசி
மாதிரமெ லாம்மணக்கும் வாசனையைப் பூசி
காவலரின் கண்மருட்டுங் கன்னி எங்கள் தேயம்
காசினியி லிவளைப்போற் கன்னியில்லை யில்லை"

என்று ஈழநாட்டின் சிறப்பினைப் பாடுகிறார். இவரைப் போலவே முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்றோர் நாட்டுப் பற்றுப் பாடல்களை இயற்றினர். நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஈழநாட்டின் இயற்கை நலனை,

"அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
அன்பொடு சிவாயஎன அருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவழி யருவி
முத்துதிர மெய்ப்புளக முரவுரை குளறப்
பூதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர வொளிகாணாக் கண்ணென்ன கண்ணே".

என்று பாடுகிறார்.

பாரதியினுடைய கவிதைத் தாக்கத்தின் காரணமாக ஈழத்தமிழ்க் கவிதையும் எளிய நடை, எளிய சத்தம் ஆகியவற்றின் மூலமாகப் பல்வேறு பொருள்களைப் பாடுவதாக அமைந்தது.

பாரதி என் தோழன்

கவிதைகள் புனைவதில் மன்னவன் ~ அவன்
கடும் புரட்சி செய்வதில் வல்லவன்
கனிவைப் பொழியும் நல்லவன் ~ அவன்
கரியினால் சிறந்த மனுமகன்

பாரத மண்ணில் தவழ்ந்தவன் ~ அவன்
பாரத சுதந்திரம் தேடி அலைந்தவன்
பண்பாடியே புரட்சி செய்தவன் ~ அவன்
பாரத மக்களை சீண்டி எழுப்பியவன்

வெள்ளையருக்கு சிம்ம சொர்ப்பனம் ~ அவன்
பக்தியிலே மிகச் சிறந்தவன்
விரமற்றோரின் வீரகாவியம் ~ அவன்
வறுமையிலே துவண்ட வல்லவன்

அத்தனை சிறப்பும் மிக்கவன் ~ அவன்
இந்தப் பாரினிலே வாழ்ந்த தீரனவன்
இவனுக்கு நண்பி நானன்றோ ~ அந்த
பாரதி என் தோழன்

ந. வேர்ஜின் நிரஞ்சலா
உயர்தரம் 99
வர்த்தகப் பிரிவு

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதை

கலாநிதி. எஸ். சிவலிங்ராஜா - தலைவர்
தமிழ்த்துறை - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஈழத்துத் தமிழ் கவிதை வரலாறு ஈழத்துப் பூதந்தேவனார் என்ற சங்கப்புலவருடன் தொடங்குகின்றது என்பர். சங்கப் புலவரான ஈழத்துப் பூதந்தேவனாருக்குப் பின் யாழ்ப்பாண மன்னர்கள் காலம் வரையான தமிழ்க் கவிதை வரலாற்றை தெளிவாகக் கண்டறிய முடியவில்லை. ஆங்காங்கே அவ்வப்போது கிடைத்த சில கல்வெட்டுச் செய்யுள்களைக் கொண்டு பூதந்தேவனாருக்குப் பின்னரும் யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திற்கு முன்னரும் ஈழநாட்டிலே செய்யுள் மரபொன்று நிலவியுள்ளதென்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலும் அவர்களைத் தொடர்ந்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்திலும் ஈழநாட்டிலே செய்யுள் நூல்கள் பல தோன்றி உள்ளன. இச்செய்யுள்களிடையே ஆங்காங்கு கவித்துவம் விரவிக்காணப்படுவதை அவதானிக்கலாம்.

19ம் நூற்றாண்டிலே ஈழநாடு பலவகையிலும் சாதனைபடைத்த போதிலும் கவிதைத்துறையிலே குறிப்பிடக்கூடிய புதுமைகளைச் செய்தது என்று சொல்லிவிட முடியாது. புதிய போக்கும் நோக்கும் இலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட இக்காலப்பகுதியிலே பொதுவான செய்யுள் மரபே பெரும்பாலான புலவர்களாற் பேணப்பட்டது. பாட்டு இயற்றுவது பயிற்சியாகவும் படிப்பாகவும் பேணப்பட்டமை இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை மிக இறுக்கமாகவே இங்கு பேணப்பட்டு வந்துள்ளது. இப்பேண் முறையின் வழி பெரும்பாலும் செய்யுளையும் பாடலையும் காணலாமேயன்றிக் கவிதையைக் காண்பது அரிதேயெனலாம்.

தமிழ்க் கவிதைப்பரப்பிலே புதுமை செய்து நவகவிதை படைத்த பாரதி தோன்றிய காலகட்டத்திலே ஈழத்திலே செய்யுளும் பாடலுமே பெரு வழக்காய் இருந்தன என்பதனையும் நாம் மனங்கொள்ள வேண்டும். எனினும் ஓரளவுக்குச் சமூகச் சார்புடைய நெகிழ்ச்சித் தன்மை பொருந்திய பாடல் மரபு ஒன்றும் ஆங்காங்கே துளிர் விட்டமையையும் அவதானிக்க முடிகின்றது. இந்த வகையில் சுய அனுபவத்தின் வெளிப்பாடாக எழுதப்பட்டது என்று கூறப்படுகின்ற தி. த. சரவணமுத்தப்பிள்ளையின் "தந்தை விடு தூது" விதந்து குறிப்பிடப்பட வேண்டியதே. சரவணமுத்துப்பிள்ளையிலே அரும்பிய சமூகப்பார்வை எமது பாடல் மரபிலே பாவலர் துரையப்பாப்பிள்ளை, விபுலாநந்தர், சோமசுந்தரப்புலவர் முதலியோரிடம் பட்டுத்தெறிப்பதையும் அவதானிக்க முடிகின்றது. பாரதியின் சமகாலத்தவரான பாவலர் துரையப்பாப்பிள்ளை இந்த வகையிலே விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர். பழைய மரபுக்கும் புதிய போக்குக்கும் இடைப்பட்டவராக காணப்படும் பாவலர் துரையப்பாப்பிள்ளையின் சமூக நோக்குக்கான களமும் தளமும் தனித்த ஆய்வுக்கு உரியவையாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேதான் நவகவிதை என்ற கருத்து நிலை தோற்றம் பெறுகின்றதெனலாம்.

"சுவைபுதிது பொருள்புதிது, வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத மாகவிதை"

என்று நவகவிதைக்கு வரைவிலக்கணத்தைக் கூறிய பாரதியையே நாம் நவகவிதை நாயகனாகக்

கருதுகின்றோம். பாரதி சுட்டிய நவகவிதையையே தற்காலக் கவிதையென்று ஆய்வாளர்கள் சுட்டிச்சொல்கின்றனர். பாரதி குறிப்பிட்ட நவகவிதை மரபு அவன் காலத்திலே (1882-1921) ஈழநாட்டிலே தோற்றம் பெற்றது என்று கூறிவிட முடியாது.

ஈழநாட்டில் தற்காலத் தமிழ்க் கவிதை மரபு 1940களை அண்டிய காலப்பகுதியிலே தோற்றம் பெறுகின்றது. நாற்பதுகளுக்குச் சற்று முன் (1930-40) ஈழ கேசரியில் இளங்கவிஞர்கள் சிலரின் கவிதைகள் வெளிவந்தமையும் குறிப்பிடக் கூடியதே. எனினும் தற்காலத் தமிழ்க் கவிதையின் ஊற்று மறுமலர்ச்சிக் காலக் கவிஞர்களுடனேயே தொடங்குகின்றது எனலாம். நாற்பதுகளிலே முளைவிட்ட இக்கவிதை மரபு இன்று வேர்விட்டு விருட்சமாகியுள்ளது என்று கூறலாம்.

பாரதியின் கவிதைச் செல்வாக்குக்கு உட்பட்ட, தமிழகத்துக் கவிதை மரபினால் ஈர்க்கப்பட்ட, மறுமலர்ச்சிச் சங்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்ட இளைஞர்கள் சிலர் ஈழத்து தற்காலத் தமிழ்கவிதை மரபின் முன்னவர்களாகத் தோற்றம் பெறுகின்றனர். இவர்களது பிரதான வெளியீட்டுச் சாதனமாக மறுமலர்ச்சி இதழ் விளங்கியதெனலாம்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே மறுமலர்ச்சிக்குத் தனித்துவமானதோர் இடமுண்டு. இதன் செயற்பாடுகளும் உந்துதல்களும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தமை தனியானதோர் ஆய்வுக்குரிய விடயமாகும்.

இம்மறுமலர்ச்சிச் சங்கத்திலிருந்து மேற்கூறிய நவகவிதை முன்னோடிகள் என அ.ந.கந்தசாமி, நாவற்குழியூர் நடராசன், சாரதா, செ. கதிரேசபிள்ளை, மகாகவி முதலியோர் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்கள் ஆவர்.

இந்த காலகட்டத்திலே மறுமலர்ச்சிச் சங்கத்துடன் தொடர்பில்லாமலே நவகவிதை பாரம்பரியத்துள் காலடி வைத்த சிலரையும் காண முடிகின்றது. இந்த வகையிலே அல்லைக் கவிஞர் மு. செல்லையா யாழ்ப்பாணன் முதலியோர் விதந்து குறிப்பிடப்படக் கூடியவர்கள். இவர்களது கவிதைச் செல் நெறிக்கு பாரதியும் பரம்பரையினருமே ஆதர்சமாக அமைகின்றனர்.

யாழ்ப்பாணக் கண்ணன் பாட்டு, கண்ணம்மா பாட்டு, பாரத மாதா, தேச பக்தன் சபதம் முதலான பாடல்கள் பாரதியின் பாடல் மரபை படியெடுத்து பாடும் தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. இவர்களின் கவிதை வழி பிறக்கின்ற சமூக உணர்வு வெளிப்பாட்டுக்குப் பாரதியின் தாக்கமும் சாந்தியத்தின் செல்வாக்குமே காரணமெனலாம்.

மறுமலர்ச்சிச் சங்கத்திலிருந்து உருவாகியவர்களில் மகாகவி மிகுந்த கவனத்திற்குரியவராகின்றார். நாற்பதுகளிலே தொடங்கிய இவரது கவிதைப் பயணம் எழுபதுகள் வரைதொடர்ந்து ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபுக்கு வளம் சேர்த்துள்ளது. மகாகவி பற்றிப் பின்னர் விரிவாகக் குறிப்பிடுவோம்.

மறுமலர்ச்சியிலிருந்து உருவாகியவர்களிலே அ.ந.கந்தசாமியும் காத்திரமான கவிதைகளைப் படைத்தள்ளார். மறுமலர்ச்சியின் வழிவந்த நாவற்குழியூர் நடராசன் முதலியோர் ஓசைநயம் உள்ளிட்ட

மனோரதியப் பாங்கான கவிதைகளையே எழுதினார். மறுமலர்ச்சிக் குழுவினராலே முன்னெடுக்கப்பட்ட தற்காலக்கவிதை மரபு 1950 களைத் தொடர்ந்து வீச்சுடன் வெளிவரத் தொடங்குகின்றதெனலாம். சமூகப்பார்வை விரிவடைந்ததும், தேசிய இனப்பிரச்சினை பாடு பொருளாகியதும் இக்கவிதை வீச்சுக்குரிய காரணி ஆகலாம். நாற்பதுகளில் உருவான கவிதை மரபோடு கைகோர்த்து ஐம்பதுகளிலும் ஒரு கவிஞர் பரம்பரை உருவாகியது. இவர்களுள், முருங்கையன், நீலாவணன், சில்லையூர் செல்வராசன், அண்ணல் புரட்சிக் கமால் முதலியோர் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

நாற்பதுகளிலே தோன்றிய மகாகவியும், ஐம்பதுகளில் உலாவரத் தொடங்கிய முருகையன், நீலாவணன் முதலியோரும் ஈழத்து தமிழ்க்கவிதையின் பேச்சிலும் நோக்கிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியவர்களாவார். இவர்களை ஈழத்துத் தமிழ்க் கவிதையின் மும்மூர்த்திகள் எனச் சொல்லலாம். ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபின் .உயிரோட்டமான பயணத்திற்குப் பாதை சமைத்தவர்களாக இம்மூவரையும் கொள்ளலாம். இப்பாதையிலேயே பல்வேறு பரிமாணங்களுடனும் பரிணாமங்களுடனும் ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபு ஓடிக்கொண்டிருக்கின்றது என்று துணிவாகக் கூறலாம். நாற்பதுகளில் தொடங்கிய நவ கவிதை மரபிலே ஐம்பதுகள், அறுபதுகளில் பல கவிஞர்கள் நீச்சலடித்தனர். அவர்களில் போட்டுக்காட்டுவது இன்று நீச்சலடித்து கரையேறிய சிலரின் பெயர்கள் மட்டுமே இவ்கட்டுரையில் இடம்பெறுகின்றது.

ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாற்றிலே ஐம்பதுகளின் நடுப்பகுதியில் இருந்து அறுபதுகளின் பிற்பகுதி வரையான காலப்பகுதி முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியிலேதான் மொழிப்பிரச்சினை இனப்பிரச்சினை ஒரு புறமும், தமிழ் மக்களின் சமூகக் குறைபாடுகள் ஏற்படுத்தும் தாக்கம் மறுபுறமாக ஈழத்துத் தமிழ்க் கவிதையின் போக்கிலே தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. ஒரு வகையில் சமூக, அரசியல் விழிப்புணர்ச்சி தோன்றிய காலப்பகுதியாக இக்காலப்பகுதியைக் கொள்ளலாம்.

மொழி உணர்வு வெளிப்பாட்டுக் கவிதைகளுக்குக் களம் அமைக்கும் பணியில் சுதந்திரன் தீவிரமாக இறங்கியது இக்காலப்பகுதியிலேயே எனலாம். இன, மொழி உணர்வின் வெளிப்பாடாக இக்காலப் பகுதியிலே தோன்றிய கவிதைகளினூடாக, அக்காலக் கவிஞர்களின் சமூக அரசியற் சார்புகளையும், அவர்கள் இலக்கியம் பற்றிக் கொண்டிருந்த கருத்து நிலையையும் தெளிவாகக் கண்டு கொள்ளலாம்.

"வானைப் பார்த்து நிலவைப் பார்த்து
வையங் களிக்கப் பாடும்புலவ
வமானம் இழந்த தமிழர் இன்று
இன்று வாழும் நிலையை எண்ணிப் பாடு"

என்று ஒரு கவிதைக் கொள்கைப் போக்கினையும் இதற்கு சமதையாக இன்னும் சற்று விரிவுபட்ட நோக்கிலே~

"இன்னவைதாம் கவி எழுத
ஏற்ற பொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
செல்லாதீர், சோலை கடல்
மின்னல், முகில் தென்றலினை
மறவுங்கள் மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு ஏழ்மை, உயர்வு
என்பவற்றை பாடுங்கள்."

என்று பாடும் மரபினையும் இக்காலப்பகுதியிலே காணமுடிகின்றது. இந்த இரண்டு கவிஞர்களுக்குமிடையே ஒற்றுமை காணப்படுவது போலத் தோன்றினாலும் மிக நுணுக்கமாக நோக்கும் போது இவர்கள் இலட்சியம் பற்றிக் கொண்டிருந்த கொள்கைகளிலே சற்று வேறுபாடு காணப்படுவதையும் அவதானிக்கமுடிகின்றது.

சமூகப் பிரச்சினைகளை முன்னெடுத்துப் பாடும் ஒரு கவிதைப் பாரம்பரியத்தையும் இக்காலப்பகுதியிலே காணமுடிகின்றது. சிறப்பாக, யாழ்ப்பாணச் சமூகத்திலே வேரோடி இருந்த சாதிப்பிரச்சினையை பாடுபொருளாக கொண்டு பலர் உயிர்த் துடிப்பான கவிதைகளை எழுதினார்கள். 40,50 களில் உருவான கவிஞர்களும் சாதிப்பரச்சினைகளை. பாடு பொருளாகக் கொண்ட போதிலும், 60களில் உருவான கவிஞர் குழாம் இப்பிரச்சினை பற்றி வீச்சான கவிதைகளை எழுதினர். இந்த வகையிலே பசுபதி, சுபத்திரன் முதலியோர் விதந்து குறிப்பிடத்தக்கவர்களாவர். அறுபதுகளில் யாழ்ப்பாண குடாநாட்டில் சாதிப்பிரச்சினை எரியும் பிரச்சினையாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். மகாகவியின் "தேரும் திங்களும்" என்ற கவிதையும் இக்காலப் பகுதியிலே தோன்றிய கவிதைகளுட் குறிப்பிடக்கூடியதாகும்.

முற்போக்குச் சித்தாத்தங்களை உள்வாங்கிச் சமகாலச் சமூக நிலமைகளைச் சுட்டிக்காட்டும் அரசியல் நிலைப்பட்ட கவிதைகளும் இக்காலப் பகுதியிலே தோற்றம் பெறுகின்றன. தொழிலாளி, முதலாளிப் பிரச்சினைகள், சுரண்டல், சமூக ஏற்றத்தாழ்வுகள், ஏழை மக்களின் வாழ்வியல் அவலங்கள் முதலிய பண்புகளைக் கொண்டவையாக இவை அமைந்தன. எம். ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை முதலானோர் இந்த வகையிலே விதந்து குறிப்பிடப்படக் கூடியவர்கள். புதுவை இரத்தினதுரையின் பிற்காலக் கவிதைகளிலே பிரசாரப் பண்பு மேலோங்கிக் காணப்படுகிறது என்று விமர்சகர்கள் கூறுவதையும் முற்றாக நிராகரித்து விடமுடியாது.

முற்போக்குச் சித்தாங்கங்களுடன் இணைந்தொழுகாது முற்போக்குச் சிந்தனையுடன் சமூகச் சீர்திருத்தக் கவிதைகளைப் படைத்த ஓர் கவிஞர் குழாத்தினையும் இக்காலப்பகுதியிலே காணமுடிகின்றது. இந்த வகையிலே காரை சுந்தரம்பிள்ளை, கவிஞர் கந்தவனம், மு. பொன்னம்பலம் முதலியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்களாவார்.

1970 களில் ஈழத்துத் தமிழ் கவிதை மரபிலே புதுக் கவிதை மரபு வளரத் தொடங்குகின்றது. எழுபதுகளுக்கு முன்னரே புதுக்கவிதை, வசனக்கவிதைகள் என்ற வகையிலே சிற் சில கவிஞர்கள் ஈடுபாடு காட்டினர். பலத்த வாதப்பிரதி வாதங்கள் இக்கவிதை மரபு பற்றி நடைபெற்றன. இவ்வாதப்பிரதி வாதங்கள் ஈழத்துத்தமிழ்க் கவிதை மரபுக்கு வலுவூட்டின என்றே கருதவேண்டும். தமிழ் நாட்டுப் புதுக்கவிதையின் செல்வாக்குக்கு உட்பட்டுத் தமது எண்ணங்களை, உணர்வோட்டங்களைப் புலப்படுத்துவதற்கு யாப்புச் சிறையை உடைத்துக் கொண்டு கவிதையெழுதும் தலைமுறையொன்றும் இக்காலப்பகுதியிலே உருவாகின்றது. எழுபதுகளில் தோற்றம் பெற்ற புதுக்கவிதை மரபு இன்று வியக்கத்தக்க அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. என்றே கூற வேண்டும். தமிழகத்துப் புதுக்கவிதைகளை விட ஈழத்துப்புதுக் கவிதைகள் பன்மடங்கு தரம் வாய்ந்தவையாக இன்று கருதப்படுகின்றன. இப்புதுக்கவிதை மரபிலே குறிப்பிடக்கூடிய பலர் உள்ளனர். பதச்சோறாக தா. இராமலிங்கத்தினையும் வ.ஐ.ச.ஜெயபாலனையும், சுட்டிக்காட்டலாம்.

எண்பதுகளில் ஈழத்துத் தமிழ்க் கவிதை பெருமளவுக்குப் புதுக்கவிதை மரபாகவே பரிணமிக்கின்றது. ஈழத்தின் சமூக, அரசியல், பொருளாதார நிலமைகளாற் பாதிக்கப்பட்ட இளைஞர் தலைமுறையொன்று

இக்காலப்பகுதியிலே கவிதைக் களத்திலே பிரவேசிக்கின்றது. சுய அனுபவ உணர்வுகளின் அடிப்படையிலே சமகாலப் பிரச்சனைகளைப் பாடுபொருளாகக் கொண்டு இத்தலைமுறையினர் கவிதைகளை எழுதினர். இளைஞர் இயக்கங்களுடன் தம்மை இணைத்துக் கொண்ட பலரும் தமது நேரடி அனுபவங்களை கனதியான கவிதைகளாய்ப் படைத்தனர். இவ்வியக்க கவிஞர் குழாத்துடன் முந்திய பரம்பரையினரும் ஒரேவிடயங்களில் இணைந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. இன்றைய ஈழநாட்டிலே தமிழ்க்கவிதை மரபுக்குச் செழுமையூட்டியோர் பலராவர். இவரது கவிதைகள் நூல்களாக வெளிவந்தமையோடு அவ்வப்போது சஞ்சிகைகளிலும் வெளியாயின. ஈழநாட்டிலே தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பல பகுதிகளிலுமிருந்து இத்தகைய இளைஞர் குழாம் கவிதைகளை எழுதத்தொடங்குகின்றது. மலைநாடு உள்ளிட்ட தென்னிலங்கைப் பகுதி முஸ்லிம் இளைஞர்களும் வீச்சான புதுக்கவிதைகளை எழுதி வருகின்றனர்.

அறுபதுகளில் தோன்றிய கவிஞர் குழாத்தில் குறிப்பிடக்கூடிய சிலர் எழுபது, எண்பதுகளில் புதுக்கவிதை மரபுக்குள்ளும் தம்மை இணைத்துக் கொண்டமைக்குப் புதுக்கவிதையின் வீச்சும் வெற்றியும் காரணமெனலாம். இந்த வகைக்கு மாதிரியாக எம் ஏ.நுஃமான், முருகையன் முதலானோரைக் குறிப்பிடலாம்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றிலே குறிப்பிடக்கூடிய முக்கிய அம்சமாக விளங்கும் பெண்ணியம் பற்றிய கவிதைகளும் இக்காலப்பகுதியிலே முனைப்புப் பெறுகின்றன. பெண்கள் எதிர்நோக்கும் சமூக அரசியற் பிரச்சினைகளைப் பற்றிப் பெண்களே கவிதை படைக்கும் காலப்பகுதியாகவும் இதனைக் காணமுடிகிறது.

பெண்களின் சமூகப் பிரச்சினைகள் முன் எப்போதும் காட்டப்படாத அளவுக்கு இப்பெண் கவிஞர்களாலே காட்டப்பட்டுள்ளது எனலாம். சங்கரி, சிவரமணி, ஒளவை முதலியோர் விதந்து குறிப்பிடக்கூடியவர்கள்.

எழுபதுகளுக்குப் பின்னர் 80,90 களில் ஈழத்துத் தமிழ்க் கவிதை பல்வேறு வகையிலும் புதிய பரிமாணங்களைப் பெற்றுச் செழுமையடைந்துள்ளது. என்பதை இலகுவாக மறந்து விட முடியாது.

இக்காலப்பகுதியில் புதுக்கவிதை விரைவாகவும் வேகமாகவும் வளர்ச்சியடைந்து வருகின்றமை உண்மையே யெனினும் மரபுக் கவிதை முற்றாக வீழ்ச்சியடைந்து விட்டது எனக் கூறமுடியாது.

இன்றும் செழுமையான மரபுக் கவிதைகள் ஓரளவுக்கு வெளிவந்து கொண்டே இருக்கின்றன. பழைய மரபினரும் புதிய தலைமுறைக் கவிஞர்கள் சிலரும் இன்றும் மரபுக் கவிதைகளை எழுதுகின்றமையை அவதானிக்கமுடிகின்றது. ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் வரலாற்றிலே புதுக்கவிதைகள் கோலோச்சும் இக்காலப்பகுதியிலே சிலர் அற்புதமான மரபுக் கவிதைகளையும் எழுதி வருகின்றனர். இந்த வகைக்கு உதாரணமாக கவிஞர் சோ. பத்மநாதனைக் குறிப்பிடலாம்.

இதுவரை ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாறு பற்றிச் மிகச்சுருக்கமாகக் குறிப்பிட்டோம். இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதையின் சிறப்பம்சங்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டுவது இக்கட்டுரைக்கு மிக முக்கியமானது என்று கருதுகின்றேன்.

யாப்புச் சிறையை உடைத்துப் புதுக்கவிதை மேற்க்கிளம்பி தன்னாதிக்கத்தை நிலை நிறுத்தத்தொடங்கிய காலகட்டத்திலே ஈழத்துக் கவிஞர்கள் பலர் யாப்பினைச் சிறையாகக் கருதாது அதனைக் கவிதையைக் காவிச் செல்லும் வாகனமாக பயன்படுத்தினர்.

யாப்பு நெறிக்குள் நின்று கொண்டே வழக்குச் சொற்களையும் சொற்றொடர்களையும் கையாண்டு பேச்சோசைப் பண்புடன் கட்புலச்சார்பான கலைப்படைப்பாகக் கவிதையைக் காட்டினர். கவியரங்குகள் வழிமுகிழ்ந்த இப்பண்பு கவிதை அச்சிடும் முறையிலூடும் புலப்படுத்தப்பட்டது. இந்த வகையில் பலவகையான யாப்பு வடிவங்களையும் கையாண்டு, மரபு வழி வடிவத்திலிருந்து விடுபட்டு, ஓசை ஒழுங்கின் அடிப்படையிலே கட்புலச்சார்புடைய, படிமச் சிறப்புடைய கவிதைகள் எழுதியோரில் மகாகவி, முருகையன், நீலாவணன், எம்.ஏ. நுஃமான் முதலியோர் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்களாவார். யாப்பு நெறிப்பட்ட இவர்களது கவிதைகளை யாப்பை மீறிய புதுக்கவிதைகள் என்று கருதியோரும் உளர். தனிமனித உணர்வுச் சூழலையும் அன்றிச் சுய அனுபவங்களையும் சமூக அவலங்களையும் இலேசாக இளையோடும் நகைச்சுவைத் தன்மையுடனும், குறியீட்டுப் பாங்குடனும் புலப்படுத்தி ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபுக்கு இவர்கள் வளம் சோத்தனர்.

தமிழ்க் கவிதை மரபுக்கு இப்போக்குப் புதியதொன்றாகவே கருதப்பட வேண்டியது. பேச்சோசையும் வழக்குச்சொற்களும் குறியீட்டுப்பாங்கும் நாடகங்களையும், சிறு காவியங்களையும் இவர்கள் படைத்தளித்தமையும் ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் மரபிற்குச் செழுமை சேர்த்தன எனலாம். இந்த வகையிலே முருகையன், மகாகவி முதலியோர் பா நாடகங்களை எழுதிப் பெரு வெற்றி பெற்றனர். இந்தப் பா நாடகங்கள் மேடைகளிற் காட்சிப்படுத்தப்பட்டுப் பெரும் வெற்றிகளையும் பெற்றன. மகாகவியின் கோடை, புதியதொரு வீடு முதலானவையும் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவை. முருகையனின் பா நாடகங்களையும் மகாகவியின் பா நாடகங்களையும் ஒப்பீட்டு அடிப்படையிலே நோக்கும் பொழுது இவ்விருவருக்குமிடையேயுள்ள சமூக நோக்கும் தல்லியமாக தெரிய வருகின்றது.

பா நாடகங்களைப் போலவே இவர்கள் காவியங்களும் படைத்தனர். முற்குறிப்பிட்ட கவிதைப் பண்புகளுடன் உருவான இவர்களது காவியங்கள் மரபு வழிக் காவிய மரபுகளில் இருந்து விடுபட்டனவாம். புதிய பொருள் மரபிலே சிந்தனையை தூண்டுவனவாக அமைந்தன மகாகவியின் சாதாரண ஒரு மனிதனின் சரித்திரம் நீலவாணனின் முற்றப்பெறாத காவியமான வேளாண்மை முதலியன இந்த வகையிலே குறிப்பிடக் கூடியவையாகும். ஈழத்துத் தமிழ்க் கவிஞர்களின் நவகாவியம் படைக்கும் ஆற்றலை இக்காவியங்கள் புலப்படுத்துகின்றன.

ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பரப்பிலே தனித்துவமுடையதாய்க் காணப்படும் மற்றொரு வடிவம் மகாகவியின் 'குறும்பா' ஆகும். பெயருக்கேற்ற வகையில் குறுகியதாகவும், குறும்புத்தன்மை கொண்டதாகவும் அமையும். இவ்வடிவம் ஈழநாட்டிற்கே உரியதொன்றாகக் கருதப்படுகிறது. குறும்பாவின் பொருள் விளக்கம் கருதி வரையப்பட்ட ஓவியங்கள் இதன் புதுமைத்தன்மையையும் பொருட்பொலிவையும் காட்டும். அன்றாட மனித உணர்வுகளைப் பெரும்பான்மையாகவும் சமூகப் பிச்சினைகளைச் சிறுபான்மையாகவும் புலப்படுத்தம் 'குறும்பா' விலூடும் மகாகவியின் இலக்கிய நோக்கையும் கண்டு கொள்ள முடிகின்றது.

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதை பரப்பிலே குறிப்பிடக்கூடிய இன்னொரு அம்சம்

இக்காலத்திலெழுந்த மொழிபெயர்ப்புக் கவிதைகளாகும். உலகப் பொதுமைக்குள் எமது நாட்டுப்பரிரச்சினைகளுக்கும் உலகப் பொதுமைக்குள் எமது நாட்டுப் பிரச்சினைகளைத் துலக்க கூடியதாக அமைந்த பல பிறமொழிக் கவிதைகள் இக்காலப் பகுதியிலே மொழி பெயர்க்கப்பட்டன. ஆங்கில மொழிப் புலமையும் கவிதா ஆற்றலும் கொண்ட கவிஞகளே பெரும்பாலும் இம்மொழி பெயர்ப்பு முயற்சிகளில் ஈடுபட்டனர். ஓசை ஒத்திசையுடன் மூலக்கவிதை சுட்டிய பொருளைச் சிதைக்காது மொழி பெயர்ப்புக்களைச் செய்தனர். அறைக்குள் வந்த ஆபிரிக்கா, 'வானம்' முதலியன இந்த வகையிலே குறிப்பிடக்கூடியன. கே. கணேஷ், முருகையன், சோ. பத்மநாதன், நுஃமான், என். சண்முகலிங்கன் முதலியோர்களை நல்ல மொழி பெயர்ப்புக் கவிதைகளைத் தந்தவர்களாகச் சுட்டிச்சொல்லலாம்.

ஈழத்துக் கவிதை வரலாற்றிலே குறிப்பிடக்கூடிய இன்னொரு அம்சம் புலம்பெயர் கவிதைகளாகும். ஈழத்து அரசியற் சூழ்நிலைகளால் புலம் பெயர்ந்து சென்ற இளைய தலைமுறைக் கவிஞர்களே இத்துறையில் தமது திறனைக் காட்டிக்கொண்டிருக்கின்றனர். புதுக்கவிதை மரபுக்கு முன்னர் சுட்டிய காரணங்களையே இப்புதுக் கவிதைகள் கொண்டிருந்தபோதும் இனந்தெரியாத ஒரு சோகம், இழப்பு, தவிப்பு, தாய்நாட்டு உணர்வு முதலான அம்சங்களை ஆத்மாவிலிருந்து பிழிந்து தருவதாகப் புலம் பெயர் கவிதைகளிற் பல அமைகின்றன. அண்மையில் வீரகேசரி வார இதழில் வெளிவந்த 'இந்துமாகடலே' என்ற கவிதையை இந்த வகைக்குச் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். இங்கிருக்கும் பொழுதே கவிஞர்களாக உருவாகியவர்களுடன் புதிய பரம்பரையினரும் இந்தத் துறையிலே சுவடுகளைப் பதித்து வருகின்றனர். இந்தவகையில் ஈழத்துக்கவிதை வரலாற்றிற்குப் புலம் பெயர் கவிதைகளும் வளம் சேர்த்து நிற்கின்றன.

ஈழத்து அரசியற் சூழ்நிலை காரணமாகப் போராட்ட உணர்வுகளைத் தூண்டும் வகையிலும் எமது வாழ்வின் அவலங்களின் யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளும் வகையிலும் பல கவிதைகளும் இசைப்பாடல்களும் இக்காலப் பகுதியிலே தோன்றியமையும் குறிப்பிடக்கூடிய அம்சமாகும். இம்மரபின் தலைச்சானாகப் புதுவை இரத்தினத்துரையைச் சுட்டிக்காட்டலாம்.

புதியதொரு (பூ) தோட்டம்

உயிர்களிடத்தில் உனக்கு இருக்க வேண்டியது	அன்(பூ)பு
இருக்கக் கூடாதது	வம்(பூ)பு
எண்ணத்தில் உனக்கு இருக்க வேண்டியது	பண்(பூ)பு
இருக்கக் கூடாதது	தப்(பூ) பு
செயலில் உனக்கு இருக்க வேண்டியது	பிடிப்(பூ)பு
இருக்கக் கூடாதது	அருவெறுப்(பூ)பு
வாழ்க்கையில் உனக்கு இருக்க வேண்டியது	விருப்(பூ)பு
இருக்கக் கூடாதது	வெறுப்(பூ)பு
கடமையில் உனக்கு இருக்க வேண்டியது	பொறுப்(பூ)பு
இருக்கக் கூடாதது	கடுப்(பூ)பு
காதலில் உனக்கு இருக்க வேண்டியது	மதிப்(பூ)பு
இருக்கக் கூடாதது	சலிப்(பூ)பு
மணவாழ்க்கையில் உனக்கு இருக்க வேண்டியது	இனிப்(பூ)பு
இருக்கக் கூடாதது	கசப்(பூ)பு
இதை நீ உன் உயிருள்ளவரை	நம்(பூ)பு
உன் வாழ்க்கையில் கிடைக்கும் புதியதொரு	தெம்(பூ)பு

ரா. தினேஷ்னி
A/L 99
வர்த்தகப் பிரிவு

தமிழிலக்கியத்தில் இந்துசமயம்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்து சமயமும் உடன் வளர்ந்ததாக அறிய முடிகின்றது. ஆனால் மனித இனத்தைப் பற்றி ஆராய்பவர் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயங்குவர். சமய உணர்வு என்பது பல்வேறு வகைகளில் இன்று உலகெங்கும் காணப்படுகின்றது. மேனாட்டு மொழிகளில் சமயம் என்பதற்கு நேராக வழங்கும் Religion என்னும் சொல் இதனை விளக்கி நிற்கிறது. நெறி அல்லது வழி என்ற பொருளில் பல சமயங்கள் கருதப்பட்டு வந்துள்ளன. தமிழ் நூல்களிலும் திருநெறி, செந்நெறி என்னும் சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. பொதுவாகச் சமயமென்பது மனிதனுக்கும் மனிதநிலைக்கும் மேற்பட்டதாகவுள்ள ஆற்றல் அல்லது ஆற்றல்களுக்கு உள்ள தொடர்பு பற்றியதாகப் பலராலும் கருதப்படுகிறது.

இந்துசமயம் என்பது இந்திய நாட்டிலுள்ள மக்களின் சமயம் என்று கொள்ளப்படும். சிந்துநதிக்கரையில் வாழ்ந்தவர்களைக் குறிக்கும் 'உறிந்து' என்ற பாரசீகச் சொல்லை கிரேக்கர் 'இந்த ' என வழங்க அவர் வழக்கைப் பின்பற்றி அனைவரும் வழங்கலாயினர். இந்திய நாட்டில் வாழ்ந்தவர்கள் சமயம் என்று கொண்டால் இந்துசமயம் என்ற தொடர் பல்வேறு மதங்களையும் அடக்கியதாக விளங்குகின்றது. இந்து என்ற சொல் இமயம் முதல் குமரி வரையுள்ள பரத கண்டத்தாரது நாகரிகத்தைக் குறிப்பதேயன்றி சமயம் ஒன்றைக் குறிப்பதல்ல எனப் பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஒரு சமயத்தின் பெயர் குறிப்பிடப்படும்போது அதன் நூல் பற்றியோ தலைமையாசிரியர் பற்றியோ அந்நூல் பற்றியோ குறிப்பிடுவதே வழக்கமாகும். 'சைவம்', 'வைஷ்ணவம்' என்னும் சமயப் பெயர்கள் அவ்வச்சமயக் கடவுட் பெயரால் வழங்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ மதமும் முகம்மதிய மதமும் அவ்வச்சமயத் தலைவர்களின் பெயரால் வந்துள்ளன. புத்தமதமும் அருகதமும் கூட அவ்வாறே வந்துள்ளன. வேதநெறி. வேதாந்தம், சமார்த்தம் என்பன முறையே வேதம், வேதாந்த சாஸ்த்திரம், ஸ்மிருதி என்னும் சொற்களின் வழிவந்தன. ஆனால் 'இந்து' என்ற சொல்லோ மேற்குறித்த எந்த வகையிலும் வந்ததாகத் தெரியவில்லை. அதனால் 'இந்து' என்பது குறிப்பிட்ட ஒரு மதத்தின் பெயராக அமையாது இந்தியாவில் தோன்றிய சகல மதங்களையும் குறித்து நின்றது. இந்து சமயங்களுள் புத்தசமயம், சமணசமயம், மீமாஞ்சை சமயம், நிரீச்சுரசாங்கிய சமயம், மாயாவாத சமயம், வைணவ சமயம், சைவசமயம் என்பன சிறந்த சமயங்களாகும். இச்சமயங்களைப் பற்றிய கருத்துக்கள் காலத்துக்குக் காலம் தோன்றிய

தமிழிலக்கியங்களில் காணப்படுகின்றன. இலக்கிய வரலாற்றுக் காலப்பகுதியினை அடிப்படையாகக் கொண்டு அவற்றை ஆராய்வதன் மூலம் இக்கருத்துக்கள் பற்றிய விரிவானதும் விளக்கமானதுமான தகவல்களை நாமறிய முடியும்.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் இன்று நம்மிடையே நிலவுகின்றன. அவ்விலக்கியங்கள் அனைத்தையும் தனித்தனியே கற்று அவை கூறும் சமயக் கருத்துக்களை நாமறிந்து கொள்வது மிகவும் கடினமான காரியம். அதனால் அவ்விலக்கியங்களின் கருத்துக்கள் சிறப்புற்றிருந்த காலங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான காலப் பாகுபாட்டினடிப்படையில் தமிழிலக்கியங்கள் கூறும் சமயக் கருத்துக்களை அறிவது இலகுவானதாகும். தமிழிலக்கிய வரலாற்றை ஆராய்வாளர் பலர் தத்தமது நோக்கிற்கும் போக்கிற்கும் ஏற்ப பாகுபாடு செய்துள்ளனர். சி.வை.தாமோதரம்பிள்ளை தொடக்கம் மு.வரதராசன் வரை பலரும் இலக்கிய வரலாற்றுக் காலப்பகுப்பினை எமக்களித்துள்ளனர். ஆனால் அவற்றில் சமயக் கருத்துக்களை எமக்குக் காட்டக்கூடிய பாகுபாடுகளை நாம் உணர்ந்து அவ்வக்கால இலக்கியங்களை அவ்வச் சூழ்நிலைகளின் அடிப்படையில் வைத்து நோக்கிச் சமயக் கருத்துக்கள் பற்றிய தெளிவினைப் பெற வேண்டும். இக்கட்டுரையில் சமயக் கருத்துக்களைக் கூறும் இலக்கியங்களை வகுத்துக் காட்டுவற்காக கலாநிதி ஆ.வேலுப்பிள்ளையவர்களின் காலப்பாகுபாடே அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலம் எனப் பலரால் வழங்கப்படும் காலப்பிரிவினை இயற்கை நெறிக்காலம் எனக் கொள்ளலாம். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள் அக்காலத்துச் சமய நெறிக்கேற்பக் கூறப்பட்டுள்ளன. சங்கநூல்களிலிருந்து தமிழ் மக்களுடைய பண்டைய சமய வாழ்வு பற்றிய குறிப்புக்களை அறிய முடியும். தென்னாட்டில் நிலவிய சமயம் தனித்துவமான பண்போடு இருந்தது. பிற்காலங்களில் ஆரியச் சமயக் கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் அவற்றில் புகுந்தன. எனினும் பலகாலமாக சிறப்பியல்பு கொண்ட ஒரு சமயநெறியைச் சங்ககால மக்கள் கைக்கொண்டிருந்ததைச் சங்கப் பாடல்கள் மூலம் அறியலாம். சங்கநூல்களிலே விட்டுணு, இந்திரன் முதலிய ஆரியத் தெய்வங்கள் பற்றிய செய்திகளும் இடையிடையேயுண்டு. அத்துடன் தமிழுக்கே சிறப்பான முருகன், கொற்றவை போன்ற தெய்வங்களின் வழிபாட்டு முறைகளும் கூறப்பட்டுள்ளன. வெறியாட்டு, நடுகல் வழிபாடு என்பவையும் இக்காலத்தில் நிலவின. சங்ககால இறுதியிலே யாகங்கள் செய்தல், பலியிடுதல் முதலிய வைதீக வழிபாட்டு முறைகளும கைக்கொள்ளப்பட்டன. இக்காலச் சமயநிலை பற்றிய விரிவான தகவல்கள் பேராசிரியர் சு.வித்தியானந்தன் எழுதிய "தமிழர் சால்பு" என்ற நூலில் கூறப்பட்டன. திருமால் முதலிய தெய்வங்கள் முருகனைக் காண்டல் காரணமாகத் திருப்பரங்குன்றம் அடைந்தனரென முருகன்

என்றான் என்று 5ம் பரிபாடல் கூறுகிறது.

அடுத்து அறநெறி நூல்கள் அதிகமாகி எழுந்த காலமாகிய சங்க மருவிய காலத்தை அறநெறிக் காலம் எனப் பாகுபாடு செய்யலாம். இக்காலத்தெழுந்த தமிழ் இலக்கியங்கள் இந்துசமயக் கருத்துக்களைத் தந்துள்ளன. மணிமேகலையில் சமயங்களின் தத்துவக் கருத்துக்கள் பல காணப்படுகின்றன. ஆணவவாதம், சைவவாதம், பிரமவாதம், வைணவவாதம், வேதவாதம், ஆசிவகவாதம், நிகண்ட வாதம், சாங்கிய வாதம், வைசேடிக வாதம், பூதவாதம் என்ற பத்து இந்து சமயங்களையும் புத்தவாதத்தையும் பற்றிய கருத்துக்கள் மணிமேகலையில் உண்டு. சிலப்பதிகாரத்தில் சமணக் கொள்கைகள் கூறப்படுகின்றன. ஆனால் இளங்கோ சமயப் பொதுமையுடையவராகக் காணப்படுகின்றார். மணிமேகலை பௌத்த சமயப் பிரசாரத்தையே முக்கிய நோக்காகக் கொண்டமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் குன்றக்குரவையிலும் வேட்டுவ வரியிலும் தமிழர் வழிபாட்டு முறைகள் கூறப்படுகின்றன. மணிமேகலையில் கடைசி மூன்று காதைகளும் அந்நாளிலே தமிழ் நாட்டில் நிலவிய சமயத் தத்துவங்களை விரிவாகக் கூறுகின்றன. "சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதை" என்றே ஒரு காதை அமைந்துள்ளது. இதனால் மணிமேகலை பிறசமயங்களை அகழும் தன்மையுடையதாயமைந்துள்ளது. பாரத நாட்டில் தோன்றிய சமயங்கள் மட்டுமன்றி புகுந்த சமயங்களின் செல்வாக்கையும் திருக்குறளில் காணமுடிகிறது. ஏனைய அறநூல்களும் ஒழுங்காக வாழ்பவர் இறந்தபின்பு அடையும் கதி அல்லது மறுபிறப்புச் சிறப்பானது என்று கூறின. இக்காலத்துச் சமயப் பிரச்சாரமாகவே இது அமைந்தது. இந்தியச் சமயங்கள் எல்லாவற்றிலும் ஊழின் வலிமை வற்புறுத்தப்பட்டபோதும் சமணம், பௌத்தம், ஆசிவகம் முதலிய சமயங்களிலே சுவை அதிமுக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை அறநூல்கள் தெளிவுபடுத்தின.

சமயநெறிக்காலம் என்று கொள்ளத்தக்க காலமாகக் குறிக்கப்பட்ட காலப்பகுதியொன்று தமிழ் இலக்கிய வரலாற்றில் உண்டு. அதுவே பல்லவர் காலமாகும். இக்காலத்தில் தமிழ் நாட்டில் சைவ, வைதீக சமயங்கள் மறுமலர்ச்சியடைந்தன. பழைய வைதீக நெறிக்கும் சைவ, வைணவ நெறிகளுக்கும் இடையே சில வேறுபாடுகள் இருப்பதை இக்காலத்தெழுந்த இலக்கியங்கள் உணர்த்தின. வேதமும் வேதமோதும் பிராமணர்களும் பழையபடி முக்கியத்துவம் பெறுகின்றனர். வேதவேள்வியாகிய அக்கினி காரியம் அருகி மறைய ஆகமத்திற்கூறப்பட்ட விக்கிரக வழிபாடு கோவில்களிலே இடம்பெறத் தொடங்கியது. வைதீக சமயத்தினர் தமிழ்நாட்டுப் பழைய தெய்வங்கள், வழிபாட்டு முறைகள் என்பவற்றைத் தமது வழிபாட்டு முறைகளோடும், தெய்வங்களோடும் இணைத்தனர். வைதீக சமயம், பழந்தமிழர் சமயம், பௌராணிகர் சமயம் என்று மூன்றும் கலந்த நிலையில் உருவான பக்திமார்க்கம் சமண, பௌத்த மதங்களை வலுவிழக்கச் செய்தது. பக்தி மார்க்கம் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு புராணக் கதைகளைச் சாதகமாகப் பயன்படுத்தியது. இது சைவசமயம் வெற்றிபெற ஏதுவாயிற்று. சமணர்

போற்றிய புலால் உண்ணாமை, கொல்லாமை போன்ற அறக்கொள்கைகள் சைவசமயத்திடம் பெற்றன. சமயங்களில் ஒன்றினது கொள்கைகளின் செல்வாக்கு மற்றொன்றில் இடம் பெறுவது வரலாற்றை நோக்கும்போது அறியக்கூடியது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடிய பாடல்கள் இதனை உணர்த்துகின்றன. அடியார்களை வணங்கும் மரபு ஒன்று ஆரம்பமாகிறது. சுந்தரருடைய திருத்தொண்டர் தொகை தொண்டர் துதியை ஆரம்பித்து வைக்கின்றது. சோழர் காலத்தில் அது சேக்கிழார் பெரிய புராணமாக விரிகின்றது.

சைவத் தேவார திருவாசகங்கள் தமிழ்நாட்டுப் பதிகளையும் அவற்றில் கோவில் கொண்டிருக்கும் சிவனையும், அவன் உருவங்களையும், நாள் வழிபாடு, விழா வழிபாடுகளையும், சமயக் கோட்பாடுகளையும், விரிவாக எடுத்துக் கூறுகின்றன. வைணவ நாலாயிரப்பிரபந்தங்களில் தேவாரத் திருவாசகங்களைப் போன்று ஆழ்வார்கள் திருமாலைப் பாடினர்.

திருஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரங்கள் சிவபெருமான் ஒருவரையே கடவுளாகக் கூறுகின்றன. சிவனுடைய பல வடிவங்களையும் பல பெயர்களையும் அவன் அடியார்களுக்குச் செய்த பல்வேறு அருட்செயல்களையும் பல்வேறு திருவிளையாடல்களையும் அவன் எழுந்தருளியிருக்கும் பல பதிகங்களையும் அவன் இயல்புகளையும் எடுத்துரைக்கின்றன. தமிழர்களுடைய உருவ வழிபாடு பற்றிய கருத்துக்களையும் சமயக் கோட்பாடுகளையும் தெளிவாக விளக்க முயல்கின்றன. கோவில் வழிபாடு பற்றிய கருத்துக்களையும் விழா வழிபாடு முதலியவற்றையும் கூறி அவற்றின் பயன்களையும் விளக்குகின்றது. கடவுட் கோட்பாடுகளும், உயிர்க்கோட்பாடுகளும், தணைக்கோட்பாடுகளும் சம்பந்தரது தேவாரத் திருப்பதிகங்களில் விளக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று அப்பர் பாடல்களும் சமயக் கருத்துக்களை அறிவதற்குதவுகின்றன. அப்பர் காலத்தில் வடநாட்டிலிருந்து பல சமயங்கள் தமிழ்நாட்டில் புகுந்தன. வடமொழி வேத சமயமும் ஒன்றான மீமாந்சை சமயமும் சிறந்திருந்தன. இவ்விரண்டு சமயங்களும் கடவுள் உண்டு என்ற நம்பிக்கை இல்லாதவை. தவ ஒழுக்கங்களால் வீடுபேறு அடையலாம் என்ற கொள்கையுடையவை. அப்பர் இச்சமயக் கொள்கைகளைத் தமது பதிகங்களிலே இகழ்ந்து பாடுகிறார். சாங்கிய சமயம், வைணவ சமயம் போன்ற சமயங்களின் கொள்கைகளையும் அப்பர் மறுத்துள்ளார்.

சுந்தரர் காலத்தில் வேத சமயப் பார்ப்பாணர்கள் சைவசமயம் புகுந்தனர். சமணசமயத்தாரும், புத்தசமயததமாரும் பெருகி வாழவில்லை. அருகியே வாழ்ந்தனர். இதனால் சுந்தரரது பாடல்களில் பிறசமயக்கருத்துக்களின் பிரதிபலிப்பு அருகியே காணப்படுகிறது. மாணிக்கவாசகரது பாடல்களிலும் இதே பண்பினையே காணமுடிகிறது. வழிபாட்டு முறைகளைப் பற்றிக் கூறுகிறார் அப்பரும் சம்பந்தரும் சைவத்தை தமிழ் நாட்டில் நிலை நிறுத்த வேண்டி

யிருந்தது. ஆனால் சம்பந்தருக்கும் மாணிக்கவாசகருக்கும் இந்நிலை இருக்கவில்லை. மணிவாசகர் காலத்தில் பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. சுந்தரரும் மணிவாசகரும் இசையிலேயே கவனம் செலுத்தினர். நாட்டுப்பாடல் இசையைத் தமது பாடல்களில் பயன்படுத்தினர்.

நாயன்மார்க்கு அடுத்தபடியாக திருமூலர் சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தியவர்களில் சிறப்புப் பெறுகின்றார். இவரின் திருமந்திரம் சைவாகமங்களின் சாரமாக அமைந்துள்ளது. சித்தாந்த சைவமார்க்கத்தையும், யோகமார்க்கத்தையும் விளக்குவதற்காகத் தமிழில் எழுந்த நூல் போலமைந்தது. அறநெறியையும் சைவ நெறியையும் இணைத்துக் காட்டுகிறது. சிவனது படைத்தல், காத்தல், அழித்தல். மறைத்தல். அருளல் எனும் ஐந்தொழில்களும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனும் மூவகை ஆன்மாக்களும் எடுத்துக் கூறப்படுகின்றன. சைவத்தில் பல்வேறு பிரிவுகளான சுத்த சைவம், அசுத்த சைவம், மாக்க சைவம், கருமசுத்த சைவம் என்பன குறிக்கப்படுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம், என்பவையும் சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், என்பவையும் விளக்கப்படுகின்றன. சமாதிநிலை விளக்கப்பட்டு சிவானந்த நடனம், சுந்தர நடனம் போன்ற இறைவன் நடனங்கள் விளக்கப்பட்டுள்ளன. சாக்த மதத்தோடு தொடர்புடைய விடயங்களும் கூறப்பட்டுள்ளன. யோகநெறி விரிவாக விளக்கப்படுகிறது. திருமூலர் யோகநெறிக்கும் பதஞ்சலி குறித்த யோக முறைக்கும் வேறுபாடு உண்டு. சமயத்தை நெறியாக எண்ணி வாழ்வோர் கூறிய விளக்கந் தரும் நூலாகத் திருமந்திரம் அமைகிறது.

வைணவ சமய எழுச்சிக்குக் காரணமான பன்னிரண்டு ஆழ்வார்களும் பாடிய பாடல்களும் பல சமயக் கருத்துக்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றன. திருமழிசை ஆழ்வார் வைணவத்திற்கும் பௌத்தத்திற்கும் பலமாக அமைத்தவர். பிறமதங்களிலே அதிக காழ்ப்புக்கொண்டவராகச் சமணம், பௌத்தம், சைவம் என்பனவற்றை இகழ்ந்து கூறுகிறார்கள். தொண்டரடிப் பெரியாழ்வாரும் பாண்டியர் சபையிலே சமய வாதம் புரிந்து வைணவத்தை வெற்றி பெறச் செய்தவர். சைவமறுமலர்ச்சிக்கு புராண, இதிகாசக் கதைகள் போல வைணவ சமய மறுமலர்ச்சிக்குப் பாகவாத புராணக்கதைகளும், பாரதம், இராமாயணம் போன்ற இதிகாசக்கதைகளும் உதவியதாக ஆழ்வார்களது பெருமைகள் பேசப்படுகின்றன.

பிற்கால இலக்கியங்களிலும் சமயக் கருத்துக்கள் எடுத்துக்கூறப்பட்டன. நாயக்கர் காலப்பகுதியிலும் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலும் இருபதாம் நூற்றாண்டிலும் இருந்த தமிழ் இலக்கியங்களில் அவ்வக்காலச் சூழலுக்கேற்ற வகையில் சமயக் கருத்துக்கள் பிரதிபலித்தன. எனினும் முற்காலங்களைப் போல விரிவான முறையில் பிரதிபலித்தன என்று கூற முடியாது. இந்து சமயங்கள் பற்றிய கருத்துக்களைத் தமிழ் இலக்கியங்கள் கூறும்போது நேரடியாகவும், மறைமுகமாகவும், உத்தி வடிவிலும் காலத்திற்கேற்ற வகையில் பிற்காலங்களில் கூறியுள்ளன.

தலபுராணங்களிலும், வசைப்பாடல்களிலும், புதுக்கவிதைகளிலும் இயல்பாகவே கருத்துக்கள் அமைகின்றன.

இந்து சமய கருத்துக்கள் தமிழ் இலக்கியங்களில் கூறப்படாதிருந்தால் பல விடயங்களை நாம் அறியமுடியாது போயிருக்கும். ஒரு காலத்து இலக்கியம் தன் காலத்துச் சமய நிலையிலும் பாதிக்கப்படும் என்பதற்குத் தமிழிலக்கியங்களே நல்ல சான்றுகளாகவுள்ளன. சமயக்கருத்துக்கள் பற்றிய விளக்கங்களையும் வரலாற்று ரீதியான வளர்ச்சி நிலை மாற்றங்களையும் தமிழிலக்கியங்கள் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகின்றன. இலக்கியத்தில் சமயக் கருத்துக்களின் தாக்கத்தையும் நாம் காணமுடிகின்றது. சங்ககாலத்தை விடப் பல்லவர்காலத்தில் சமயத்தின் தன்மைகளால் தமிழிலக்கியத்தின் போக்கும் வளர்ச்சியும் மாற்றம் பெற்றுள்ளன. பிரச்சாரமாகக் கூட இலக்கியங்கள் எழுந்துள்ளன. சமய நிலைப்பேற்றை வற்புறுத்துவதற்காகவும் சில இலக்கியங்கள் எழுந்துள்ளன. இதனால் இந்து சமயக் கருத்துக்களைப் பற்றியறிவதற்குத் தமிழிலக்கியங்கள் பேருதவி புரிந்து நிற்கின்றன. தமிழிலக்கிய வரலாற்றில் சமய முக்கிய பங்கினை வகிப்பது போன்று இந்து சமய வரலாற்றில் தமிழிலக்கியங்கள் பெரும் பங்கினை வகித்து வருகின்றன.

தமிழ் சிறுகதை - சில குறிப்புக்கள்

கி.விசாகரூபன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
தமிழ்த் துறை
யாழ் பல்கலைக்கழகம்.

தமிழ் இலக்கியப் பரப்பிலே 4வதாக வந்து சேர்ந்த இலக்கிய வடிவங்களுள் சிறுகதையும் ஒன்றாகும். சிறுகதை எனும் கலை வடிவை அதற்கேயுரிய பொருட் பெறுமானத்தோடு அணுகிய முன்னவர் வ.வே.சு.ஐயர் என வழங்கும் வரகனேரி வேங்கட சுப்பிரமணிய ஐயரவர்களே.

வ.வே.சு.ஐயர் கதை எழுதுவதற்கு முன்னரும் தமிழிற் கதைகள் வெளிவந்துள்ளன. பஞ்ச தந்திரக் கதைகள், குட்டிக் கதைகள்,நவதந்திரக் கதைகள் முதலியன ஐயருக்கு முன் வந்த கதைகளிற் குறிப்பிடக் கூடியவை.

தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்தியற்றிய பஞ்ச தந்திரக் கதைகள் பாரம்பரிய மரபுவழி வரும் கதை மரபோடு ஒட்டியதாகவே அமைந்துள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் பொருள் மரபில்லாப் பொய் மொழிக் கதைகளாகவே பஞ்ச தந்திரக் கதைகள் காண்பிக்கப்படுகின்றன. தமிழ் மொழியின் பல்வேறு அம்சங்களிலும் தமது ஆழமான கவனத்தைச் செலுத்திய வீரமாமுனிவர் அக்காலப் பீடாதிபதிகளை நையாண்டி செய்யும் நோக்கத்தோடு சிறிய சிறிய கதைகளாலான ஒரு தொடர் கதையை பரமார்த்த குருவும் சீடர்களும் என்னுந்தலைப்பிலே எழுதினார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இலக்கியம் படைத்த மாதவையா பத்மாவதி சரித்திரம் என்னும் சஞ்சிகையில்இவர் அவ்வப்போது எழுதிய சிறிய கதைகள் பொருள் அமைப்பிலே சிறப்புடையனவாக அமைந்த போதிலும் சிறுகதை என்ற கலைவடிவப் பெற்றிருக்வில்லையென்று விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர். பாரதியார் கவிதைத்துறையிலே அடைந்த வெற்றியைக் கதைத்துறையிலே எட்டவில்லை. வ.வே.சு. ஐயருக்கு முன்னர் தமிழிலே தோன்றியவை சிறிய கதைகளேயன்றிச் சிறுகதை அல்ல எனக் கூறப்படுகிறது.

தமிழிலே நாவல் என்கின்ற இலக்கிய வடிவம் தோன்றி ஏறத்தாழ ஐம்பது வருடங்களிற்குப் பின்னரே சிறுகதை என்னும் இலக்கிய வடிவம் தோற்றம் பெறுகின்றது.1915~1917 காலப் பகுதியிலேயே வ.வே.சு. ஐயர் மங்கயற்கரசியின் காதல் முதலிய கதைகளை எழுதினார் என்று அறிய முடிகின்றது.ஆனால் மங்கையற்கரசியின் காதல் முதலிய கதைகள் தொகுப்பாக 1927ம் ஆண்டிலேயே வெளிவந்தது என்பர். பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களிலே மிகுந்த பரிச்சயமுடையவர் ஐயர் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதிகளிலும் தமிழ் மொழிக்கு உரமும் வளமும் கொடுத்த பல அறிஞர்கள் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களிலே ஆழ்ந்த புலமையுடையவர்களே தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், கிரேக்கம் இலத்தின், ஜேர்மனியம், பிரான்சு முதலிய மொழிகளிலே வ.வே.சு. ஐயருக்கு மிகுந்த பாண்டித்தியம் இருந்தது.

தமிழ் இலக்கியத்திறனை ஆங்கில மக்களுக்கு அவர்களது இலக்கிய மரபுகளை அறிமுகஞ் செய்து வைத்த பெருமை வ.வே.சு. ஐயரையே சாரும். இவர் திருக்குறளை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார்.

Kambaramayanam a study என்னும் ஆங்கில நூலையும் இவர் எழுதினார். இந் நூல் பழைய காவியங்களைப் புதுமுறையிலே அணுகும் பாரம்பரியத்தை தோற்றுவித்தது. எனலாம். முதன் முறையாகக் கம்பனை விமர்சன ரீதியில் அணுகியவரும் வ.வே.சு. ஐயரேயெனலாம்.

பல மொழிகளிலே பாண்டித்தியமும் பழந்தமிழ் இலக்கியங்களிலே பரிச்சயமும் வ.வே.சு. ஐயருக்கு இருந்தமையினாலேயே அவர் கம்பனையும் விமர்சன நோக்கிலே அணுகினர் எனலாம். கிரேக்க, உரோம காவியங்களுடன் ஒப்பிட்டுக் கம்பனைக் காட்டிய வ.வே.சு.ஐயரே தமிழிலே சிறுகதையையும் அறிமுகஞ் செய்தார். வ.வே.சு. ஐயரைத் தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்றும் அழைப்பர்.

தமிழ்ச் சிறுகதை இன்று அடைந்திருக்கும் நிலைக்கு வ.வே.சு. ஐயரே காரணம் எனலாம்.
"இன்று தமிழ் இலக்கியத்தில் தோன்றியிருக்கும் ஒரு புது வேகத்திற்கு ஒரு புது உயிர்ப்புக்கு அடி கோலியவர் வ.வே.சு. ஐயர் என்று சொன்னால் அது மிகையாகாது. எல்லோரும் சுப்பிரமணிய பாரதியார் போலக் கவி பாடவும் வேகம் பெறவம் முடியாது. ஆனால் இலக்கிய விமர்சனத்திலும் கதை எழுதுவதிலும் வசனத்தெளிவிலும் எழுதுகிறவர்கள் எல்லோருமே வ.வே.சு. ஐயர் போல ஆக முயலலாம்".

மேற்காட்டியவாறு கா.நா. சுப்பிரமணியம் குறிப்பிடுவர். தமிழிலே இன்று சிறுகதை சிறப்பாக வளர்ந்திருக்கின்றது. தமிழிலே நாவல் பெறாத வெற்றியைச் சிறுகதை பெற்றிருக்கின்றது. என்று துணிந்து கூறலாம்.

வ.வே.சு.ஐயர் தமிழிலே சிறுகதை எழுதத் தொடங்கும் பொழுது தமிழ்நாட்டு வாசகர்கள் உண்மையான சிறுகதையை அறியாதிருந்தனர். எனலாம். வாசகர் திடீரெனச் சிறுகதைக்குள் பிரவேசிக்கத் துணியாத, பிரவேசிக்க அறியாத ஒரு கால கட்டத்திலேயே வ.வே.சு. ஐயர்சிறுகதை எழுதினர் பல மொழி இலக்கியங்களிலும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் ஐயருக்கு இருந்த ஆற்றலும் ஆளுமையும் தமிழிலே புதுவதான ஒரு இலக்கிய வடிவத்தை அறிமுகம் செய்யத் தூண்டியிருக்கலாம்.

தமிழச் சிறுகதை எவ்வாறு தோன்றியது என்பதை வ.வே.சு. ஐயர் எழுதிய சூசிகைகள் புலப்படுத்தி நிற்கின்றன. மங்கையற்கரசியின் காதல் என்னும் சிறு கதைக்கு ஐயர் எழுதிய சூசிகையின் ஒரு பகுதி பின்வருமாறு

".... குலோத்துங்க சோழனுக்காகக் கலிங்கம் சென்று திரும்பி வந்த கருணாகரத் தொண்டமானுடைய மகளான மங்கயற்கரசி என்னும் மங்கை கருணாகரன் என்னும் வாலிபனைக் காதலிக்கிறாள். அவள் தகப்பன் இறந்து விட்டதால் அவருடைய சிற்றப்பன்தான் தற்காலம் அவளுடைய குடும்பத்திற்குத் தலைவன். அவன் அவளை மார்த்தாண்டன் என்னும் வேறு ஓர் இளைஞனை மணக்கும்படி வற்புறுத்தி வருகின்றான். ஆனால் மங்கையற்கரசி கருணாகரனையே திருமணம் செய்வதென நிச்சயித்து ஒரு நாள் இரவு ஊரின் புறத்திலுள்ள காளி கோவிலுக்கு வரும்படி சொல்லி விட்டுத் தான் குறித்த நேரத்தில் கோயிலுக்கச் சென்று பார்த்துக் கொண்டிருக்கிறாள். பிறகு நடக்கும் விஷயம் கதையிற் தெரியும்'.

மங்கையற்கரசியின் காதல் முதலிய கதைகளின் முகப்பிலே தோன்றும் சூசிகை அல்லது கதைப் பின்னணி நமது மொழியிலே புதுவதாகச் சிறுகதை பிறக்கிறது. என்பதனையே புலப்படுத்துகின்றது. 'ரீதி

புத்தாகையால் சிலருக்கு விளங்காமற் போனாலும் போகலாம் என்று சூசிகையைச் சேர்த்திருக்கின்றேன்.' என ஐயர் குறிப்பிடுவது ஆழ்ந்து நோக்கத்தக்கது. ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள எவருக்கும் விளங்க வேண்டுமென்பதிலே ஐயர் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளார். ஐயரின் இலக்கியக் கொள்கையை, நோக்கத்தைச் 'சூசிகை' யென்னும் முன்னீடு புலப்படுத்தி நிற்கின்றது. வ.வே.சு. ஐயரின் சகபாடியான பாரதியாரும் பாஞ்சாலி சபத முகவுரையிலே 'எளிய பதம் எளிய நடை எளிதிற் புரிந்து கொள்ளக் கூடிய சந்தம்' எனக் குறிப்பிட்டமையை இவ்விடத்திலே ஒப்புநோக்கலாம்.

கதை முகப்பில் சூசிகையெழுதிய ஐயர் சூசிகை பற்றிய எச்சரிக்கையொன்றையும் செய்து விடுகின்றார். இவைகளின் தலைப்பிலே எழுதியிருக்கும் சூசிகைகளைப் படிக்காமல் கதைகளையே துவக்கிப் படித்தால் சுவை அதிகமாகத் தெரியும் எனக்குறிப்பிடுவோர். இக் குறிப்பு சிறுகதையின் உருவம், அமைப்புப் பற்றி ஐயர் கொண்டிருந்த கருத்தினையே புலப்படுத்தி நிற்கின்றது.

சூசிகையின் பின் ஐயரின் 'மங்கையற்கரசியின் காதல்' எனும் கதை பின்வருமாறு தொடங்குகின்றது.

'..... எங்கே பார்த்தாலும் இருள், காரிருள், கறுத்த கனத்த மேகங்கள் வானத்தில் இடைவிடாது சென்று கொண்டிருக்கின்றன. சந்திரன் சற்று நேரத்திற்குத் தோன்றுகின்றான். உடனே முன்னிலும் கனமான மேகங்களுக்கு இடையில் மறைந்து விடுகின்றான். காற்றுச் சீறிக் கொண்டுசெல்லுகின்றது. தூரத்தில் புலியும், கரடியும் உறுமிக் கொண்டிருக்கின்றன. பக்கத்துக் கொல்லைகளில் நரிகள் ஊளையிட்டவண்ணமாக இருக்கின்றன. அதோ அந்த ஆலமரத்தின் மீதிருந்து ஒரு கோட்டான் பயங்கரமாகக் கத்துகின்றது. உடனே நிறுத்தி விடுகின்றது. ....'

புராண இதிகாசக் கதை மரபிலே வளர்ந்த தமிழ் வாசகனுக்கு மேற்காட்டியவாறு தொடங்கும் கதை மரபு புதுமையானதாக அமைந்ததில் ஆச்சரியமில்லை. வ.வே.சு. ஐயர் வீரசாகச, அதியற்புத மோகனப் பண்புகளைக் கொண்ட கதைகளையும் எழுதியுள்ளார். அழேன்ழக்கே, அனார்க்கலி, லைலாமஜ்னூ எதிரொலியாள் முதலியவை மேலைத்தேய இலக்கிய பரிச்சயத்தால் எழுந்த கதைகள் என்று குறிப்பிடுவர்.

வ.வே.சு. ஐயரின் கதைகளிலே மிகச் சிறப்பானதாகக் கொள்ளப்படுவது ' குளத்தங்கரை அரசமரம்' என்னும் சிறுகதையேயாகும். குளத்தங்கரையிலே நிற்கும் அரசமரம் தான் கண்டு கூறுவதாக அமைந்த இக் கதையை உருவம், உள்ளடக்கம் என்னும் இரு அம்சங்களும் சிறப்பாகப் பொருந்தியது. எனறு விமர்சகர்கள் குறிப்பிடுவர்.

புனைக்கதைகளிலே பேச்சுவழக்கு இடம் பெறுவதே சிறப்பானது என்ற கருத்தினை ஐயர் கொண்டிருந்தார். பாத்திரங்கள் நடைமுறையில் உரையாடுவது போலவே கதையிலும் உரையாடல் அமைய வேண்டுமென்பதிலே ஐயர் கவனம் செலுத்தியுள்ளார்'அந்த மரம் நன்னூல் முதலிய இலக்கணங்கள் படித்ததில்லை. அது பேசினபடியே எழுதியிருக்கிறேனாதலால் படிப்போர் அக்கதையில் செந்தமிழை எதிர் பார்க்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்' என்று குளத்தங்கரை அரசமரம் என்னும் கதையைப் பற்றி ஐயர் குறிப்பிடுகின்றார்.

'குளத்தங்கரை அரசமரம்' என்னும் சிறுகதை பற்றி சி.சு. செல்லப்பா 'சிறுகதை பிறக்கிறது' என்ற நூலிலே பின்வருமாறு குறிப்பிடுவர்

'.... தமிழ்ச் சிறுகதைக்குக் குளத்தங்கரை அரசமரந்தான் முன்மாதிரி. இருபதுகள் காலத்தில் அந்தக் கதையைப் படித்த பாதிப்பு இன்றைய தலைமுறைக்குத் தெரிய இடமில்லை ஒரு நல்ல கதையைப் படித்த உள்ளத்தில் அது குடைந்து கொண்டே இருக்கும். ஒரு நல்ல இசையைக்கேட்ட காதுகளில் அது திரும்பத் திரும்ப ஒலிப்பது போல இலக்கியத் துடிப்பு உள்ளோட்டமாக இருந்த உள்ளங்களில் அந்தக் கதை உறைத்து, அந்தப் பாதிப்பால் கதை எழுதத் தாங்களும் உத்வேகம் பெற்றவர்கள் அன்றைய இளம் படைப்பாளிகள்.

இன்றைய தமிழ்ச் சிறுகதைகளுக்கெல்லாம் குளத்தங்கரை அரசமரந்தான் முன்னோடிக் கதையாக அமைகின்றது என்பதையே மேற்காட்டிய கூற்று விளக்கி நிற்கின்றது.

குளத்தங்கரை அரசமரம் என்னும் கதை பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடும் கருத்தும் மனங்கொள்ளத்தக்கது. அவர் பின்வருமாறு குறிப்பிடுவார்:

"..... அவரது குளத்தங்கரை அரசமரம் தமிழ் நாட்டையே முற்றுமுழுதாய்ப் பிரதிபலிக்கின்றது . தம்ழ் நாட்டுப் பிரச்சினைகளைப் பிரதிபலிக்கின்றது. தமிழ் நாட்டுப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்த அதற்கு முன்னர் கதைகள் எழுதப்பட்டிருப்பினும், அத்தகைய பிரச்சினையொன்றினை முற்றிலும் தமிழ் நாட்டிற்கும், வாழ்வு முறைக்கும, மரபுக்கும் இயைய எடுத்துக் கூறுவது குளத்தரை அரச மரமேயாகும்.

குளத்தங்கரை அரசமரம் நல்லதொரு சிறுகதைக்கு வகை மாதிரியாக கொள்ளக் கூடியது என்றும் கூறுவர். "ஊரின் சோபையையும், தாயார் தகப்பனார் ஜீவனையும், என்னுடைய சந்தோஷத்தையும் எல்லாம் ஒண்ணாய்ச் சேர்த்ததுக் கட்டிக் கொண்டு ஒரு நிமிஷத்தில் பறந்து போய் விட்டாளே என் ருக்மணி" என்று குளத்தங்கரை அரசமரம் எனும் கதை நிறைவு பெறுகின்றது.

ஒரு சிறுகதைக்குத் தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்ற நிலைகள் நன்கு அமைவதோடு அது உள்ளத்தில் ஏற்படுத்தும் ஒரு தாக்கம் அல்லது உணர்ச்சிச்சிலிர்ப்பு என்பவற்றைக் கொண்டே அவை நல்ல சிறுகதைகள் என்று விமர்சகர்கள் தீர்மானிப்பர். இந்த வகையிலே வ. வே. சு ஐயரின் குளத்தங்கரை அரசமரம் அமைகின்றது என்று குறிப்பிடலாம். 1881ம் ஆண்டு பிறந்து 1925ல் மறைந்த வ. வே. சு ஐயர் பத்திரிகையாளனாக, கட்டுரையாளனாக, விமர்சகனாக, அரசியல்வாதியாக, சிறுகதையாளனாக, துறவியாக எல்லாம் தனித்தனியாக ஆராயப்பட வேண்டியவர் எனலாம்.

பல்லவர் காலப் பக்தி இயக்கம்
சில குறிப்புகள்

திருமதி. எஸ். சரஸ்வதி B.A.B.Ed
யாழ்பல்கலைக்கழகம்.

சிம்ம விஷ்ணு (கி.பி 575) தொடக்கம் நிருபதுங்கன் வரை (கி.பி 882) தமிழ் நாட்டிலே பல்லவர் ஆட்சி நடைபெறுகின்றது. இக்காலப்பகுதியே தமிழ் இலக்கிய வரலாற்றிற் பல்லவர் காலம் என அழைக்கப்படுகின்றது. பல்லவர் காலம் தமிழர் தம் சமய வரலாற்றில் மிக முக்கியமான காலப்பகுதியாகும். வைதிக சமயங்கள் பல வகையிலும் தமது திறன்களைப் புலப்படுத்தியது இக்காலப்பகுதியிலேயே எனலாம்.

தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றிலே சங்ககாலம் என அழைக்கப்படும் இயற்கை நெறிக்காலம் பல வகையிலும் முக்கியம் வாய்ந்த காலமாக கருதப்படுகிறது. சங்ககால இலக்கியப் பண்புகளிலே சிறப்பானவையாக்க் கருதப்பட்டவை அகமும் புறமுமேயெனலாம். சங்க காலத்தை அடுத்து வருகின்ற காலப்பகுதியிலே அகம், புறம் முதலிய பண்புகளை விட அறநீதிக் கருத்துகளே முதன்மை பெறுகின்றன. சங்ககால மக்களின் வாழ்க்கையின் குறைபாடுகளே சங்கம் மருவிய காலத்தில் அறநீதிக்கருத்துக்கள் பெரும்பான்மையும் தோன்றக் காரணம் என்பர். ஓயாத போர்களாலும் நிறைவேறாத காதல்களாலும் விரக்தியுற்ற சங்ககால மக்களுக்குச் சஞ்சீவியாகச் சமண பௌத்த கருத்துக்கள் அமைந்தன.

சங்ககால மக்களின் வாழ்க்கை முறை, களப்பிரரின் ஆட்சி, சமண பௌத்த துறவிகளின் அயரா உழைப்பு முதலிய பல அமிசங்களினால் தமிழ் மக்கள் மத்தியிலே அறநீதிக்கருத்துக்கள் விரைவாக வேர்விட்டு கிளைபரப்பின. மக்களைப் பார்த்து மன்னனும், மன்னனைப் பார்த்து மக்களுமாகச் சமண மதத்தின்பாற் சேர்ந்தனர். தமிழ் நாடு சமண மதத்தின் உறைவிடமாகியது.

வீறு பெற்று வளர்ந்த சமணத்தையும் அதன் வளர்ச்சியையும் கண்டு மனம் பொறுக்காத வைதிக சமயத்தினர் தம்மிடையேயுள்ள முரண்பாடுகளை மறந்து தமது பலமான எதிரியாக சமணத்தைக் கருதினர். எதிரியை அழிக்கவெனத் திட்டமிட்டு வைதிக சமயத்தினரின் இயக்கம் செயற்படத் தொடங்கியது. இவ்வியக்கம் பலமான தமது எதிரிகளை அழிக்க பல்வேறு வழிவகைகளையும் கையாண்டது. அக்கால அரசியல் சமூக வரலாற்றுப் பின்னணியிலே ஆழ்வார்களும், நாயன்மார்களும் கையாண்ட உத்திகள் மிகவும் பலமான பாதிப்பினை ஏற்படுத்தின. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தீவிரமாக செயற்படட்மையையே இலக்கிய வரலாற்றாய்வாளர்கள் பக்தி இயக்கம் என அழைக்கின்றனர்.

பல்லவர்கால பக்தி இயக்கத்தில் தீவிரமாக செயற்பட்டு தீவிரமாக ஈடுபட்டு தலைமை தாங்கியவர்களாகச் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய நாயன்மார்களையும் பெரியாழ்வார், நம்மாழ் வார் தொண்டரடிப் பொடியாழ்வார் முதலிய ஆழ்வார்களையும் குறிப்பிடலாம்.

தமிழ் நாட்டின் பக்தி இயக்கத்திலே பெண்களும் ஈடுபட்டு உள்ளனர். தீவிரமான பக்தி இயக்கத்திற்குப் பக்கத்துணையாகத் திலகவதியார், மங்கயற்கரசியார் முதலிய பெண்கள் மகத்தான பங்களிப்பினை நல்கியுள்ளனர். இவர்களுக்கு முன்னோடியாக காரைக்கால் அம்மையாரைக் குறிப்பிடலாம். இப் பெண்கள் வரிசையில் வைஷ்ணவசமய ஆண்டாளையும் சேர்த்துக் குறிப்பிடலாம்.

நிலைபெற்ற சமண, பௌத்த மதங்களைத் தமிழ் நாட்டிலிருந்து அகற்ற ஆழ்வார்களும், நாயன்மார்களும் திட்டமிட்டே இயங்கினர் என்பதைப் பக்திப்பாடல்களை நுணுகிக் கற்போர் உணர்வர். வைதிக சமயங்கள் அருகிப் படிப்படியாக மறையுமென சமணர்கள் நம்பினர். இந்த நம்பிக்கையை பொடிப்பொடியாக்கிச் சமண பௌத்தத்தை படிப்படியாக அழித்தொழித்த பெருமை ஆழ்வார்களையும் நாயன்மார்களையுமே சாரும். சமணத்திலிருந்து தமிழ் மக்களை மாற்றுவதற்குப்பல கவர்ச்சிகரமான பிரச்சார உத்திகளை கையாண்டனர். பக்திஇயக்கம் பலம் பெற தமிழ் மக்களின் பலவீனங்களே ஆயுதங்களாக பயன்படுத்தப்படடன.

எக்காலத்திற்கும், எத்தேசத்திற்கும் மொழிப்பற்றுப் பொதுவானதாகவும் மக்களை எழுச்சி கொண்டு ஒன்றிணைய வழிவகுப்பதும் ஆகும். தமிழ் மக்களுக்கு உரித்தானது வைதிகசமயமே என்றும் சிவன் தமிழ் அறிந்த கடவுள் என்றும் பக்தி இயக்கத்தினர் வலியுறுத்திக் கூறினர். "முத்தமிழ் வல்ல ஞானசம்பந்தர்", "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்", "தமிழின் துறைவாய் நுழைந்தனையோ இறைவா" என்பன போன்ற தொடர்கள் பல இடங்களிலே இடம் பெற்றுள்ளன. எமது கடவுள், எமது மொழி எனப்பற்றுமேலிட்ட மக்கள் அந்நியக் கடவுள், அந்நிய மொழி உணர்வு தூண்டப்படடமையாற் விட்டுச் சைவத்தின்பாற் சேர்கின்றனர். பக்தி இயக்கத்தினர் கையாண்ட உத்திகளிலே அவர்கள் பிரயோகித்த மொழிப்பற்று வெற்றிபெற்றதென்றே கருத வேண்டும்.

மொழிப்பற்றைப் போலவே பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பிரதேசப்பற்றினையும் கையாண்டனர். தமிழ் மக்களின் பிரதேசங்களின் இயற்கை வனப்பையும் செழிப்பையும் புகழ்ந்து பாடி "மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்டம்", "நிரை கடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை", "சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறு" என்பன போன்ற ஆயிரக்கணக்கான உதாரணங்களைச் சுட்டிக்காட்டலாம். எமது நாடு, எமது மண், எமது இறைவன் எனப் பற்றுக் கொண்ட தமிழ் மக்கள் சமண பௌத்த மதங்களை அந்நியர்களாகவே கருதினர். இதனால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறுவது தவிர்க்க முடியாதது எனலாம்.

சமண மதம் இறுக்கமான கொள்கைகளையும், கடுமையான துறவினையும் கடைப்பிடித்தது. பக்தி இயக்கத்தினர் தமது மதங்களிலே இவ்விறுக்கப்பண்புகளை அகற்றித் தளர்த்தினர். குடும்ப வாழ்க்கை, திருமணம் செய்தல் முதலியவற்றை சமணம் விமர்சித்தது. சைவம் இறைவனையே குடும்பத்தனாகவும் உலகறிய மணம் புரிந்தவனாகவும் நிலை நிறுத்தியது. "மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி" யே பக்தி இயக்கத்தினர் துதித்தனர். விரக்தியாலும் வேதனையாலும் சமண பௌத்த மதங்களுள் நுழைந்த பலரால் நீண்ட காலம் அதனுள் நின்று பிடிக்க

முடியவில்லை. பக்தி இயக்கத்தினர் காட்டும் நெகிழ்ச்சியால் ஈர்க்கப்பட்ட பலர் சமண பௌத்தத்தை விட்டுச் சைவத்தின்பாற் சேர்ந்தனர் .பக்தி இயக்கம் பல வகை நெகிழ்ச்சியையும் சைவத்திற் புகுத்தியமையை இன்று அதன் பலமாகவும், பலவீனமாகவும் காணப்படுகின்றது எனக் கருதலாம்.

சமண பௌத்த கருத்துகளுக்கு மாறாக பக்தி இயக்கத்தினர் செய்த பிரச்சாரத்திற்குப் பலவகையான உதாரணங்களைச் சுட்டிக் காட்டலாம். சமணர் உயிர்க்கொலையை வன்மையாக கண்டித்தனர். ஆனால் பக்தி இயக்கத்தினர் இதிலும் ஒரு வித நெகிழ்ச்சியைக் கண்டனர். "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்பன போன்ற நெகிழ்ச்சியைப் பக்தி இயக்கத்தினர் பிரகடனப்படுத்தினர். சமணத்தின்பாற் சேர்ந்திருந்த பலரை இந்நெகிழ்ச்சித் திட்டம் சமணத்திற்கு முழுக்குப்போட உதவியாயிருக்கும் எனக் கருதலாம்.

தாம் மேற்கொண்ட முயற்சியினை வெற்றிகரமாக முன்னெடுக்க பக்தி இயக்கத்தினர் பல்வேறு வகையான அற்புதங்களையும் செய்து காட்டினர். அற்புதங்கள் மிகவும் இலகுவாக மக்கள் மனதினைக் கவரக்கூடியவை. ஆழ்வார்களினதும், நாயன்மார்களினதும் வாழ்க்கை வரலாற்றிலே அற்புதங்கலவாத பகுதியே இல்லையெனலாம். அற்புதங்களைக் கண்டு பலர் மதம் மாறினர்.

பக்தி இயக்கத்தினர் தமது நெறியினை வெற்றிகரமாக முன்னெடுக்கக் கலை கலாச்சார நிகழ்வுகளிலும் அவற்றை பேணுவதிலும், இறைவனோடு தொடர்புபடுத்துவதிலும் மும்முரமாக ஈடுபட்டனர். "நாடகம் சாராமை நன்று" எனறு சமணம் போதிக்க இறைவனையே நாடக வேந்தனாகப் (நடராஜன்) பக்தி இயக்கத்தினர் பாடினர். கலை, கலாச்சார நிகழ்வுகளும் மக்கள் மனதை மாற்றிச் சமணத்தில் வெறுப்பையும் ஏற்படுத்தியது எனக் குறிப்பிடலாம்.

பொதுமக்களையும் அவற்றின் கலை பண்பாட்டு அம்சங்களையும் அங்கீகரித்து உயர் இலக்கியமாக்கியதனூடும் பக்தி இயக்கத்தினர் தமது கருத்தினை நிறைவேற்றினர். நாட்டார் இசை, நாட்டார் வழக்காறு முதலியவற்றை தமது பக்திப் பாடல்களிலே பயன்படுத்தினர். அம்மானை, ஊசல், தாலாட்டு முதலிய நாட்டார் இலக்கிய வடிவங்கள் பக்தி இயக்கத்தினரின் கையில் சிறப்பான இலக்கியமாக மாறியது. இத்தகைய பண்பினாலே ஈர்க்கப்பட்ட சாதாரண மக்கள் சமண பௌத்தத்தை விட்டுச் சைவத்தின்பாற் சேர்த்தனர் எனக்குறிப்பிடலாம்.

பக்தி இயக்கத்தினர் தமது எண்ணத்தினை இலகுவாக மக்கள் மத்தியிலே பரப்ப மேற்காட்டிய வழிவகைகளை கையாண்டனர். சம்பந்தர், அப்பர், சுந்தரர், ஆகியோரின் பண்புகள் அனைத்தையும் உள்வாங்கி மணிவாசகர் பக்தி இயக்கத்தின் கொடுமுடியாகத் திகழ்கிறார் எனலாம்.

தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றிலே பண்டு தொட்டு நிலவி வந்த இலக்கியப் பாரம்பரியம் முழுவதையும் அனுசரித்து , அதன் உள்ளூரத்தைப் பேணித் தமது நோக்கத்தை நிறைவேற்றியவர்களுள்

மாணிக்கவாசகர் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியவர். "அம்மை நீ. அப்பன் நீ. அன்புடைய மாமன் மாமியும் நீ." என்று சாதாரண மனித உறவு நெறியிலே சிவபிரான் அழைக்கப்பட்ட போதிலும் மாணிக்கவாசகரே தலைவனின் இணைப்பை ஏற்கும் தலைவியாகித் தவிக்கிறார். பக்தி இயக்கத்தின் உச்சத்தையே இது காட்டுகின்றது.

பெண்களை சமணம் இழித்துக் கூற, இறைவனை "பெண் சுமந்த பாகத்த" னாக சிருஷ்டித்தமை பக்தி இயக்கத்தின் வெற்றியையே சுட்டிக் காட்டுகின்றது. பல்லவர் கால பக்தி இயக்கத்தினர் கையாண்ட பலவகை உத்திகளும் சிறப்பான வெற்றியையே பெற்றன. இன்று வரை தமிழ் நாட்டில் சைவத்தை எதிர்த்துச் சமண பௌத்தம் மேற்கிளம்ப முடியாமல் இருப்பதற்கு பக்தி இயக்கத்தினரின் இடையறா உழைப்பும் விவேகமுமே காரணம் எனலாம்.

19ம் நூற்றாண்டு ஈழத்தில் தமிழ் இலக்கியம்

திருமதி. வாசுகி அரவிந்தன்
யாழ் பல்கலைக்கழகம்

சூழ்நிலைக்கும் காலத்திற்கும் ஏற்றவாறு மனிதனின் பண்பாடும் நாகரிகமும் அமைவது போலவே இலக்கியங்களும் சூழ்நிலைக்கும் காலத்திற்கும் ஏற்றவாறு அமைகின்றன. 19ம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் அந்த நூற்றாண்டின் சூழ்நிலைக்கு ஏற்ப வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றது.

அரசியல் சூழ்நிலைகளும் வாழ்க்கைச் சூழ்நிலைகளும், மேல்நாட்டுத் தொடர்புகளும் இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற இலக்கியங்களின் முக்கியமான போக்குகளையும் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் 19ம் நூற்றாண்டு பெறும் முக்கியத்துவத்தினையும் கணித்துக் கொள்வதற்கு பெரிதும் உதவி நிற்கின்றன.

கி.பி. 1815ம் ஆண்டு பிரித்தானியரால் கண்டி கைப்பற்றப்பட்டதுடன் இலங்கை முழுவதும் அவர்களது ஆட்சிக்குட்படுகின்றது. இக்காலத்திலே (கி.பி. 1796-1948) இலங்கை பல்வேறு விதமான மாற்றங்களுக்குள்ளாகின்றது. சமுதாய ஒத்துழைப்பின்றி தமதாட்சியை நிலைநிறுத்துவது அரிதென்பதை ஆங்கிலேயர்கள் உணர்ந்திருந்தார்கள். அம்முயற்சி சமுதாய மாற்றத்தினை ஏற்படுத்தும் அவாவினைத் தோற்றுவித்தது. சமுதாய மன மாற்றத்தைச் சமுதாயத்தின் மூலம் செய்யக் கருதினார்கள். தமது பண்பாடும் கலாச்சாரமும் வேரூன்றினால் ஆட்சி மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக அமையும் என்று கருதினார்கள். மேல்நாட்டார் தொடர்பு சமூகவாழ்வில் பல திருப்பங்களை ஏற்படுத்தியது. இத்திருப்பங்கள் 19ம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய வரலாற்றில் முக்கியமான பல மாற்றங்களைக் காணுகின்றது. இதனைக் கலாநிதி பூலோகசிங்கம் கூறும் போது "ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே முன்னைய காலப் பிரிவுகளிலும் குறிப்பிடத்தக்கதாகவும் சிறந்ததாகவும் மிளிர்வது 19ம் நூற்றாண்டாகும். இந்நூற்றாண்டிலே தமிழ் இலக்கியம் பல புதிய சக்திகளினாற் பாதிக்கப்பட்டு வளர்ச்சியடைந்தது" என்ற கூற்று மேலும் அரண் செய்கின்றது 19ம் நூற்றாண்டில் பல புதிய சக்திகளின் தாக்கங்கள் புதியதொரு கல்விப் பாரம்பரியத்தையும் புதியதொரு புலமைச்சூழலையும் உருவாக்கின. ஐரோப்பியர் வருகையுடன் ஈழத்துக் கல்விப் பாரம்பரியம்

1.பாரம்பரியக் கல்வி மரபு
2. நிறுவன ரீதியாக அமைக்கப்பட்ட பாடசாலைக் கல்வி மரபு,

என இரு நிலைப்பட்டதாக மாற்றம் பெறுகின்றது.

நிறுவன ரீதியில் அமைந்த பாடசாலைகளில் பல கிறிஸ்தவச் சூழலியே கல்வி போதித்தன. இப் பாடாசாலைகளில் ஆங்கிலம் கற்கப் புகுந்த பலர் தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தக்க பண்டிதர்களிடம் வரண்முறையாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தனர். ஆரம்பத்திலே பெற்ற தமிழ்க்கல்வியும் பின்னர் நிறுவன அடிப்படையிலே பெற்ற சமயக்கல்வியும் சங்கமிக்கும் போது புதிய பரிமாணங்களுடன் ஒரு தமிழ்ப்பணி இயக்கம் உருவாகியது.

19ம் நூற்றாண்டிலே தமிழ் மொழி வளர்ச்சிக்காகப் பாடுபட்டுழைத்த பலர் இருவகைக் கல்வி மரபோடும் தொடர்புடையவர்களாகவே உள்ளனர் பாதிரிமார்களும் மிஷனரிமார்களும் செய்த கல்வித்

தொண்டின் அடிப்படை நோக்கம் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதாக இருந்த போதும் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களையும் ஏற்படுத்தியமையைக் காணலாம்.

19ம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தவை அச்சியந்திரங்களாகும். 16ம் நூற்றாண்டு முதலாய் அச்சுவாகனம் தமிழ் நூற்பதிப்புக்குப் பயன்பட்டதாயினும் அச்சியந்திரம் என்ற மகத்தான சாதனம் பெரும்பாலும் மேனாட்டுக் கிறிஸ்தவப் பாதிரியார்களிடத்தும் சில ஐரோப்பிய நிறுவனங்களிடத்துமே ஏகபோக உரிமையாய் இருந்தது. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தான் எமது நாட்டினர் அச்சியந்திரசாலைகளை நிறுவும் வாய்ப்பையும் உரிமையையும் பெற்றனர். கி.பி. 1835 இற்குப் பின்னர்தான் நம்மவர்கள் அச்சியந்திரத்தை அமைத்து அச்சுப்புத்தகங்களை அச்சிடத்தொடங்கினார்கள். இந்நூற்றாண்டில் நெடுங்காலமாக ஏட்டுச்சுவடிகளாகக் கிடந்த பழை தமிழ் நூல்களும் புதிய தமிழ் நூல்களும் அச்சிட்டு வெளிவரலாயின. இந்த நூற்றாண்டிற்கு முன்னர் இவ்வித நல்ல வாய்ப்பு பொதுமக்களுக்கு ஏற்படவில்லை. இது ஏழை மக்களும் கல்வி கற்பதற்கு வழிவகுத்தது. இதனால் தமிழ் இலக்கியம் வளம் பெறலாயிற்று.

அச்சியந்திரங்கள் நிறுவப்பட்டதை அடுத்து 19ம் நூற்றாண்டிலே பல பத்திரிகைகள் வெளிவரத்தொடங்கின இக்காலப்பகுதியில் உருவாகிய பத்திரிகைச் சூழல் சமய அடித்தனம் கொண்டது கிறிஸ்தவ மிஷனரிமாரே மதம் பரப்புவதெற்கென பத்திரிகைகளை ஆரம்பித்தனர். இலங்கையின் முதல் தமிழ் பத்திரிகையான உதயதாரகை 1841 இல் அமெரிக்க மிசனரி சார்பில் வெளிவந்தது. கத்தோலிக்கப் பாதுகாவலன் இலங்காபிமானி ஆகியனவும் வெளிவந்தன. எனினும் இப்பத்திரிகைகள் சமய எல்லையுள் மட்டும் நின்றுவிடாது பல்வேறு விடயங்கள் பற்றியும் எழுதின. சமய சம்பந்தமாகத் தோன்றிய பத்திரிகைகளாயினும் இவை தமது கோட்பாட்டெல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

19ம் நூற்றாண்டில் மொழியும் சமயமும் மேலைநாட்டாரது ஆட்சியாலும் நாகரீகத்தாலும் வீழ்ச்சியடையும் நிலையில் இருந்த போது காப்பாற்றியவர் நாவலரே. தமிழகத்தை ஈழநாட்டிறகுக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர் "நாவலரின் தற்கால உணர்வே அவரை அவரது சமகாலத்தவர் பலரினின்றும் பிரித்துக் காட்டுகின்றது.நாவலர் வரலாற்றுப் பெருமகன் 19ம் நூற்றாண்டிலே தமிழ்ச் சமுதாயத்திற்கு அவசியமாக இருந்த சிற்சில சுருமங்கள் பிறர்க்கு ஆதர்சமாக அமைந்தன" அவையே பாதை காட்டும் புதுப்பாணிகளாக அமைந்தன என்ற பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் கூற்று நாவலர் 19ம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியத்தின் முக்கிய போக்குகள் சிலவற்றைப் புலப்படுத்தக் காரணமாய் இருந்தவர் என்பதைப் புலப்படுத்துகின்றது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் வசன நடை இலக்கியத்தில் முக்கிய போக்கினை ஏற்படுத்தியவர் நாவலர். தமிழிலே முதன் முதலாக பிரசங்கம் செய்தார். தமிழில் எழுந்த பாடநூல்களுக்கு இவரே வழிகாட்டி. வசன நடையில் குறியீட்டு முறையை முதன் முதலில் பூகுத்தினார். நாவலர் பதிப்பு என்றால் நல்ல பதிப்பு என்று பாராட்டப்படும் அளவிற்கு அவர் நூல்களைப் பதிப்பித்தார்.

அச்சியந்திர வசதிகள் ஈழத்திலே சிறந்த பதிப்பாசிரியர் சிலரை 19ம் நூற்றாண்டிலே தோற்றுவிக்க அரும்பணி ஆற்ற உதவின. இவர்களிலே ஆறுமக நாவலர் சீ.வை. தா.ச. தம்பிமுத்துப்பிள்ளை, வல்வை

வைத்தியலிங்கம் பிள்ளை முதலானோர் சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்கள். இக்காலப் பதிப்பாசிரியர்களுள் சீ.வை.தா. குறிப்பிடத்தக்கவர். இவர் தொல்காப்பியம் முழுவதையும் முதன் முதலாகப் பதிப்பித்த சிறப்புக்குரியவர்.

ஆங்கிலக்கல்வி முறை அறிமுகத்தினாலே தமிழ் மாணவர்களுக்குப் புதிய பாடங்கள் பல போதிக்கப்பட்டன இவற்றைப் பிற மொழியில் பயிற்றுவதிலும் பார்க்கத் தமிழ் மொழியில் பயிற்றுவது சிறந்த பலனளிக்கத்தக்கது என்பதை உணர்ந்து அப்பாடங்களுக்கு வேண்டிய நூல்களைத் தமிழ் மொழியில் இயற்றும் முயற்சிகள் தோன்றின. பாடப்புத்தகங்களின் பெருக்கத்தினாலும் 19ம் நூற்றாண்டில் மொழி, இலக்கியம் என்பவற்றின் நூதனமான வளர்ச்சிக்கு வாய்ப்பு உண்டாகியது. இம்முயற்சிகளில் சிறப்பாக குறிப்பிடத்தக்து Dr.கிறீனும் அவரது மாணாக்கர்களும் விஞ்ஞானக் கல்விக்கு ஆற்றிய அரும்பணிகளாகும். 1850 அளவில் Dr. கிறீன் விஞ்ஞானத்தை அதுவும் சிக்கல் நிறைந்த வைத்தியவியலை மாணவர்களுக்குத் தமிழில் போதிக்க முற்பட்டார். இதனால் தமிழ் மொழியின் வளமும் புதுக் கருத்துக்களை வெளிப்படுத்தும் அதன் ஆற்றலும் அதிகரித்தன.

19ம் நூற்றாண்டில் பல வகையான வசன நூல்கள் தோற்றம் பெற்றன. சிவசங்கர பண்டிதரில் இருந்து சிவபாத சுந்தரனார் வரையில் பேச்சாலும் எழுத்தாலும் வசனநடையைப் பலர் வளர்த்தனர்.

வசனநடை செல்வாக்குப்பெற்ற இந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலே 20ம் நூற்றாண்டின் இலக்கிய வடிவங்களான நாவலும் சிறுகதையும் கருக்கொள்ளத் தொடங்கின. காவலப்பன் கதை, அசன்பேய் சரித்திரம், ஊசோன் பாலந்தை கதை, மோகனாங்கி என்பன ஈழத்து நாவல் இலக்கியத்தின் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றன. கே.ஆர். ஆர்னோல்ட்டின் நன்னெறிக் கதாசங்கிரகம், சந்தியாகுப்பிள்ளையின் கதா சிந்தாமணி என்பனவற்றில் ஈழத்துச் சிறுகதையின் தோற்றத்தைக் காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

19ம் நூற்றாண்டிலே ஈழத்திலே எடுக்கப்பட்ட முக்கியமான முயற்சிகளில் ஒன்று அகராதி ஆக்கமாகும். 1833ம் ஆண்டின் யாழ்ப்பாணத்து அமெரிக்கமிஷன் பாதிரிமார்கள் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழி அகராதிகள் தயாரிக்கத் திட்டமிட்டுப் பணியாற்றி வந்தனர். "யாழ்ப்பாண அகராதி" என்றும் "மானிப்பாய் அகராதி" என்றும் வழங்கிய பேரகராதி 1842ல் வெளியிடப்பட்டது. அதனை அடுத்து வெளிவந்த உவின்ஸ்லோ அகராதி முதல் கதிரவேற்பிள்ளை அகராதிவரை ஈழநாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகராதி முயற்சிகள் பலவாகும்.

19ம் நூற்றாண்டில் ஈழத்தவர் சிலர் தமிழ் இலக்கியத்தினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அம் மொழி அறிந்தவர்களுக்குத் தமிழ்ப் பெருமையை உணர்த்த முற்பட்டுள்ளனர். கு.முத்துக்குமாரசுவாமிப்பிரபு அவர்கள் அரிச்சந்திரன் நாடகத்தை ஆங்கிலத்தில் வசனமாக இயற்றியுள்ளார். பொ. குமாரசுவாமி முதலியார் குறிஞ்சிப்பாட்டுபெரும்பாணாற்றுப்படை முதலியவற்றை வசனமாக மொழி பெயர்த்தார். கிறிஸ்ரோ பிரிரோ யாழ்ப்பாணவைபவமாலையை மொழிபெயர்த்துள்ளார். கெலக் விசுவநாதபிள்ளையும் யாழ்ப்பாணம் மோசஸ் சிந்தாமணி வேலுப்பிள்ளையும் திருகோணமலை த.சரவணமுத்துப் பிள்ளையும் ஆங்கிலத்தில் இருந்து தமிழ் மொழியிலே பலவற்றை மொழி பெயர்த்துத் தந்துள்ளனர்.

தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களின் முன்னோடியாகத் திகழும் சைமன் காசிச்செட்டியார் எழுதிய (1807-1860) தமிழ் புளூராக் என்னும் ஆங்கில நூலும் கே.ஆர். ஆர்னோல்ட் எழுதிய (1859) பாவலர் சரித்திர தீபகமும் 19ம் நூற்றாண்டிற்குறியவையாக, 20ம் நூற்றாண்டிலே தமிழ் இலக்கிய வரலாறு எழுத முற்பட்டவர்களுகு உதவுகின்றன. மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் என்னும் நூலினை எழுதத்தொடங்கியது 1895ம் ஆண்டில் என்பது குறிப்பிடத்தக்கது.

19ம் நூற்றாண்டின் இலக்கியப் போக்குகளை அறிந்து கொள்வதற்கு அக்கால இலக்கிய கர்த்தாக்களின் ஆக்கங்களை ஆராய வேண்டியது. அவசியமாகின்றது. அவர்களின் தனித்தவங்கள் சில முக்கிய போக்குகளைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளன. இக்காலப்பகுதியிலே புராணம், குறவஞ்சி, தூது, பிள்ளைத்தமிழ், அந்தாதி முதலிய இலக்கிய வடிவங்கள் ஈழத்தப் புலவரிடையே செல்வாக்குப் பெற்றனவாகத் தெரிகின்றன. இவை பெரும்பாலும் சமயம் அல்லது தலம் சம்பந்தமான வையாக இயற்றப்பட்டுள்ளன. ஆயினும் புராணம் என்ற இலக்கிய வடிவத்தை வைத்துக் கொண்டு சமுதாயச் செய்திகளை அங்கதமாகப் பாட இரண்டொருவர் வழிவகுத்தனர். அவர்களுள் அவசியம் குறிப்பிடப்படவேண்டியவர். "கனகிபுராணம்" பாடிய சுப்பையனார்.

சுப்பையர் அவர்கள் காலத்திற்கியைந்த இலக்கிய வடிவம்மாகப் புராண இலக்கிய வடிவத்தை மாற்றி அமைத்தமை குறிப்பிடத்தக்கதொரு தாக்கத்தை இலக்கிய வரலாற்றில் ஏற்படுத்தியுள்ளது. பழைய இலக்கிய வடிவத்தில் புதியபொருளைக் கையாண்டதால் இது ஒரு திருப்பு மையமாகவும் காணப்படுகின்றத.

அச்சுவேலி காசிநாதப்புலவர் இயற்றிய தலபுராணம், கோப்பாய். இராமலிங்கம் பாடிய கோட்டுப்புராணம் என்ற இரண்டும் சம்பிரதாயத்துக்கு மாறுபட்ட முறையில் சமுதாய அம்சங்களைச் சித்தரிப்பனவாய் எழுந்தனவே.

19ம் நூற்றாண்டில் முகிழ்த்த புதிய இலக்கியச் செயல் நெறிக்கு மற்றுமொரு சிறந்த எடுத்துக்காட்டாக தி.த.சரவணமுத்துப் பிள்ளை எழுதிய தந்தைவிடுதூது என்னும் நூல் விளங்குகின்றது. இந்நூல் இங்கு சமுதாயத்தில் உள்ள பெண்களின் அவல நிலையை விளக்கி அவர்களுக்கு விடுதலை அளிக்கவேண்டிய முக்கியத்துவத்தைக் கூறுவதாக அமைகின்றது.

புராணம், தூது, கீர்த்தனை முதலிய மரபுவழி வடிவங்களைப் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அசாதாரணமான ஆற்றலுடனும் அழகியல் உணர்ச்சியுடனும் கையாண்ட சில புலவர்களே அடுத்தடுத்து வந்த கவிஞர்களுக்கு உந்து சக்திகளாக இருந்திருக்கின்றனர். அந்நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்திலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்து கவிதைத் துறையில் புதுமைகள் நிகழ்த்திய பாவலர் துரையப்பாப்பிள்ளை மேற்கூறிய புலவர்களின் பரிசீலனை முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றனர்.

19ம் நூற்றாண்டிலே நாடகக்கலையும் அதன் மூலம் இசைக்கலையும் குறிப்பிடத்தக்க அளவு ஈழத்திலே வளர்ச்சி பெற்றிருந்தன என்று கருதவைக்கும் சான்றுகள் தமிழ் புரூராக், பாவலர் சரித்திர தீபகம் முதலிய நூல்களிலே காணப்படுகின்றன. இதிகாசக் கதைக்கூறுகளும் சமயப் பொருளுமே பெரும்பாலான நாடகங்களின் கதையாக இருப்பினும் பலரது ஆக்க சக்திகளுக்குக் களமாக அமைந்தன என்பது

மனங்கொள்ளத்தக்கது.

கி.பி 14ம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் ஈழத்திற் பரிணமித்த இலக்கிய எழுச்சி 17ம், 18ம் நூற்றாண்டுகளிலே அந்நியர் ஆட்சி மேலோங்கி நின்றபோது கூட மங்கி விடவில்லை. அந்நியர் ஆட்சிக் காலப்பகுதியிலே தனிப்பட்ட புலவர்களின் முயற்சியால் மேலும் வளர்ந்து வந்த தமிழ் இலக்கியம் புதிய திருப்பு முனைகளைக் கொண்டு மலர்ந்தன. எனினும் 19ம் நூற்றாண்டில் உருவாகிய மாற்றங்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க திசை திருப்பு மையங்களாக அமைவதால் முக்கியத்துவம் பெறுகின்றன. ஈழத்து இலக்கியத்தின் வளர்ச்சிக்கான கூறுகள் 19ம் நூற்றாண்டில் தான் உருவாக்கப்பட்டன.

"சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து மொழி, இலக்கியம் ஆகியவற்றில் ஒருவகையான நெகிழ்ச்சியும் மரபின் பிடியிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு நிற்கும் மனப்பான்மையும் சமய நோக்கிலிருந்து சமூகநோக்கிற்குப் பெயரும் போக்கும் சில இலக்கிய ஆசிரியர்களிடையே ஓரளவு காணப்பட்டமை கருத்திற் கொள்ளவேண்டியதாகும். இவற்றின் விகசிப்பையும் பரிமாணத்தையும் அடுத்த நூற்றாண்டில் அழுத்தமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. " என்று பேராசிரியர் கைலாசபதி கூறுவது குறிப்பிடத்தக்கது.

உயர்தரம் 99.

நவநாகரிகப் பெண்ணே நில்!

பெண்ணே!

நீ பாரதி கண்ட புதுமைப் பெண்ணாயிரு
ஆனபால் நாகரிக மோகத்திலே நாசமாய்ப் போகாதே
சொந்த மொழியிலே சொர்க்கத்தைக் காணு
அடுத்த மொழியிலே ஆடம்பரம் கெய்யாதே

அமைதிக்கு பெயராய் இருந்து விடு
அடுக்கடுக்காய் சாதனை பல செய்து விடு
ஆனால் சாதனை என்ற சாட்டினிலே
உன் பெண்மையை இழந்து விடாதே

ஆள் பாதி ஆடை பாதி என்பதை அரைகுறை
ஆடையிலே காட்டுவதை நிறுத்திவிடு
சாயங்கள் பல தேகமெங்கும் பூசிவிட்டு
தெருவிலே செல்வதைத் தவிர்த்துவிடு

சொந்தப்பிள்ளைக்கு தாய்ப்பால் கொடுக்காது
நாகரிக உலகின் நவீன ஆடையை விட்டுவிடு
அத்தனையும் பொய் என்று உணர்ந்துவிடு
அழகிய பெண்ணாய் நடந்து விடு.

அ. திருவளர்ச்செல்வி
உயர்தரம் 99

1999 இன் பாடசாலை மட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

வாசிப்பு

1ம் பிரிவு

முதலாம் இடம் ~ அமல் அஸ்வினியா ரட்னா
இரண்டாம் இடம் ~ பலராமன் கலாப்பிரியா
மூன்றாம் இடம் ~ எனிசிடஸ் ஸ்டெபி குளோரியா.

2ம் பிரிவு

முதலாம் இடம் ~ சுரேந்திரன் அஸ்வினி
இரண்டாம் இடம் ~ புஸ்பநாதன் திவ்யா .
மூன்றாம் இடம் ~ இலிங்க வேலாயுதம் எழில்வாணி

கட்டுரை

1ம் பிரிவு

முதலாமிடம் ~ மேரி ஜலின்
இரண்டாம் இடம் ~ டேவிட் அர்ஷலா.
இரண்டாம் இடம் ~ ஜெயராஜ் சுபானி,
மூன்றாம் இடம் ~ ஜெயராம் கிஷாந்தினி, பலராமன் கலாகப்பிரியா

2ம் பிரிவு

முதலாம் இடம் ~ இலிங்கவேலாயுதம் எழில்வாணி
இரண்டாம் இடம் ~ தர்மலிங்கம் வாசுகி
மூன்றாம் இடம் ~ பேடினல் சந்திரன் மேரி அனுசியர், நிர்மலஜீவா நிருத்திகா

3ம் பிரிவு

முதலாம் இடம் ~ ராஜரட்ணம் அமுதசுரபி
இரண்டாம் இடம் ~ சிவலிங்கம் சுதர்ஷா
மூன்றாம் இடம் ~ ஜோஜ் ஜோஜினி

4ம் பிரிவு

முதலாம் இடம் ~ ஸ்டீபன் அனற் லக்மினி
இரண்டாம் இடம் ~ ஸ்டீபன் ஜெஸ்மின்
மூன்றாம் இடம் ~ ஜேம்ஸ் தீபாஜினி

5ம் பிரிவு

முதலாம் இடம் ~ கார்த்திகேசு ஆனந்தி
இரண்டாம் இடம் ~ சின்னராஜா இந்திராவேணி
மூன்றாம் இடம் ~ தோமாஸ் மேரி மில்ரட்

குறு நாடகம் பிரதியாக்கம்

திறந்த போட்டி

முதலாமிடம் ~ ஸ்ரீகாந்தன் அபர்னா
இரண்டாமிடம் ~ செல்வராஜ் பத்மினி
மூன்றாமிடம் ~ அ.. ஜே. அனுசியா

கவிதை

4ம் பிரிவு
முதலாம் இடம் ~ சூசைநாதன் அனோலியா
இரண்டாம் இடம் ~ பாலச்சந்திரன் சுபிகா
மூன்றாம் இடம் ~ கொட்வின் சகாய நொயலின்

5ம் பிரிவு
முதலாம் இடம் ~ சின்னராஜா இந்திராதேவி
இரண்டாம் இடம் ~ சண்முகநாதன் சுலேக்கா
மூன்றாம் இடம் ~ கார்த்திகேசு ஆனந்தி
ஆனந்தகுமார் மரியாலோஷினி

சிறுகதை

5ம் பிரிவு
முதலாம் இடம் ~ சண்முகநாதன். சுலேக்கா
இரண்டாம் இடம் ~ பீட்டர் தபித்தா
மூன்றாம் இடம் ~ கார்த்திகேசு ஆனந்தி

4ம் பிரிவு
முதலாம் இடம் ~ B.பிரியா
இரண்டாம் இடம் ~ F.நொய்லின்
மூன்றாம் இடம் ~

பேச்சு

1ம் பிரிவு
முதலாம் இடம் ~ ஸ்டெட்டி குளோடியா
இரண்டாம் இடம் ~ தர்சினி தனகோபன்
மூன்றாம் இடம் ~ இந்துஜா லோகநாதன

2ம் பிரிவு
முதலாம் இடம் ~ சேவியர் லாவண்யா
இரண்டாம் இடம் ~ பேடினல் சந்திரன் மேரி அனுசியா
மூன்றாம் இடம் ~ சத்தியதேவன் துளசிகா

3ம் பிரிவு

முதலாம் இடம் ~ பஷீர் ஆஷாபானு
இரண்டாம் இடம் ~ துரைராஜலிங்கம் சுபாஸினி
முன்றாம் இடம் ~ ஜோஜினி ஜோஜ்

4ம் பிரிவு

முதலாம் இடம் ~ லக்மினி ஸ்டீபன்.
இரண்டாம் இடம் ~ பொன்னம்பலம் சுஜிப்பிரியா
முன்றாம் இடம் ~ நவரட்ணராஜா மேரி ஸ்ரெல்லா

5ம் பிரிவு

முதலாம் இடம் ~ ஆனந்தகுமார் மரியலோஷினி
இரண்டாம் இடம் ~ இராமச்சந்திரன் தினேஷினி
முன்றாமிடம் ~ எட்வின் ஏஞ்சலினா டிசானி

பாவோதல்

1ம் பிரிவு

முதலாம் இடம் ~ தனகோபன் தர்ஷினி
இரண்டாம் இடம் ~ ஜெயராஜ் சுபாஷினி
முன்றாம் இடம் ~ அன்ரு சிரோமி

2ம் பிரிவு

முதலாம் இடம் ~ இலங்கவேலாயுதம் எழில்வாணி
இரண்டம் இடம் ~ நாகநாதன் நீரஜா
முன்றாம் இடம் ~ பாலசுப்ரமணியன் பிரமிளா

3ம் பிரிவு

முதலாம் இடம் ~ பஷீர் ஆஷாபானு
இரண்டாம் இடம் ~ நவரட்ணம் சியாளினி
முன்றாம் இடம் ~

4ம் பிரிவு

முதலாம் இடம் ~ குழந்தைவேல் சங்கீதா
இரண்டம் இடம் ~ F. யசிந்தா
முன்றாம் இடம் ~ R. தர்சினி

5ம் பிரிவு

முதலாம் இடம் ~ சின்னராஜா இந்திராதேவி
இரண்டாம் இடம் ~ தாசன் சர்மிளா
முன்றாம் இடம் ~ பாலசுப்பிரமணியம் யசோதா

தனி இசை

2ம் பிரிவு

முதலாம் இடம் – புஸ்பநாதன் திவ்யா
இரண்டாம் இடம் – நாகநாதன் நீரஜா
மூன்றாம் இடம் – றோபட் நிஷாந்தினி

3ம் பிரிவு

முதலாம் இடம் – இராஜரட்ணம் அமிழ்தினி
இரண்டாம் இடம் – பரமசிவம் சுஹாசினி
மூன்றாம் இடம் – நவரட்ணம் நிலாஜினி

4ம் பிரிவு

முதலாம் இடம் – ராதாகிருஷ்ணன் தர்சினி
இரண்டாம் இடம் – பெர்னான்டோ ஜெசிந்தா
மூன்றாம் இடம் – ஞானநாயகம் மரியாழினி

5ம் பிரிவு

முதலாம் இடம் – அஷ்ஷா மொறாயஸ
இரண்டாம் இடம் – மெடோனா
மூன்றாம் இடம் – நின்ஷி தேவாசீர்வாதம்

தனி நடனம்

1ம் பிரிவு

முதலாம் இடம் – அன்ரு சிரோமி
இரண்டாம் இடம் – ஜோசப் பெனடிக்
மூன்றாம் இடம் – ஜோகநாதன் இந்துஜா

விவாதம்

சிறந்த விவாதிகள்

ஞானானந்தம் சிரோசினி
ஆனந்தக்குமார் மரியலோஷினி
சண்முகநாதன் சுலேக்கா

1999 பாடசாலை மட்டத் தமிழ்த் தினப் போட்டிக்கு நடுவர்களாக செயல்பட்டுச் சிறப்பித்தவர்கள்

திருவாளர் எஸ்.சரவணபவன்
(நீதியமைச்சு, சட்ட வரைஞர் திணைக்கள சிரேஷ்ட தமிழ் மொழிபெயர்ப்பாளர்)

செல்வி. கே. ஸ்ரீகுமாரி
(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.)

செல்வி. ஏ. வானதி
(யாழ். பல்கலைக்கழகம்.)

செல்வி அ. மீனா
(கொழும்பு தமிழ்ச் சங்கம்.)

திறந்த போட்டி	விவாதம் பங்குபற்றியோர்
1ம் இடம்	ஆனந்தகுமார் மரியா லோஷினி நடராஜா வேர்ஜின் நிரஞ்சலா இராச்சந்திரன் தினேஷ்னி
2ம் இடம்	ஞானானந்தன் சிரோஷினி ஸ்டீபன் அனற் லக்மினி இராசையா தேவிகா
சிறந்த இடம்	சண்முகநாதன் சுலேகா ராஜதாஸ் நிதர்ஷினி அலோசியஸ் அனுஷியா
சிறந்த இடம்	தாசன் சர்ளா பொன்னம்பலம் சுஜிப்பிரியா எட்வின் ஏஞ்சலினா டிசானி

அன்று நீ இன்று யார்?

பத்து மாதம் பத்திரமாக தாங்கிய
உன் தாயை மறந்து
பத்து நாள் பழக்கத்தில் வந்தவனோடு
பறந்து விடுகின்றாயே
அந்த தாய் பத்து மாதம் சுமந்த வேதனையை விட
இப்போது தான் அடைகிறாள் உண்மை வேதனை.
இதை அறிவாயா நீ?
ஆம் இன்று உன் பிள்ளை உனக்குச் செய்கிறதே
இன்னும் புரியவில்லையா பெற்றமனம்
ஆம் அன்று நீ இன்று உன்மகள்.

உன்னாலும் முடியும் தம்பி ஒரு கணம் யோசித்துப் பார்.

உன்னால் முடியும் தம்பி
ஒரு கணம் யோசித்துப் பார்
வறுமைப் புயலிலே வாடுகின்ற உன் குடும்பம்
நீயோ வண்ண வண்ண ஆடைகளிலே அலைகிறாய்
கல்வி கற்க வேண்டிய வயதினிலே
காலத்தை கருத்தின்றிக் கழிக்கின்றாய்
சீதனத்தின் கொடுமையிலே சிக்கித்
தவிக்கும் அக்காவிற்கு சிறந்த பதில் ஒன்று சொல்லிவிடடா
ஆயிரம் செலவழிக்கும் பணக்கார நோயினிலே
வாடும் அம்மாவுக்கு மகனாக மாறிடடா
ஆசையெல்லாம் விட்டுவிட்டு ஒழுங்காய் படித்துவிட்டு
பொறுப்புள்ள மகனாய் வேலை ஒன்று தேடி விடு
சமுதாயத்தில் நற் பெயரை வாங்கி
சாதனை பல செய்து விடு
உன்னாலும் முடியும் ஒரு கணம் யோசித்துப்பார்.

அ. திருவளர்ச்செல்வி

ஔவையார்

ஔவையார் ஒரு சிறந்த தமிழ்ப்புலவர் ஆவார். அவர் ஏழைகளோடும், அரசர்களோடும், அறிவாளிகளோடும் பழகினார். ஏழைகள் அவரை "ஔவைப்பாட்டி" என்று அன்போடு அழைத்தனர். அரசர்களும் அறிவாளிகளும், புலவர்களும் மரியாதையோடு "ஔவையார்" என்று அழைத்தனர். அவர் எல்லோருக்கும் அறிவுரை கூறக்கூடிய பல இனிமையான பாடல்களைப் பாடியுள்ளார். அவர் கடவுள் மேல் மிகுந்த பக்தி உடையவர். ஔவையார் பிறந்தவுடனேயே பாட்டுப்பரீடினார். அப்பாடலடியானது "இட்டமுடன் என்தலையில் எழுதிவிட்ட சிவன் செத்து விட்டாரோ" என்பதாகும் இதனால் தாய் கவலையின்றிப் போனார். ஔவையார் திருவள்ளுவரின் சகோதரி ஆவாள். இவர் முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி இறந்த பின் அவரின் புதல்விகளுக்குத் திருமணம் முடித்துவைத்தார். அதியமான் என்னும் அரசன் கொடுத்த நெல்லிக்கனியைச் சாப்பிட்டு அதிக காலம் வாழ்ந்தவர் ஆவார். நல்ல பெண்கள் வாழ்கைத் துணையாக அமையாவிட்டால் ஆண்களை "கூறாமல் சந்தியாசம் கொள்" என்று பாடியுள்ளார். ஔவையார் நல்வழி, முதுரை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நீதி நூல்களை இன்சுவையாகப் பாடியுள்ளார். ஔவையார் பெண் புலவர்களுள் சிறந்தவர் ஆவார்.

முதலாம் பிரிவு
1ம் இடம்
செல்வி இ. மேரிஜலின்
ஆண்டு 5B

ஒற்றுமையின் உயர்வு

நாம் எந்த விடையத்திலும் தனித்து செயல்படுவதை விட ஒருமித்து ஒற்றுமையுடன் செயல்படும் போது தான் எளிதில் வெற்றிப்பாதையை அடைய முடியும். ஆனால் எம்மில் பலர் ஒற்றுமையைக் கடைப்பிடிப்பதில்லை. எம்மில் ஒற்றுமை குறையும் போது தான் பல பிரச்சனைகளும் பிணக்குகளும் உருவாக வழி தோன்றுகிறது. உலகில் உள்ள அனைத்துப் பிராணிகளும் ஒற்றுமையாகவே இருக்கின்றன. ஓழுங்காகச் செல்லும் எறும்புக் கூட்டம் ஒரே புற்றில் சந்தோஷமாக வாழ்கின்றது. மந்தை மந்தையாகச் செல்லும் ஆடுமாடுகள் எவ்வளவு அழகாகச் செல்கின்றன. காட்டில் வாழும் பிராணிகள் ஒற்றுமையாக இருந்து தமக்கு வரும் ஆபத்துக்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்கின்றன.

ஆனால் பகுத்தறிவுள்ள மனிதனோ இனம், மதம், சாதி எனப் பிரித்துப் பிரித்துப் பார்ப்பதைத் தொழிலெனக் கொண்டிருக்கின்றான். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பது பழமொழி. அடம்பன் கொடி மிகவும் மெல்லியது இழுத்தால் இலகுவில் அறுந்து விடும். ஆனால் பல அடம்பன் கொடிகள் ஒன்று சேர்ந்தால் அதன் உறுதி அளவற்றதாகி விடும். எந்தப் பலசாலியும் அதனை அறுக்கமுடியாது. அதனைப்போலவே தனித்து நிற்கும் மனிதனை அழித்து விடலாம் ஆனால் கூடி ஒற்றுமையாக வாழ்பவரை எவராலும் அழிக்க முடியாது.

அன்று முகமது நபி(ஸல்) அவர்கள் "ஒற்றுமையின் கையிற்றை இறுகப்பிடித்துக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார். இயேசு, புத்த பெருமான் ஆகியோரும் தம் மக்களிடையே ஒற்றுமையை வலியுறுத்தினர்.

"சாதிகள் இல்லையடி பாப்பா குல தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று மகா கவி பாரதியாரும் எமக்கு கூறியுள்ளார்.

இன்று உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் மனித நேயமும், சுபீட்சமும், ஒற்றுமையும் பெருக வேண்டும் என்று பாடு படுகின்றனர். "நான்" என்ற ஆணவம் வரும் போதுதான் "நாம்" என்ற ஒற்றுமை இல்லாமற் போகின்றது. தனி ஒருவன் நாடாக முடியாது. குடும்பம், சமூகம் என்பன இணைந்து ஒரு நாடு உருவாகும்.

நாம் ஒற்றுமையாக இருந்தால் எம்மை ஒருவரும் ஒன்றும் செய்யமுடியாது. அத்துடன் நாட்டில் சுபீட்சமும், சமாதானமும் பெருகும். நாடும் வளம் பெறும். செல்வம் பொங்கும். ஆனால் இதனை நாம் கடைப் பிடிக்காவிட்டால் அனைத்தும் பொய்யாகி விடும்.

ஆகவே நாம் ஒற்றுமையாக விட்டுக் கொடுக்கும் மனதுடன் வாழ்வோம் நாம், ஒற்றுமையாக இருந்தால் எம் நாடு உயர்ச்சி பெறும்.

இரண்டாம் பிரிவு 1ம் இடம்
இ. எழில் வாணி
ஆண்டு "7A"

21ம் நூற்றாண்டின் உலகு

உருண்டோடும் நாளில் வாழ்வு கரைந்தோடுகிறது. காலச்சக்கரம் வெகுவேகமாக சுழன்று கொண்டிருக்கின்றது. மனிதன் 21ம் நூற்றாண்டை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் வேளையில் விஞ்ஞானமும் அசுர வேக மின்னல் பாய்ச்சலில் துரத்துகின்றது.

ஆதியில் மனிதன் அடிப்படைத்தேவைகளை இயற்கையைக் கொண்டு பூர்த்தி செய்தான். உதாரணமாக உணவுக்காக பழங்களையும் தாகத்திற்காக விலங்குகளின் பாலையும் நீரையும் பருகினான். உடைக்காக விலங்குகளின் தோல்களையும் தங்குவதற்காக குடிசைகளையும் பயன்படுத்தினான்.

பின்னர் ஆற்றோரங்களை அண்டி வாழ்ந்து விவசாயம் மிருக வளர்ப்பு போன்ற தெரில்களையும் செய்தான். இதனால் அவனுக்கு நீண்ட ஓய்வு கிடைத்தது. ஓய்வு நேரங்களில் உபகரணம், கருவி ஆகியவற்றை ஆக்கியதோடு மட்டுமன்றி இலக்கியம், ஓவியம் போன்ற கலைகளிலும் ஈடுபட்டான்.

சிந்தனா வளர்ச்சியின் உச்சியை அடைந்தான். சிந்தித்தான். செயற்பட்டான். பொன்னான காலத்தைக் கண்ணாகச் செலவழித்தான். சிக்கனமாகச் செலவழித்தான். சிக்கல்களைத் தீர்த்தான், சிதைவுகளைப் புனர் நிர்மாணம் செய்தான். பழயன கழிந்தன. புதியன பிறந்தன.

கோதுமை மணி மண்ணில் மடிந்தால் ஒழிய அதில் பயனில்லை. பேறுகால வேதனை இன்றி தாயிற்குப் பிள்ளைப்பேறு இல்லை. அது போல துன்பத்தின் பின் இன்பம் என உணர்ந்தான். கடுமையாக உழைத்தான். கடிகாரம் நின்றால் வேறு கடிகாரம் மாற்றுவது போல் இதயத்துடிப்பு நின்றால் இதையத்தையே மாற்றுகின்றான். இது வைத்திய சமுதாயத்திற்கே கிடைத்த மாபெரும் வெற்றியல்லவா? அம்மட்டே மனிதர் வாழ இவ்வுலகம் போதாதென்று செவ்வாய் கிரகத்தில் வாழ காலநிலையை உருவாக்குகிறார்கள்.

இதுமட்டுமன்று, பரிசோதனைக்குழாய் முலம் மனிதர்களை படைக்கின்றான். இது மக்கள் விரும்பும் ஒன்றல்லவோ! எய்டஸ், புற்றுநோய் போன்ற குணப்படுத்த முடியாத நோய்களுக்கெல்லாம் தடுப்பூசி, மாற்றுச் சிகிச்சை போன்றவற்றைக் கொண்டு குணமாக்குகிறார்கள்.

சந்திரனில் கால்வைத்தான் நீல் ஆம் ஸ்ட்ரோங், ஆனால் 21ம் நூற்றாண்டில் மனிதன் சந்திரனிலே குடும்பம் நடத்துவான். ஆசிய நாடுகளும் தற்போது அணுகுண்டு பரிசோதனைகளில் இறங்கியுள்ளன.

யப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் பூமியதிர்வின் போது கட்டடங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக "ஸ்ப்றிங்" போன்ற கருவிகளைக் கொண்டு அவற்றை அமைத்துள்ளனர். இது இயற்கைக்கே அமைந்த ஒரு சவாலல்லவா?

வானொலி, தொலைக்காட்சி, மின்விசிறி, மின் அழுத்தி, ஒலிவாங்கி என்ற படிக்கட்டுக்களை எல்லாம் மனிதன் தாண்டி கணனி எனும் புதிய படியில் கால் வைத்தான். இது விஞ்ஞானயுகமே ஆடிப்போகும் அளவுக்கு மனித சமுதாயத்துக்கே திருப்பு முனையாய் அமைந்தது.

அதையும் தாண்டி அதற்குப் போட்டியாக "இன்டர்நெட்" எனும் புதிய கண்டுபிடிப்பினால் உலகமே தலைகீழாக மாறியது. பாமரர்களையும் சற்றே திரும்பிப்பார்க்கச் செய்த புதியதொரு சாதனை. மனித சோதனைகளையும் தாண்டிப் படைக்கப்பட்ட சாதனை இது. போதனை இலகு. சாதனை கடினம் என்பதை நிருபித்த சான்று இது.

"எந்த மனிதனால் பாவம் நுழைந்ததோ அதே மனிதனால் கிறிஸ்தவ சமுதாயம் மீட்கப்பட்டது" என்பது போல ஓசோன் படையில் விழுந்த ஓட்டைக்கு. காரணமான விஞ்ஞானமே அதனை நிவர்த்தி செய்ய எத்தனித்து. "குளோரோ புளோரோ காபன்" இல்லாத குளிரூட்டிகளைக் கண்டுபிடித்தனர். கனிய வளங்களை கண்டுபிடித்தான். இவ்வாறு அடுக்கி கொண்டே போகலாம். 21ம் நூற்றாண்டு உலகுக்கே சவாலான ஆண்டு. சமாதானத்தை எதிர்நோக்கும் மக்களுக்கு சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த ஆண்டு.

"பழமை என்னும் விளக்கெடுத்து
புதுமை என்னும் திரியினை கொழுவி
அர்வம் என்னும் நெய்யினை பெய்து
வாழ்வு என்னும் தீபமேற்றுமின் இருள் கெட"

நான்காம்பீரிவு
கட்டுரை
1ம் இடம்
S. அனற்லக்மினி
ஆண்டு ~10[4]

மந்தரையின் சூழ்ச்சி

தமிழ்த் தினப் போட்டி – பிரிவு 5
குறு நாடகம்
முதலாவது இடம்
ஸ்ரீ. அபர்ணா.உ.த 99.
கலைப்பிரிவு.

கதாபாத்திரங்கள் – கைகேயி, மந்தரை.

திரைச் சீலை – அந்தப்புரக்காட்சி.

மந்தரை :மூடப்பெண்ணே! எழுந்திரு! நீ மோசம் போனாய்! எழுந்திரு! (கைகேயி அவசரமாக எழும்புதல்.)

கைகேயி : மந்தரை என்ன துயரம் நேர்ந்தது? ஏன் இப்படி பதற்றப்படுகிறாய்?

மந்தரை : ஐயோ! இப்படி மோசம் போனாயே.ஒன்றும் அறியாத அப்பாவிப்பெண்ணாயிருக்கிறாய். உன் புருஷன் உன்னை ஏமாற்றி விட்டான். பரதனை மாமன் வீட்டிற்கு அனுப்பிவிட்டு இங்கே அவசரமாக ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

கைகேயி : என் மகன் ராமனுக்கு பட்டாபிஷேகம் என்கின்ற செய்தியைக் கொண்டு வந்தாய். இதைவிட என்ன சந்தோஷம் எனக்கு? இந்தா இதைப் பெற்றுக்கொள். (கழுத்திலிருந்த முத்து மாலையை மந்தரைக்கு கொடுத்தல்.)
(மந்தரைக்கு கோபம் அதிகமாதல், மாலையை வீசி எறிதல்.)

மந்தரை : ஐயோ பைத்தியக்காரி! உன் சக்களத்தியானவள் தன் மகன் பட்டத்திற்கு வர ஏற்பாடு செய்துவிட்டாள் நீ சந்தோஷத்தில் கூத்தாடுகிறாய். உன் புத்தியை நான் என்னென்று சொல்வேன். இராமன் அரசனானதும் அவனுக்கு பரதன் பகையாளியாகிவிடுவான். அரசர் தம் விரோதிகளை கொல்வது வழக்கம். இராமனும் உன் மகன் பரதனைக் கொன்று விடுவான். நாளை பொழுது விடிந்ததும் கோசலை பாக்கியவதியாவாள். நீ அவளுக்கு வேலைக்காரியாவாய். உன் மகனுடைய சுதந்திரமும் பறிபோகும். அவன் இனிமேல் இராமனுக்கு ஒரு சாதாரண வேலைக்காரியாவாள். இனி உனக்குச் சந்தோசமில்லை.
(இவற்றைக் கேட்டு கைகேயி வியப்படைதல்)

கைகேயி : ஏன் இவ்வாறு பயப்படுகிறாய் மந்தரா? இராமனுடைய குணம் எனக்குத் தெரியாதா, தர்மமே வடிவானவன் அல்லவா அவன்? மந்தரை, இராமன் மூத்தவன் அவன் இராஜ்யம் அடைகிறான். அவனுக்குப் பின்னர் பரதன் இராஜ்யத்தை அடைவான். இதற்காக ஏன் வருத்தப்படுகிறாய்? ராமன் என்னிடம் எவ்வளவு அன்பாக இருக்கிறான். தன்னைப் பெற்றவளிடம் கூட அவ்வளவு பிரியம் அவனுக்கு இல்லை. தன் தம்பியரை தன் உயிராகக் கருதுகிறான். அவனைப் பற்றி நீ தவறாகப் பேசுவது சரியல்ல.

மந்தரை : ஐயோ உன் புத்தியை நான் என்னென்று சொல்வேன்? ராமன் சிம்மாசனம் ஏறினால் அத்துடன்

பரதனுடைய ராஜ வாழ்க்கை முடிந்தது. ராமனுக்குப் பின்னர் அவனது மூத்த மகனே அரசாள்வான. தம்பி எவ்வளவு குணமானவனாக இருந்தாலும் அவன் அரசாளஇடமில்லை. ராமனுக்கு செய்து முடித்த பின் உன் மகன் பரதன் அனாதையாவான். பரதனது பிள்ளைகளுக்கும் அரண்மனையில் இடம் கிடையாது. இது உனக்குத் தெரியவில்லையா? ராமன் பட்டம் பெற்றால் நம்முடைய பரதன் மடிந்து போவான். எப்படியாவது பரதனுக்கு பட்டாபிஷேகம் செய்ய வேண்டும. ராமனை ராஜ்ஜியத்திலிருந்து வெளியேற்றவேண்டும்.

கைகேயி : மந்தரை பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தே தீர வேண்டும். இதற்கு என்ன உபாயம் செய்யலாம்? சொல்.

மந்தரை : கைகேயி அது என்ன வித்தை! உபாயம் என்னையா கேட்கிறாய்? உனக்கு ஏன் இவ்வளவு மறதி? அல்லது வேஷம் போடுகிறாயா? நானே சொல்ல வேண்டுமென்றால் சொல்கிறேன் கேள்.

கைகேயி : சொல் மந்தரா. சொல். எப்படியாவது பரதன் நாடாள இராமன் காடாள வேண்டும்.

மந்தரை : அவசரப்படாதே. முன்னொரு காலத்தில் உன் புருஷன் இந்திரனுக்கு உதவியாகச் சம்பவனோடு யுத்தம் செய்யப் போனான் அல்லவா?

கைகேயி : ஆமாம்.

மந்தரை : அப்போது தசரதன் போரில் உடம்பெங்கும் காயப்பட்டு நினைவிழந்த சமயம் அவன் தேரை நீ நடத்திச் சென்று தசரதனின் உடலில் பாய்ந்திருந்த அம்புகளையெல்லாம் மெதுவாக எடுத்து நினைவு தெளியச் செய்து அவனுயிரைக் காப்பாற்றிய போது தசரதன் "இரண்டு வரங்கள் கேள்" என்று கூற "தேவையான போது கேட்கிறேன்" என்று கூறினாய் அல்லவா? நீயே எனக்கு இதைக் கூறினாய். இப்பொழுது மறந்துவிட்டாயா? அவ் வரங்கள் இரண்டையும் இப்போது கேள். முதலாவது வரம் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும். இரண்டாவது வரம் இராமன் பதினான்கு வருடம் காடாள வேண்டும். நான் சொன்னவாறே மன்னரிடம் கேள்.

கைகேயி: சரி மந்தரா.

மந்தரை : போய் பழைய துணியை உடுத்திக் கொண்டு தரையில் படு. அரசன் வரும் போது பேசாதே. கண்ணெடுத்தும் பாராதே. உன் துயரத்தை சகிக்கமாட்டாமல் வரம் தருவான். நம்முடைய காரியம் வெற்றியில் முடியும். அரசன் என்னவெல்லாமோ ஆசை காட்டுவான். அதற்கு உடன் படாதே. வரம் வேண்டும் என்று பிடிவாதமாக இரு. சத்தியத்திற்கு பயந்து அரசன் கட்டாயம் நம் வழிக்கு வருவான்.
(கைகேயி முகம் மலர்ந்து)

கைகேயி : உன் புத்திக் கூர்மையை நான் என்னவென்று சொல்வேன்? மந்தரா என்னைக் காப்பாற்றினாய்.

மந்தரா : தாமதமாகாதே. செய்ய வேண்டியவற்றை உடனடியாக செய். நான் சொன்னதை எல்லாம்

கவனத்தில் வை. பிடிவாதமாக இருக்க வேண்டும். நிச்சயமாக உன் காரியம் சித்தியாகும்.

கைகேயி : மந்தரா, சந்தேகப்படாதே. நான் உறுதியாக இருப்பேன். இதோ பார் (ஆபரணங்களைச் சிதற தரையில் எறிந்துவிட்டு பழைய உடையை அணிந்து கொண்டு தரையில் படுத்தல்.)

காட்சி 11

கதாபாத்திரம் ~ தசரதன், கைகேயி
திரைச் சீலை ~ கைகேயின் அந்தப்புரம் அலங்கோலமாக இருத்தல்
(தசரதன் கைகேயின் அந்தப்புரத்திற்கு வந்து கைகேயின் கோலம் கண்டு அதிர்ச்சி அடைதல். தசரதன் கைகேயிற்கு அருகில் தரையில் அமர்தல்.)

தசரதன் : கைகேயி, உனக்கென்னவாயிற்று! உடம்பில் ஏதாவது வியாதியா? வைத்தியரை வரவழைக்கிறேன் எதுவாயிருந்தாலும் சரிப்படுத்திவிடுவார்.
கைகேயி : என் உடல் நலமாகத் தான் இருக்கிறது. என் மனதில் தான் வியாதி.

தசரதன் : உன்னை யாராவது அரண்மனையில் அவமதித்துப் பேசி விட்டார்களா? யாராவது தவறு செய்திருந்தால் சொல் கடுந்தண்டனை விதித்து விடுவேன். உன்னை யாரும் அலட்சியம் செய்து விட்டார்களா? அல்லது உனக்கு ஏதாவது வேண்டியதாயிருந்து என்னையறியாமல் அதைக்கவனிக்காமல் விட்டுவிட்டேனா? சொல். யாரையாவது தண்டிக்க வேண்டுமா? தயவு செய்து சொல்.(கைகேயி எழுந்து உட்கார்தல் தசரதன் சந்தோசமடைதல்.)

கைகேயி: என்னை யாரும் அலட்சியமாகப் பேசவுமில்லை, நிந்திக்கவுமில்லை, அவமானப்படுத்தவுமில்லை.

தசரதன் : அப்படியாயின் ஏன் இந்தக் கோலம்?

கைகேயி : அரசே உம்மால் ஆகவேண்டிய காரியம் இருக்கிறது. அதை நீர் செய்து தரவேண்டும். சம்மதம் என்றால் சொல்கிறேன்.

தசரதன் : எது வேண்டினும் அதைக் செய்யும் சக்தி எனக்கிருக்க இனி என்ன கவலை? ராமன் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறேன். நீ எது வேண்டும் என்கிறாயோ அதைச் செய்வேன்.

கைகேயி : அப்படியா?

தசரதன் : ஆமாம் இது சத்தியம்.

கைகேயி : அரசனே! நினைவிருக்கிறதா முன்நாளில் நீர் உயிரிழக்கும் சந்தர்ப்பத்தில் உம்முடைய உயிரைக்காப்பாற்றிய போது இரண்டு வரம் தருவதாகக் கூறினீர்களே அப்பொழுது நான் இப்பொழுது வேண்டாம் பின்னர் வேண்டும் பொழுது கேட்கிறேன் என்றேனே நினைவிருக்கிறதா?

தசரதன் : ஆமாம் நன்றாக நினைவிருக்கிறது. அந்த இரண்டு வரங்களும் வேண்டுமா? இப்பொழுதே தருகிறேன்.

கைகேயி : ராமன் மேல் ஆணையிட்டுச் சபதம் செய்திருக்கிறீர் மறுக்க மாட்டீர் என்று நினைக்கிறேன். இதோ கேட்கிறேன். வாக்குத் தவறாதீர். இப்பொழுது அமைத்து வைத்திருக்கும் பட்டாபிஷேக சாமக் கிரிகைகளைக் கொண்டு பரதனுக்குப் பட்டங்கட்டுவீராக. உம்முடைய மகன் ராமன் பதினான்கு வருஷம் வனவாசம் செய்யும்படி உடனே வரம் தர வேண்டும். உம்முடைய சூரிய குலப் புகழையும் பெருமையையும் காப்பாற்றுவீர் என்று கருதுகிறேன்.

தசரதன் : (அதிர்ச்சியடைந்து மயங்கி விழுதல். பின்னர் மயக்கம் தெளிந்து எழும்புதல்.)
உனக்கு என்ன வந்துவிட்டது! ராமன் உனக்கு என்ன தீங்கிழைத்தான்? தன் அன்னையை விட ராமன் உன்னை அதிகமாக நேசிக்கிறான் என்பது உனக்கே தெரியும். ராமனின்றி நான் உயிர் வாழேன் என்பதும் உனக்குத் தெரியும். உன் காலைப் பிடித்துக் கெஞ்சுகிறேன். உன் மனதை மாற்றிக் கொள். வேறு ஏதாவது வரம் கேள்.

கைகேயி : சூரிய குலத்து மன்னர்கள் சத்தியம் தவறாதவர்கள் என்ற குலப்பெருமையை ஒரு நொடியில் தவறவிட்டு விட்டீர்களே. உம்மால் பிற்காலத்தில் வரும் சூரிய குலத்தாரசர்களை மக்கள் ஏளனமாகத் தான் பார்ப்பார்கள். ராமன் மீது ஆணையிட்டு விட்டு இப்பொழுது மறுக்கின்றீர்களே. நீர் வார்த்தை தவறினால் ஏன் உயிரை மாய்த்துக் கொள்வேன். இது நிச்சயம்.

தசரதன் : என் மேல் இரக்கம் கொள் கைகேயி. உனக்கு என் மேல் இருக்கும் அன்பை வைத்துக் கேட்கிறேன் ராஜ்யம் உனக்குத் தந்தேன் என்றே வைத்துக் கொண்டு ராமனுக்கு அதை நீ உன்னுடைய கையாலே ராமனுக்கு கொடுத்து நாளை நடக்க வேண்டிய பட்டாபிஷேகம் நடக்கும் படி செய். நாளை ராமனுக்கு பட்டாபிஷேகமென்று ராஜ சபையில் தீர்மானித்துப் பெரியோர்களுக்கும் ராமனுக்கும் நான் சொன்னதைப் பொய்யாக்க வேண்டாம். என்மேல் இரக்கம் கொள் ராமனுக்கு ராஜ்யத்தை நீயாகக்கொடு உலகமுள்ள வரையில் நிற்கும் பெருங்கீர்த்தியையடைவாய் என் விருப்பம், ஜனங்களின் விருப்பம், பெரியோர்களின் விருப்பம், பரதன் விருப்பம் எல்லாமும் இதுவேயாகும். இதைச்செய்வாய் என் உயிரே, என் காதலியே.

கைகேயி : முடியாது. கொடுத்த வரத்தை பொய்யாக்காதீர். சத்தியம் சத்தியம் என்று பேசிக்கொண்டிருந்து விட்டுஏன் இப்போது அசத்தியத்தில் புகப்பாக்கிறீர்? அப்படி செய்தீரானால் என் உயிரை மாய்த்துக்கொள்வேன். வீண் காலதாமதம் வேண்டாம் உடனே வரத்தைத் தாரும் .

தசரதன் : (மயங்கிவிழுதல்)

"முற்றும்"

பாதங்களின் பாதையில்.....

மார்கழித்திங்கள் முன்றாம் நாள் புதன்கிழமை அன்றும் சூரியன் கிழக்கேதான் உதித்தான். ஆனால் எங்கள் வாழ்கையில் ஏற்படப்போகும் அஸ்த்தமனத்தை, அந்த அவலத்தை ஆண்டவன் ஒருவனைத்தவிர வேறுயாரும் அறிந்திருக்கவில்லை. யாழ்ப்பாணம் வழமைபோல் இயங்கிக் கொண்டிருந்த அந்த நேரம் எங்கிருந்தோ வந்த இரண்டு வாஹார்திகள் வானிலிருந்து துண்டுப்பிரசுரங்களை பறக்கவிட்டன. அவற்றைச் சாதாரண துண்டுப்பிரசுரம் என எண்ணிப்பார்த்த எங்களிற்கு நெஞ்சுகளில் அம்புகள் பாய்ந்தன. ஆம், "வலிகாமத்திலுள்ள அத்தனைபேரும் இருபத்திநான்கு மணித்தியாலங்களிற்குள் அப்பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டும்."

நாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த, நாம் பிறந்த தவழ்ந்து விளையாடிய, எத்தனையோ புனிதர்களை, கல்விமான்களை உருவாக்கிய, எத்தனையோ பிரச்சனைகள் மத்தியிலும் தன் விழுமியங்களை, பாரம்பரியங்களைக் கட்டிக்காத்த இந்த மண்ணை விட்டா வெளியேறுவது, அதுவும் இருபத்திநான்கு மணித்தியாலத்திற்குள்ளா வெளியேறுவது என ஒவ்வொருவர் மனங்களிலும் ஆயிரமாயிரம் கேள்விகள் தோன்றின.

ஆனால் அவள் மட்டும் மௌனமாய், சிந்தனைகளற்றுத் தனது காலிழந்த மகனிற்கு அன்னமூட்டிக் கொண்டிருக்கிறாள். எத்தனையோ துன்பங்களை அனுபவித்த அவளது மனம் இன்று கல்லாகிவிட்டது, இல்லை கல்லிலும் கடினமாகிவிட்டது. சம்மட்டியால் அடித்தாலும் உடையாத உறுதிபெற்றுவிட்டது. ஐந்து வருடங்களிற்கு முன் ஆயிரமாயிரம் கற்பனைகளுடன் மணவாழ்க்கையில் புகுந்த அவளிற்கு இன்று எத்தனை எத்தனை சுமைகள்! சுமதி என பெயரிட்ட பெற்றோர் சுமைதாங்கி எனப் பெயரிட ஏன் மறந்தார்களோ!

சுமதியின் கணவன் குமார் இரண்டுவருடங்களிற்கு முன் படையினரால் கைதாகி இன்றுவரை என்ன நடந்தது எனப் புரியாதநிலையில்.... அவளது நான்குவயதுப் பாலகன் ரமேஸோ காலிழந்து ஊனமாய்.... தாய் தந்தையரோ விமானத்தாக்குதலில் இறந்துவிட அவள் மட்டும் இன்று தனிமரமாய் .... "எடி பிள்ளை சுமதி வலிகாமத்திலே இருக்கிறவங்களை எல்லாம் வேறு இடங்களிற்கு இருபத்திநான்கு மணித்தியாலத்திலே போகச்சொல்லித் துண்டுப்பிரசுரம் போட்டிருக்கிறாங்கள். சனம் எல்லாம் ஏதோ எடுத்ததையும் விட்டதுமாய் தென்மராட்சி. வடமராட்சிப்பக்கம் போகுது நீ என்னபிள்ளை பேசாமலிருக்கிறாய்" என்ற பக்கத்து வீட்டுப் பரமுவின் குரல் கேட்டுச் சுய நினைவுக்கு வந்தவள் "ஓம் அண்ணை, கேள்விப்பட்டனான் நான் என்ன செய்றது எனக்கு வேற இடங்களிலே சொந்த பந்தமெண்டும் இல்லை. இங்கை என்டாலும் காணி வருவாயிலே ஏதோ குடும்பம் நடக்குது, வெளி இடத்திற்குப் போய் என்ன செய்யிறது." "அது சரிதான் பிள்ளை எல்லோருக்கும் ஒத்ததுதானே ஏதோ செய்வம். எனக்கு கொடிகாமத்திலே மருமகள் முறையான ஒருவர் இருக்கிறார். அங்குதான் போவம் எண்டு பார்க்கிறேன், இப்ப நேரமும் பத்துமணியாச்சு எடுக்கிறதுகளை எடுத்துக்கொண்டு வெளிக்கிடுமென். அப்ப நான் வரட்டே."

வீதியைப்பார்த்த சுமதிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை, என்ன செய்வது? எங்கே போவது எந்த வித விடைகளுமற்று கையிலே அகப்பிட்ட பொருட்களுடன் காலிழந்த மகனையும் சுமந்தவாறு கூட்டத்தோடு கூட்டமாக வீதிகளில் இறங்கினாள்.

வீதி எங்கும் சனம் நிரம்பி வழிந்தது. எங்கு பார்த்தாலும் அழுதவடிந்த முகங்கள், தம்மையே தூக்கி நடக்கமுடியாத பாலகர்கள் தம் தலைகளில் சுமைகளுடன், வயோதிபர்கள், கர்பிணிகள் அங்கவீனர்கள் வீதி எங்கும் சனக்கூட்டம். ஆமை வேகத்திலயே நகர்கின்றது அவளும் அவர்களில்

ஒருத்தியாய். நேரம் செல்லச் செல்ல சிறுவர்களின் அழுகுரலோ அதிகரிக்கிறது. அந்நேரம் பார்த்து வானத்தில் இரண்டு புக்கார விமானங்கள் வட்டமிட்டன. அதைக்கண்ட மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடுகின்றனர். மரங்களின் கீழே விழுந்து படுக்கின்றனர். சிலர் நடக்கிறது நடக்கட்டும் என்று வீதிகளில் நடக்கின்றனர். சுமதியும் தனது பிள்ளையுடன் அவர்களில் ஒருதியாய் ஒருவாறு தென்மராட்சியை வந்தடைந்தாள். தென்மராட்சி இயற்கை வளம் நிறைந்த இடம் மட்டுமல்ல. கொடையாளிகள் நிறைந்த மண்ணும் கூட. அங்குள்ள மக்கள் களைத்து வரும் மக்களிற்கு நீர் கொடுத்து இயலுமான வரை தமது வீடுகளில் உறவுகள் எதுவும் இல்லாத மக்களிற்கு இடம் கொடுத்து அவர்களையும் தம்மில் ஓர் அங்கத்தவராக கணக்கெடுத்தனர்.

சுமதியும் தனது மகனுடன் ராஜன் என்ற வணிகரது வீட்டில் அன்று தங்கினாள் அவளது சோகத்தைக் கேட்டவீட்டார் அவளுக்கு ஒரு சிறு குடிசை அமைத்து கொடுத்தனர். சொந்தங்கள் அற்றவர்களும் சொந்தங்களாக மாற சொந்தமுள்ளவர்கள் பிரிந்து செல்ல எத்தனை நிகழ்வுகள்...

சுமதி "வலிகாமத்திற்கு ஆமி வந்துட்டாங்களாம் நாங்கள் இனிமேல் அங்க போகேலாது அங்கே தாற நிவாரணத்திலிருந்து பொழுதைப்போக்க வேண்டியது தான்" "பக்கத்து வீட்டு தனத்தின கூற்று." அப்ப நாங்கள் இப்படியே கிடந்து சாகிறதே, அண்ணை பேசாமல் இருந்து அங்கையே செத்திருக்கலாம். என்ன செய்யிறது மனிசன்ரை மனம் குரங்கெண்டு சும்மாயே சொனனார்கள் மணியத்தின்ரை மகனை காணேல்லையாம். நாலு நாளாய் தேடுதுகள், என்னோடை படிப்பிச்ச வாத்தியாற்ரை மகன் நேற்று புக்கார குண்டு போட்டு செத்த இருபது பேரிலே ஒருவனாம் எங்கை இருக்குதுகளோதெரியல்லை, செத்தவீட்டுக்காவது ஒருக்கால் போய்வரலாம். அண்ணை எங்கடையூராக்கள் எங்கை இருக்கினம் யார் யாருக்கு என்ன நடந்ததோ பிள்ளை ஏதோ சத்தம் கேட்குது விழுந்து படு.....

கண்முடி முழிப்பதற்குள் புக்காரக்குண்டு அவர்கள் வீட்டு முற்றத்தில் "ஆ... அம்மா .... என்னை காப்பாற்றுங்கோ" வைத்திய சாலையில் சுமதி கையிழந்தவளாய். அவளிற்கு சொந்தமாய் இருந்த ஒரே சொத்தான அவளது காலிழந்த மகனும் சில நிமிடங்களின் முன் கதைத்த தினமும் உயிரற்ற உடம்புகளாய் மயானத்தை நோக்கி அயலவர்களால் எடுத்துச்செல்லப்படுகிறது. தனது பெற்ற மகனின் இறுதிச்சடங்கைப்பற்றிக் கூடஅறியாத அந்த தாய் தனது கைகளை இழந்து பின்னும் "பாதங்களும் பாதைகளும் இருக்கின்றன" என்ற நினைப்புடன் யாதும் அறியாது படுக்கையில் படுத்திருக்கின்றாள். இவளைப்போன்று இன்றும் எத்தனை எத்தனை தாய்மாரோ?

ஐந்தாம் பிரிவு
சிறு கதை
1ம் இடம்
ச.சுலேகா
ஆண்டு 12

With The Best Compliments From

WILL POWER MARKETTING SERVICES (PVT) LTD.

190 B, BANDARANAYAGHE MAWATHA, COLOMBO 13.

TELEPHONE : 074 - 714368 / 074 - 714369

AGENT FOR DELMAGE FORSYTH & CO LTD. (PETTAH).

IMPORTED AND DISTRIBUTOR

APPALLO JACK MACARAL

FROM

SOUTH AMERICA.

With The Best Compliments From

ESAN
PRINTER

OFFSET PRINTING - COMPUTER TYPESETTING & PUBLISHERS.

OFFICE :
344/15, JAMPETTAH STREET,
COLOBMO - 13, SRI LANKA.
PHONE : 440741.

NO. 29, ST. LUCIA'S STREET,
COLOMBO 13, SRI LANKA.

With The Best Compliments From

V
S
E

V. SUBANIE ENTERPRISES

DEALERS IN DRY FISH RETAIL

100/112,
MANNING MARKET,
COLOBMO - 11.

TEL : 342640.

அவலங்கள் தொடர்கின்றன!

வெள்ளைத் தாளிலுள்ள
கரும் புள்ளியை
யாராலும்
காணாமல் போக கூடுமோ?
அழகிய இலங்கையில்
இரத்தம் ஆறாக ஓடுவதை
அயல் நாடுகள்
பாராமல் இருக்கக் கூடுமோ?

கால் பட்ட இடங்களில்
கண்ணி வெடிகள்
காய்ந்து கருகிய பிஞ்சு
மனங்கள்
வெங்காயம் வெட்டி வந்த
கண்ணீரில்லை
வேட்டுச் சத்தம் கேட்டுவந்த கண்ணீர்கள்

மரண ஓலங்கள்
வானைப்பிளக்க
துப்பாக்கி தோட்டாக்கள்
மனிதரை பதம்பார்க்க
ஓலங்கள் அதிகரிக்க
அவலங்கள் தொடர்கின்றன!

நியாயமற்ற நீதிபதி
நீதி என்னும் போர்வைக்குள்,
தன் முகத்தை மறைத்துக்கொண்டு
அநீதியின் ஆட்சியை வெளிக்காட்டுகிறான்.

சமாதானம் என்னும் கொடிக்குப்பின்
போராட்டம் என்னும் யுத்தக்கொடியை
ஏந்தி,
சாந்தி என்ற சொல்லை பயன்படுத்தி
காந்தியின் (உண்மை உயர்வு தரும்)
சொல்லைப்பயன்படுத்தி
மனிதரை ஏமாற்றி திரியும்
ஒரு கூட்டம்.

வன்னிப்பகுதியில்
வரண்ட நாவோடு
நாற்பது நாள்,
நடக்க முடியாமல்,
தவிக்கும்
சிறுவனது உடல்நிலை.

எத்தனை ஆசிகளை
அடக்கி வாழ
என்னால் முடியவில்லையே ~ என்று
குமுறும் அரசியல் வாதிகள்
மானிடத்தே மதிக்கவில்லை,
மதிக்கத் தெரியவில்லை.
நினைத்தால் நடத்தி முடிப்பேன்
என்பவர்கள்: ஏன்?
மனித ஓலங்களை நிறுத்தமுடியவில்லை.

அன்று, கேள்வி கேட்க ஆட்களில்லை
பதில் கூற ஆட்கள்
உண்டு.இன்று, கேள்வி கேட்க
ஆட்களுண்டு, பதில் கூற
(இருந்து) ஆட்கள் இல்லை.
சுக(த)ந்திரம் என்னும்
பெயரால் வந்த
மந்திரம்.

காலங்கள் மாற மாற
நேரங்கள் செல்ல செல்ல
(மரண) ஓலங்கள் அதிகரிக்க
(மனித) அவலங்கள் தொடர்கினறன!

நான்காம் பிரிவு
கவிதை
1ம் இடம்.
S. அனோலியாஆண்டு 10C

With The Best Compliments From

GNANAM'S

AUDIO VIDEO VISION

PROFESSIONAL VIDEO GRAPHERS

111/13, VIVEKANANDA HILL, COLOMBO 13.

With The Best Compliments From

St. Anthonys

216, FOURTH CROSS STREET, COLOMBO - 11.

பொருளா? தாரம்.

தமிழ்த்தினப் போட்டி
பிரிவு 5
முதலாம் இடம்.சி. இந்திரா தேவி
உ/த 99 கலைப் பிரிவு

சில்லெனற காற்று
சிலிர்க்கிட்டு வீசியதால்
சிதறாமலிருந்தது மலர்லெல்லாம்
மலர் போன்ற பெண் மண்ணில்
வாழ்வேற்றதால் பிறந்தது இங்கே புதுவுலகம்.

கண்ணிருந்தும் குருடராகக்
காலிருந்தும் முடவராகக்
காதிருந்தும் செவிடரானதினால்
தஸ்யுவாய் ஆனதே தாரம்
இங்கு பொருளா? தாரம்!

மனைவி என்ற அந்தஸ்தைப் பெற்றுவிட்ட மங்கையவள்
மலர்போன்ற முகத்தினிலே ஒளியிழந்த காரணமென்ன?
வாட்டமதில் இருந்ததினால் வினவுபவர் பலருமுண்டு.
கணவனவன் கொடுமையென்று கண்டவர்கள் கூறுகிறார் ~ இங்கு
பொருளா? தாரம்!

கழுத்தினிலே தாலியும்
காலினிலே மெட்டியும்
நுதலினிலே திலகமும் வயிற்றினிலே குழந்தையையும் சுமந்ததினால்
பொருளா? தாரம்!

மாமியாரது கொடுமையையும்
மற்றவர்களது கடிமையையும்
கணவனது தீஞ் சொல்லையும்
மனதினிலே பொறுத்து விட
பொருளா? தாரம்!

முகத்தினிலே ஒளியிழந்து
துன்பத்தால் அழகிழந்து
மடமையால் தஸ்யுவாகி
ஆண்களால் தாழ்ந்து விட
பொருளா? தாரம்!

சீதனமென்னும் கொடுமையால்
சிறகொடிந்த பறவையாக
அன்பற்ற கணவனிற்கு
அடங்கியே போய்விட
பொருளா? தாரம்!

கரம் பிடித்த மன்னவன்
கைவிடுவான் என்றெண்ணி
கதியென்று அவனது
கால்களிலே துவண்டு வீழ
பொருளா? தாரம்!

சுகமனைத்தும் பெற்றுவிட்டுச் சுகமாக வாழ்ந்துவிடப்
பெண்ணவளை நாயாக விரட்டி விட்டான் தாயிடமே
சொத்துக்கள் வேண்டுமென நிலையாக கூறிவிட்டான்
அவையனைத்தும் பெற்று வந்து அவனிடமே கொடுப்பதற்கு
பொருளா? தாரம்!

கன்னியாக இருக்கும் வரை சேர்ந்திருந்த
மகிழ்ச்சியெல்லாம் சிதறடித்துப் போனது
கன்னி நிலையிழந்து கணவனிற்கு மனைவியாய்
ஆனதினால் தன் மகிழ்ச்சி இழந்து விட
பொருளா? தாரம்!

அன்பினிலே திழைத்தவள்
அறிவினை முடமாக்கி
ஏற்படும் இன்னலிற்கு
அடிமையாகப் போவதற்குப்
பொருளா? தாரம்!

அறிவிழந்து அழகிழந்து
அத்தனையும் இழந்து விட்டு
மாது மோகம் கொண்டவற்குப்
பசி தீர்க்கும் பொருளாய் ஆவதற்குப்
பொருளா? தாரம்!

விதியெனும் நாமத்தைப்
பெண்ணிற்குச் சூட்டி
தஸ்யு விலங்கு பூட்டி
தனிமையில் வருத்துதற்கும்
பொருளா? தாரம்!

With Compliments from

S. B. Fernando

No. 34, New Chetty Street,
Colombo 13.

With Compliments from

R. Danial

No. 33, New Chetty Street,
Colombo 13.

With Compliments from

RTH

REGAL TYRE HOUSE

Importers and Distributors of all kind of
Motor Cycle Spares & Tyre - Tubes.

149, Jayantha Weerasekara Mawatha,
Colombo 10.
Tel : 348339
Fax : 446672, 694010.

With Compliments from

New Star Tailors

Special for Wedding Suits

Fabric
Sarees Fabric
Sarongs
Ready made
Etc...

126, St. Antony;s Mawatha, Colombo - 13.
Tel: 071 - 38911, 0722-88196

மனிதருக்கு வழிகாட்டும் மனோ சக்தி

"மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்கத் தேவையில்லை"
என்று அருளினார் ஒரு சித்தர்
"மனம் என்பதென்ன? அது எங்கே இருக்கின்றது?" என்று பல தத்துவ ஞானிகளும் அறிஞர்களும் ஆராய்ச்சி செய்துள்ளனர்.
மனம் என்பது கடவுளின் திருக்கோயில்!
மனிதனே நடமாடும் கோயில்!

உண்மைதான் தன்னிடம் கடவுள் குடி கொண்டுள்ளார் என்பதை அறிந்து கொண்டால் அவன் வேறு எந்தக் கோயிலுக்கும் போக வேண்டியதில்லை கடவுள் நம்முள் கொலுவீற்றிருந்து நமது ஒவ்வொரு சொல்லையும் செயலையும் கண்காணித்து வருகின்றார் என்ற நினைப்புடன் வாழ்பவன் உண்மை, நேர்மை, ஒழுக்கத்தில் உயர்ந்து விளங்குவதுடன் தன்னைச் சூழ்ந்துள்ளோரையும் அதனைப் பின்பற்றும்படி செய்யும் வல்லமையும் உள்ளவனாகிறான். உள்ளத்திலிருந்து தான் எல்லா உணர்ச்சிகளும் ஆசாபாசங்களும் துளிர் விட்டு வளர்கின்றன. இவைகளுக்கேற்ப மனிதரின் குணங்களும் வாழ்க்கையும் அமைகின்றன. "மனம் போல் வாழ்வு" என்று கூறியுள்ளனர் எமது முன்னோர்கள். நாம் மனத்தில் ஒரு லட்சியத்தை வரித்தோமானால் அதை உருவேற்றுவதில் ஒரு சூட்சுமம் இருக்கின்றது. இதைச் செய்து முடிப்பேன் என்று பிடிவாதமாக உறுதியுடன் இருப்பது ஒரு முறை. மற்றோரு எளிய வழி மனத்தில் அது பற்றிய கற்பனைகளை விரிய விடுவது. முன்னதற்கு மன வைராக்கியம் தேவை பின்னதற்கு கற்பனை உள்ளம் தேவை. மன உறுதியைவிட கற்பனை பண்ணுவது எளிது. மனம் எதைப் படமாக மனக் கண்ணில் காண்கிறதோ, அதை எளிதில் அடைகின்றது "கவனத்துடன் தன் இலட்சியத்தைப் பேணுபவன்~மன உறுதியுடன் அதை விடாது முயல்பவன் தன்னை அறியாமல் மேதையாகிறான்" என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

நம் மனதில் தோன்றும் எண்ணமானது நாளடைவில் திடமான நம்பிக்கையாய் மாறுகின்றது. திடமான நம்பிக்கை நம்மிடம் செயலைத் தூண்டுகிறது. திரும்பத் திரும்பச் செய்யப்படும் செயலானது பழக்கமாக மாறுகிறது. நமது பழக்கவழக்கங்களே நமது குணநலன்களாகத் திகழ்கின்றது. நமது குணநலன்களே நமது வெற்றியை நிர்ணயிக்கின்றன, இவ்வாறு வோல்டோடிரைன் என்ற தத்துவஞானி எழுதிவைத்துள்ளார். நாம் அனைவரும் சந்தோசமாக வாழவே உலகில் பிறந்திருக்கிறோம். வாழ்க்கையில் வெற்றியடையவே வாழ்ந்து வருகிறோம் என்னும் தைரியம் நமது உள்ளத்தில் பதிந்திருக்க வேண்டும். நமக்குத் தெரியாமலே ஒரு மகாசக்தி நம்மை ஆட்கொண்டு வழிநடத்துகின்றது என்று திடமாக மனத்தில் எண்ணவேண்டும். இந்த எண்ணம் உலகையே வெற்றிகொள்ளும் மனத்திண்மையை நமக்கு இனிது வழங்கும். மனிதன் சிற்றறிவுள்ளவன் அவனை ஆளுவது மகாசக்தி அந்த மகா சக்தியின் ஓர் அணு ஒவ்வொரு மனிதனின் மனத்துள்ளும் இருக்கின்றது.

அதுவே அவனுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றது. ஒவ்வொருவரும் தனக்குரிய கடமைகளைச் செய்வதால் கட்டாயம் அதற்கு மதிப்பும் உரிய வெகுமதியும் உண்டு. மனம் ஆக்க சக்தி படைத்தது நினைத்ததைச் சாதிக்கும் வல்லமை படைத்தது. நாம் ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தை அடைய ஆசைப்படும் போது திரும்பத் திரும்ப எண்ணப்படும் ஆசையானது ஆழ்மனதில் புகுந்து நம்மையறியாமல் நம்மையே ஆட்டுவிக்கின்றது, செயற்படத் தூண்டுகின்றது. எனவே நமது இலட்சியம் கைகூடுகின்றது. நமது இலட்சியத்தில் நம் மனதை ஒருமுகப்படுத்தும் போது நமது எண்ண சக்தி பிரபஞ்ச சக்தியுடன் ஐக்கியமாகின்றது. அப்போது பிரபஞ்ச சக்தி நம் கற்பனை மூலம் பூமிக்குள் இறங்கி உருவெடுக்கின்றது. இதனால் நம்ப முடியாத சாதனைகளும் அதிசயங்களும் நிகழ்கின்றன.

இவ்வுலகம் ஒரு சக்தியால் இயங்கிவருகின்றது. "பரிணாம வளர்ச்சியை நோக்கியே இப்பிரபஞ்சம் இயங்குகின்றது." என்று தத்துவ ஞானிகள் கூறுகிறார்கள். அந்தப் பிரபஞ்ச சக்தியுடன் ஒத்துப்போகும் காரியங்களையே நாம் செய்ய வேண்டும். அதனால்த் தான் நமது மனதில் நல்ல ஆணித்தரமான எண்ணங்களே பிறக்க வேண்டும். இந்த எண்ணங்கள் செயல்களாக மாற வேண்டும் என்ற நெஞ்சத்துணிவும் வேண்டும். எனவே நம்மை நாமே திருத்திக் கொள்ளவும் சிறப்பாக வாழ வேண்டும் என்ற ஏண்ணத்தை நமது மனதில் நன்றாக பதித்துக் கொள்ளவும் நமக்கு நாமே குருவாகத் திகழ்ந்து எல்லா நன்மைகளையும் வழங்கும் ஆழ் மனத்தின் சக்தியை நன்றாகப் புரிந்து நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

"மனதிலுறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்."

திருமதி. பா. ஜெயச்சந்திரன்
ஆசிரியர்,
புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம்.

With Compliments from

Five Star
Enterprises

EXPERT IN GENTS TAILORING

132, ST. ANTONY;S MAWATHA, COLOMBO - 13.
TEL: 074 - 712404

With Compliments from

VIDEO FILMING AND OUTDOOR PHOTOGRAPHER FOR WEDDING & ALL KINDS OF PARTIES.

RAMESH KANTH
Photographer

No. 89/33, jampettah Street, Colombo 13.
Tel : 074 - 610408 Cell 0722 - 66445

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய
தமிழ் இலக்கிய மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி. திருவளர்ச்செல்வி
உயர்தரம் 99

With Compliments from

GAYATHIRI PAINT CENTRE

No. 85, Sri Kathiresan Street,
Colombo -13.
Tel : 449935

Dealers in all kinds of Paints and chemicals

அறிவு + ஆற்றல் = ?

மனித சமுதாயத்தின் நலன் கருதி பல்வேறுவகையான திட்டங்களும் ஆராய்ச்சிகளும் உலகின் எல்லா நாடுகளிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் வெற்றி அளித்தவையும், அளிக்காமல் போனவையும் அடங்குகின்றன. இவ் ஆராய்ச்சிகளும் திட்டங்களும் பல்வேறு துறைகளை உள்ளடக்குகின்றன. மருத்துவத்துறையில் பல்வேறு வெற்றிகளை கடந்த நூற்றாண்டுகளில் மனிதன் அடைந்துள்ளான். பல நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. லேசர் கதிர் போன்றவற்றினால் இரத்தம் சிந்தாத சிகிச்சை கைகூடியுள்ளது. அவ்வாறே விண்வெளி ஆராய்ச்சி கணனிகளின் தோற்றம் தொலைத்தொடர்பு சாதனங்களில் புதிய கருவிகள் இவை எல்லாம் மனிதனின் ஆற்றலிற்கு சான்று கூறி நிற்கையில் ஒவ்வொரு கண்டுபிடிப்பும் மனித மேம்பாட்டிற்கும் மனித இனத்தின் பல்வேறு பிரிவினருக்கும் இடையே தொடர்புகளையும் ஏற்படுத்தும் என முழக்கமிடப்படுகிறது. அதிகளவு உணவு உற்பத்தியும் பல்வேறு பொருளாதாரத் திட்டங்களும் எல்லோருக்கும் உணவும் உடையும் உறையுளும் கிடைப்பதை உறுதிப்படுத்துமெனப் பெருமிதமாகக் கூறப்படுகிறது.

ஆனால் இந்த வெற்றிகளுக்கு இன்னொரு பக்கம் உண்டு என்பதை நம்மில் பலர் அறியாதிருக்கின்றனர். ஒவ்வொரு வெற்றியும் மனிதனின் ஆற்றலை மட்டும் அல்ல அவனிடமுள்ள அகங்காரத்தையும் சுயநலத்தையும் கொடூரகுணங்களையும் வெளிப்படுத்துகின்றனர். அணுவைப்பிளந்து வெற்றி கண்ட ஜப்பானில் பல இலட்சக்கணக்கானோரைக் கொன்று ஒழித்தது. இன்றும் அணுகுண்டுகளும் அதனோடு சேர்ந்த ஏனைய பயங்கரப் போராயுதங்களும் உலக சமாதானத்திற்குச் சவால் விட்டுக் கொண்டிருக்கின்றன. விண்ணைக்கட்டி ஆள அவன் செய்யும் ஆராய்ச்சி உளவு செய்மதிகளிற்கும் நட்சத்திரப் போர்த் திட்டங்களிற்கும் பயன்படுவதை மறுக்க முடியாது ஒரு புறத்தில் தொலைத் தொடர்புச் சாதனங்கள் உறவுகளை உறுதிப்படுத்துமெனக் கூறினாலும் யுத்தங்களின் தொகை குறைவதாக இல்லை. ஆகாய விமானக் கண்டுபிடிப்பு முதலில் குண்டு வீசவே பயன்பட்டது. இவ்வாறே கணனி இராணுவத் துறையிலே செயற்படத் தொடங்கியது. ஒரு புறத்தில் அதிகளவு உணவு உற்பத்தி என்கிறார்கள், மறு புறத்தில் பட்டினிச்சாவு என்கிறார்கள்.

தனது நாட்டில் இருந்து கொண்டு இன்னொரு நாட்டைத் தாக்குவது எப்படி? குறைந்த செலவில் பெருந்தொகையா மனிதர்களை எப்படிக் கொல்லலாம் என்பதனை ஆராய ஆய்வுகூடங்களையும் ஆராய்ச்சியாளர்களையும் வசதி படைத்த நாடுகள் கொண்டுள்ளன. நமது சிறிய தீவு கூடக், கொன்றொழிக்கும் யுத்த சக்திகளிற்காகக் கோடிக்கணக்கில் பணத்தை இறைக்கிறது.

இவற்றையெல்லாம் நோக்கும் போது மனிதனை நெறிப்படுத்தாது விட்டால் அவனது வெற்றிகளே மனித சமுதாயத்தின் புதைகுழியையும் தோண்டக்கூடிய பேராபத்தினை விளைவிக்கும். நாளாந்த செய்திகளும் நடப்புகளும் மனித வீழுமியங்களில் வளர்ச்சியைக் காட்டாதது மட்டுமன்றி அவை வெகுவேகமாகக் கீழ்நோக்கிச் செல்கின்றன என்பதை அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது. ஆகவே மனிதனை நெறிப்படுத்த வேண்டியது மிகமுக்கியமானதும் அவசரமானதுமான பணியாகும். இதனைச் செவ்வனே செய்து

முடிக்கக்கூடிய ஆற்றல்கள் பல்வேறு மதங்களுக்கும், பாடசாலைகளுக்கும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இவ்விரண்டு நிறுவனங்களும் மனிதர்களை எந்தளவிற்கு மனிதர்களாக வளர்த்து எடுத்துள்ளன என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. அவை தத்தம் முயற்சிகளில் வெற்றி பெறாமைக்குரிய காரணம் என்ன? மதங்களும், பாடசாலைகளும் மனிதனை மனிதனாக உருவாக்கும் கடமையைச் செய்யாவிட்டால் அதனை யார் செய்வது? இவையே இன்று எம்முன் உள்ள வினாக்களாகும்.

திருமதி T. பீற்றர்
(B.A. Dip in Education)
ஆசிரியர்,
புனித அன்னம்மாள்
மகளிர் மகா வித்தியாலயம்.

With Best Compliments From

S. S. MULTI MARKETING SERVICES.

No. 53A, Waidya Road, Dehiwala.

T. P. 738189, 728000



With Best Compliments From

St. Anne's Milk Bar

52, Brass founder St., Colombo 13. Tel : 075-340838

Jeney Supper Gram

44/9 52, Brass founder St., Colombo 13. Tel : 470511.

With Compliments from

இராமசாமி & சன்ஸ்

43/34 ஜெம்பட்டா வீதி,
கொழும்பு - 13.

With Compliments from

NJ

Nithiya
Jewellers

No. 169, Sea Street Junction, Colombo 11,
Tel : 074 - 718805

சமூக வாழ்க்கையில் கணிதப் பாடத்தின் பங்களிப்பு.

கணிதம் என்பது "கணித்தல்" என்னும் சொல்லில் இருந்து உருவானதாகும். இது ஒருவரது உள்ளார்ந்த உளத்திறனையும், சிந்தனா சக்தியையும் தூண்டுவதோடு ஒவ்வொருவரதும் நினைவாற்றலையும், தொடர்பு படுத்தும் தன்மையையும், பிரயோகிக்கும் திறனையும் அளவிடும் ஒரு கோலாகும். மனிதனின் நரம்பு மண்டலத்தைத் தூண்டிப் புத்துயிர் கொடுக்கும்.

கணிதப் பாடம் இன்றய கால கட்டத்தில் மாணவர் கற்கும் பாடங்களில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஆண்டு 5 புலமைப் பரிசிற் பரீட்சைக்குத் தமிழுடன் கணிதமும் பரீட்சிக்கப்படுகிறது. கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு ஏனைய பாடங்களுடன் கணித பாடத்தில் சித்தியடைந்தால் மட்டுமே உயர் கல்வியினைப் பெறச் சந்தர்ப்பமளிக்கப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் எத்துறையில் பட்டம் பெறத் தகுதி பெற்ற மாணவராயினும் கணிதத்தின் அடிப்படைக் கருத்துக்கள் கற்பிக்கப்படுகின்றன. இவ்வாறு மாணவர் சமுதாயத்தின் கல்வியுடன் கணிதமும் ஒன்றித்து இரண்டறக்கலந்துள்ளது.

"கணிதம்" என்பது சிக்கலான ஒரு பாடம் என்று எமது மாணவரது மத்தியில் நிலவும் தவறான ஒரு கருத்தாகும். இது புற்றுநோய் போலப் புரையோடி கணிதப் பாடத்தை அனைவரும் வெறுக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது. எனவே, மாணவரது மனத்திலுள்ள இத் தவறான அபிப்பிராயம் வேருடன் களைந்து எறியப்பட வேண்டியது அவசியமான தொன்றாகும். இதன் பின்னரே கணிதப்பாடம் கற்பதற்கான ஆர்வத்தை ஒவ்வொரு மாணவரும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

பாடசாலைக் கல்வி முறை, உயர் கல்வி பெறும் சந்தர்ப்பங்கள் மட்டுமல்லாது வேலைவாய்ப்பை நாடிச் செல்பவர்களுக்கும் கணிதப் பாடம் அல்லது கணித அறிவு முக்கியத்துவம் பெறுகின்றது.

தனியார் துறையிலும், அரசாங்கத் துறையிலும் வேலைகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் போது கணிதப் பாடத்தின் அறிவு பரீட்சிக்கப்படுகிறது. அத்துடன் எமது கல்வி முறையின் தடைத் தாண்டல் பரீட்சையான கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதப் பாடத்தில் ஓரளவாயினும் திருப்திகரமான பெறுபேறு பெற்றிருக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அன்றாட வாழ்க்கையில் பணக் கொடுக்கல் வாங்கல், பண்டப் பரிமாற்றங்கள் போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் படித்தவர்களுக்கும், கல்வியறிவு குறைந்தவர்களுக்கும் கணித அறிவு தேவைப்படுகிறது.

இவ்வாறு அன்றாட வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து காணப்படும் கணித பாடத்தின் அறிவு குறைவடைந்து செல்வதற்கு பின்வரும் காரணங்கள் உள்ளன:-

1. கணித அடிப்படைச் செயற்பாடுகளைச் சரியாகப் பிரயோகிக்கும் முறை பற்றிய போதிய விளக்கமின்மை.
2. கற்றலில் ஆற்றல் காட்டாமை
3. கணிதப் பயிற்சி முழுவதும் ஆசிரியராலேயே செய்து காட்டப்படவேண்டுமென்ற மனப்பான்மை.
4. வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் எதிர்பார்த்த வெற்றியை அடைந்திருக்காமை
5. பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வியை மாணவர்கள் பெற முயற்சி எடுத்தமை
6. கற்ற விடையங்களை மாணவர்கள் மீட்டல் செய்ய முயலாமை.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் ஏற்பட்ட குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்குப் பொருத்தமான வழிகாட்டலைப் பாடசாலை ஆசிரியர்கள் மேற்கொள்வார்களாயின் கணிதப்பாட அறிவின் தரம் உயருமென்பதில் ஐயமில்லை.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பது சான்றோர்வாக்கு. இங்கு "எண்" என்பது கணிதத்தைக் குறிக்கும். ஏனைய பாடங்களை விடக்கணிதத்துக்கு முன்னைய காலங்களிலேயே முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இன்றய காலகட்டத்தில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்ப இலத்திரனியல் சாதனமாகிய கணனி (Computer), கணிப்பான் (calculator) என்பன கணிதத்துடன் தொடர்பானவை என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆதிகால முனிவர்கள் கூட நாடி சோதிட முறை, ரேகை சோதிட முறை, பஞ்சாங்கம் கணித்தல் போன்றவற்றிற்கு அடிப்படையில் கணித அறிவைப் பிரயோகித்துள்ளனர்.
கலை வர்த்தக, உயிரியல் விஞ்ஞான, பௌதீக விஞ்ஞான, மருத்துவத் துறையில் கற்கும் சகல மாணவர்களுக்கும், மேற்குறிப்பிட்ட துறைகளில் உயர் தகைமை பெற்று சேவையாற்றுபவர்களுக்கும் கணித பாடத்தின் அடிப்படை அறிவு அவசியமானதாக உள்ளது.

எனவே கணித பாடமானது சமூக வாழ்கையில் எந்தவொரு துறையிலும் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

திருமதி. அ. பாலசுப்ரமணியம்.
ஆசிரியர்,
புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம்.

With Compliments from

MEDI-A PH RMACY

DISPENSING CHEMISTS DRUGGISTS & GROCERS

E/2, Block G/2 Maligawatte Housing Scheme,
Colombo -10.

With Compliments from

CADER & SONS (PVT) LTD.

IMPORTERS, DISTRIBUTERS OF MOTOR CYCLES,
MOTOR CYCLE SPARE PARTS WHOLESALE & RETAIL

SHOW ROOM
207 Jayantha Weerasekara Mw.,
Colombo -10.
Tel : 344276

640 Maradana Road,
Colombo 10, Sri Lanka.
Tel : 685029

With Compliments from

Ambiga

JEWELLERS

6, STATION ROAD, JA-ELA.
TEL : 232191

With Compliments from

Agrotex Trading Company (Pvt) Ltd.

Wholesale Dealers in Textiles

Tel : 447774
447597
Fax : 328821
Res : 586267

No. 114-1/2,
3rd Cross Street,
Colombo - 11,
Sri Lanka.

தமிழ் மொழி வளர்ச்சியில் பெண்களின் பங்கு

ஆசிரியை எஸ். அன்ரோனியா
B.A. Dip. in Education,
புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம்.

தமிழ் மொழியானது தன் வளர்ச்சியிலே முழுநிறைவை அடைந்துள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றினை சங்ககாலம் தொடக்கம் இன்றுவரை ஆராய்ந்து பார்ப்போமானால் இலக்கிய வரலாற்றிலே எத்தனையோ ஆண்புலவர்களும் எழுத்தாளர்களும் மட்டுமன்றிப் பெண்புலவர்களும் எழுத்தாளர்களும் தம் இலக்கியப் பணியைத் தமிழ்பற்றோடு நிறைவேற்றியமையே காரணமாகும். இலக்கிய வரலாற்றில் அதிகமான ஆண்புலவர்கள் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார் இன்னும் இருபதாம் நூற்றாண்டு எழுத்தாளர்களான மணிக்கொடி ஆசிரியர்கள், கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன் போன்றோர் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. மறுபக்கத்தில் நோக்குவோமாயின் ஔவையார் என்ற பெண்புலவரின் பாடல்கள் நீதி, அறம் என்பவற்றை போற்று வதாக அமைந்த ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்கள் கற்கக் கற்க கரையாத நெஞ்சத்தவனையும் கரையவைக்கும். உலகோர் போற்றுகின்ற உன்னதக் கருத்துக்களைக் கொண்ட படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேனைப் போன்றன. காரைக்காலம்மையார் எழுதிய பக்திப்பாடல்கள் மனிதனை இறைவன் பால் எண்ணங்களை எழுப்பி உன்னத வாழ்க்கைக்கு ஒழுக்க வாழ்க்கைக்கு ஒருவனை உயர்த்துகின்ற உயரிய பண்பைக் கொண்டள்ள பாடல்கள். இவரது செய்யுட்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும் பேறானவை. ஔவையாரது பாடல்கள் சிறுவர்களுக்கும் இலகுவில் விளங்கக் கூடிய எளிய சொற்களில் அமைந்தவை. எமது பாடத்திட்டத்தில் கூட இவரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஒருவன் மனிதனாக வாழ இவரது பாடல்களை மட்டும் படித்தால் போதும். வேறெதுவும் கற்க வேண்டியதில்லை.

இனி இன்றய பெண் சிறுகதை எழுத்தாளர்கள், நாவல்கள். சஞ்சிகைகள், கவிதை, கட்டுரைகள் எழுதும் பெண் எழுத்தாளர்களை எடுத்து நோக்குவோமானால், இவர்களும் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும்பணி புரிந்து வருகிறார்கள்.

பாடசாலைக் கல்வி ஆரம்பிக்கப்பட்ட 19ம் நூற்றாண்டில் இருந்து எழுத்தறிவானது பல்வேறு மட்டங்களிலும் பரவலாக்கப்பட்டதிலிருந்து பெண் கல்வி முறைசார்கல்வியாக ஆக்கப்பட்டு பெண்கள் கல்வி கற்கத் தொடங்கியதும் கல்வி கற்ற பெண்கள் புரட்சிகரமாகச் சிந்திக்கத் தொடங்கினார்கள். ஆண்களின் அதிகாரத்திற்கும், வேறு கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்ட எங்கள் புராதனப் பெண்களைப் போலல்லாது புதுமைப் பெண்களாகத் தாம் வாழ எண்ணினார்கள். இதன் விளைவாக உலகெங்கிலும் பெண்புரட்சிகள் ஏற்படத் தொடங்கிப்

பெண்கள் புதுமை இலக்கியங்களைப் படைக்கத்தொடங்கியதில் வியப்பேதும் இல்லை. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் தென் ஆசியாவியிலும் கூடுதலாகப் பெண்ணாக்கங்களை வெளியிடும் முயற்சிகள் ஏற்படத் தொடங்கின. இவ்வாறே இலங்கையிலும் இந்தியாவிலும் பெண் எழுத்தாளர் தோன்றினர். தோன்ற இடமளித்ததில் எந்தவித வியப்பும் இல்லை. பெண் அடிமைத்தனத்தை அறுத்தெறியப் பெண் எழுத்தாளர் வர்க்கம் தோன்றியது. தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள், கவிஞர்கள் பெண்விடுதலை சமூக விடுதலை என்ற தோரணையில் ஆயிரமாயிரம் நூல்களை இந்தியவிலும் இலங்கையிலும் வெளியிட்டுள்ளதில் எந்த வித வியப்பும் இல்லை.

இன்று வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் எத்தனையோ பெண் சிறுகதை எழுத்தாளர்கள், கவிதை எழுத்தாளர்கள், கட்டுரை எழுத்தாளர்கள் தோன்றித் தமிழை வளப்படுத்துவதை நாம் காண முடிகின்றது. இன்னும் வானொலியிலும் தமிழை வளர்க்க எத்தணையோ பெண் கவிஞர்கள் தோன்றுவதைக் காணலாம். பவானி ஆழ்வார்ப்பிள்ளை, சிவசங்கரி போன்ற பெரிய பெண் எழுத்தாளர்கள் பெண் விடுதலை இறைபக்தி சம்பந்தமான எத்தனையோ நூல்களை எழுதி தமிழுக்குமட்டுமல்ல் சமுதாயத்திற்கும் எழுச்சியையும் வளர்ச்சியையும் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி. சமூகத்தினை நிறைவுள்ள சமுதாயமாக மாற்றுகின்ற பண்பும் ஆற்றலும் அதற்குண்டு. நீதிக்கருத்துக்களையும் அறக்கருத்துக்களையும் விழுமியங்களையும் ஏற்படுத்தி மனிதனை மனிதனாக வாழவைப்பது. மாணவர் சமூகத்தை எதிர் காலத்திற்கு ஏற்ற நல்ல சந்ததியாக உருவாக்குவது. இத்தகைய இலக்கியத்தில் எத்தனையோ படைப்புக்களைப் படைத்து அதன் மூலம் சமுதாயத்தை மாற்றி அமைக்கின்ற சக்தி எழுத்தாளனின் சக்தியாகும். இந்த எழுத்தாளர் இலக்கியப்படைப்பில் ஆண் புலவர்களுக்கு மட்டுமன்றிப் பெண்புலவர்களுக்கும் சரிநிகர் பங்குண்டு. தமிழ் இலக்கியங்களை ஆக்கித் தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவியவர்களில் ஆண் எழுத்தாளர்களுக்கு மட்டுமல்லமல் பெண் எழுத்தாளர் களுக்கும் பெரும் பங்குண்டு என்பது தெட்டத் தெளிவாகின்றது.

With Compliments from

New
SELVAM *Jewellers*

Dealers in Genuine 22ct, Gold Jewellery

8-S, Sea Street Junction, Colombo 11, Tel : 338846

With Compliments from

Sri Rekaa
Jewellers

5/S. Sea Street Junction. Colombo 11. Tel : 438665

With The Best Compliments From

Rameshkanth

With The Best Compliments From

FONSEKA OIL STORES

GENERAL OIL MERCHANTS

No. 28, Wolfendhal Street,
Colombo - 13.
Phone : 446486 / 330261.

அறியத் தருகிறோம் இவர்களை

K. ANANTHI

இவர்கள் எமது மன்றத்தின் தலைவி இவருக்கு நினைப்போ புன்னகை அரசி என்று. ஆனால் வீரபாண்டிய கட்ட பொம்மனை மிஞ்சி விடுவார்.

R. DEVIKA

இவர்தான் எம் பாடசாலையின் **(NET BALL QUEEN)** ஆனால் இவருக்கும் இருளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

R.DINESHINI

இவரும் ஒட்டகச்சிவிங்கியும் அண்ணன் தங்கை இவர் **SR ADVERTISMENT** க்கு பொருத்தமானவர். அத்துடன் பட்டர் பூசுவதில் இவரை மிஞ்சமுடியாது.

B.YASOTHA

பாடசாலையில் இவரின் புனைப்பெயர் அணுகுண்டு. ஏனெனில் அவருக்கு சிறு தகவல்களும் அணுகுண்டு அளவு வெடிக்கும். இவரது பிடிவாதம் காகிதப் பூவில் தேன் எடுப்பது போன்றது.

J. DREEN

பெண்ணின் நடை அன்னத்திற்கு சமன். ஆனால் இவரின் நடை **(Type Writer)** க்கு சமன். இவருக்கும் **(Broiler)** கோழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

A.THIRUVALAR

இவர் பாடசாலைக்கு வருவது ஆடிக்கொரு தரம் அமாவாசைக்கொரு தரம். வந்தாலும் மேசை தான் இவரது தலையணை.

N. VIRGIN

இவரின் வாழ்க்கை ஊன்று கோலோ மூக்கு கண்ணாடி. இவரை மைதானத்தில் ஓடவிட்டால் அனைத்து வீரர்களையும் துரத்துவார்.

F. SUBASHINI

இவரோ கூந்தலை நீளமாக வளர்த்து கின்னஸ்ஸில் இடம் பிடிக்கத் துடிக்கிறார்.

A. MYTHILI

இவரோ பாடசாலையிலோ பரம சாது ஆனால் வீட்டிலோ

A. MARIA

பெண்களுக்கோ இடுப்புண்டு. ஆனால் இவருக்கோ அடுப்புண்டு. இவரோ த்திரிப்பாலா விளம்பரத்தில் அடிக்கடி வருவார்.

G. SHIROSHINI

இவரின் புனைப்பெயர் சின்னக்குயில் சித்ரா. ஆனால் இவர் பாடினால் க..... போலிருக்கும். இவரிலிருந்து தான் மனிதன் வந்தான் என்பார்கள். ஆனால் இவரோ அதுவே தான்.

S. ABARNA

இவருக்கு நினைப்பு தமிழ் பண்டிதமணி என்று. ஆனால் இவர் நோயில் தான் பாண்டித்தியம் பெற்றுள்ளார்.

S. LAKMINI

வாய்கிழிய பேசினாலும் இவரின் (~) **(Point)**டோ காற்று. (ஏனென்றால் காற்றடிக்கும் போது தாணுடன் ஒட்டிக்கொள்வார்.)

V. TERENCE

வாட்டசாட்டமான உடல் வாகைக் கொண்டவர் தான் இவர். இவருக்கு பிடித்தமான **(sports wwf).**
இவரைப் பார்த்தால் அகத்தியரை (முனிவர்) பார்க்கத்

T. MILRED

தேவையில்லை. இவர் வாயைத் திறந்தால் அண்டமே நடுங்கும்.

R. UDAYA

இவர் இருப்பது பாடசாலையிலென்றாலும் நினைப்பது **(cum)** விரும்புவது கடற்கரை சூழ்நிலையை.

K. JEYADHARSHINI

இவருக்கு பிடித்தமான விளையாட்டு **(Netball)**

E. JUDITH

விளையாட வந்தால் அவருக்கு அது **(Foot ball)**
ஆளோ ஆறடி நினைப்போ மழலை என்று ஏனென்றால் அவர் ஒரு தொட்டால் சிணுங்கி.

J. ROSEMARY

நினைப் போ ரோசி என்று. ஆனால் இவரோ ஒரு (blacky).

R. NITHARSHINI

இவர் தனது கட்டழகை பாதுகாப்பதற்காக விரும்பி உண்ணும் உணவு குரக்கன் பாண்.

With The Best Compliments From

LEO CLEARING AND TRANSPORTING AGENCY

COUSTOMS HOUSE AGENT

A-1-F-26, Armour Street Flats,
COLOMBO -12.
Tel: 077-312564
338623

With The Best Compliments From

Priya Jewellers

Delears in Gems & Jewellers

81, SEA STREET, COLOMBO - 11.
T'PHONE: 431326

With Compliments from

Mayuran Auto Enterprises

290-9A & 367/4, Sri Sangaraja Mawatha,
Colombo 10.
Tel : 441679/ 452942



With Compliments from

Sajith Motors

No. 290/26 - A, Sri Sangaraja Mawatha.
Colombo 10.

With The Best Compliments From

Manamagal

JEWEL PALACE

91, SEA STREET,
COLOMBO - 11.
PHONE : 431409.

With The Best Compliments From

New Archchana

Jewellerrs

Dealers in Genuine Gold Ornaments.

436177/332948

157 A, SEA STREET,
COLOMBO - 11.
SRI LANKA.

With Best Compliments from

Jayalalitha

Jayalalitha Jewelley Mart.
65, Sea Street, Colombo 11, Sri Lanka.
Telephone : 449177, 422548.

With Best Compliments from

Jeya Book Centre.

THE IMPORTERS & DISTRIBUTORS OF ALL TYPE OF PRINTED BOOKS.

Medical
Engineering
Computer
Management

Science Book
School Text Book
and Tamil Books.

91-99 U. G. Floor,
People's Park Complex,
Colombo 11.
Phone : 438227 Fax : 332939.

Branch:
688, Galle Road,
Colombo 3,
Phone: 580594.

With Compliments from

Sinthu Gram Centre

222 - Olcott Mawatha,
Colombo 11.
Tel : 341284

With Best Compliments from

Madu Gram Centre

Wholesale, Retail Gram & Sweets Etc.

No. 223 P, Gas Work Street,
Colombo - 11.
Tel : 071 - 59103

With Compliments from

ES

Eden Selection

Dealers in Ready-made Garments

Import Shirts Teeshirts & Denims

FASHION PLAZA
107/2, Main Street,
Colombo 11.

(OPP TITUS BULDING)

FASHION PLAZA
107/3, Main Street,
Colombo 11.

With Compliments from

P PATTAKANNUS

Jewellers Since 1912.

Head Office:
102, New Chetty Street,
Colombo 13.
Tel : 422304, 323818, 335816

Branch Office:
Unit 3-61, 3rd Floor,
New Wing Majestic City,
Colombo 4.
Tel/Fax: 074 - 613613.

With Best Compliments from

Kingsley Agency

Clearing and Forwarding
(Customs House Agent)

OFFICE:
12,13, MAIN STREET.
COLOMBO - 11.

155/16, JAMPETTAH LANE,
COLOMBO - 13.
TEL : 337864
CELLTEL : 077 801232

With Best Compliments from

Laavanya

Laavanya Jewell House

Makers of Genuine 22Ct. Gold jewelleries, Pawan Brokers.

62, Sea Street, Colombo 11, Sri Lanka.
Tel: 328536, 334693

With The Best Compliments From

MESSIAH CLEARING AGENCY

CUSTOMS CLEARING & FORWARDING AGENCY

156, Newnham Square,
Colombo 13.

Tel: 437370
075 335894
R. 458217
Fax : 437370

With The Best Compliments From

D. MOHAMED ABDEEN & SONS

CUSTOMS HOUSE AGENT
CLEARING & TRANSPORT CONTRACTORS.

118/3, Church Road,
Mattakuliya,
Colombo 15,
Sri Lanka.
Tel :523603

With The Best Compliments From

Silkot Developments
PROPERTY DEVELOPERS

146, SECOND CROSS STREET,
COLOMBO 11. SRI LANKA.
TEL: 424930 FAX : 424933

Project : 87 Mayfield Road,
Colombo 13.

With The Best Compliments From

SPOKEN ENGLISH
by

B. M. Brshrul Hafi.

At:

ARUL STUDY CIRCLE,
Jempetta Street, Colombo - 13.

I. P. S. INSTITUTE,
Hinni Appuhamy Mw, Colombo 13

E. P. I. INSTITUTE,
Bampalapitiya, Colombo 4

U. T. I INSTITUTE,
Maradana, Colombo 10.

With Best Compliments from

New Lalitha
Jewellers

நியூ லலிதா
ஜுவலர்ஸ்

170, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021-24846

1604, ஜெறா வீதி,
ரொறன்ரோ, கனடா.
☎ 416-4612610

165, செட்டியார் தெரு,
கொழும்பு.
☎ 332948, 470396

With Best Compliments from

Siva Trading Company

No. 89, Wolfendhal Street, Colombo 13.

Dealers in All Kinds of Oil Cattle Foods & Forage Ect .

Branch:
Siva Trading Company,
No. 22, Dutch Road,
Chavakachchery.

Branch:
Sri Muththumariamman Trading,
No. 171, K.K.S. Road,
Jaffna.
Tel: 021-2332.

With Best Compliments from

SAREE EMPORIUM

DIRECT IMPORTERS
DEALERS N TXTILES
SPECIALIST IN INDIAN
WEDDING SAREES
& OTHER ITEMS.

No. 214, Main Street,
Colombo 11.
Sri Lanka.
Tel : 430294

With Best Compliments from

New Kalyani
JEWELLERY MART

95 sea street,
Colombo 11.

Phone: 422912
325343

With Best Compliments from

For High Quality Jewellers
22 Carate.

STAR
JEWELLERS

90, Sea Street,
Colombo 11,
Tel: 329727.

With Best Compliments from

For Gems & Genuine
22 CT. Gold Jewellery.

subani
Jewelers

96, Sea Street,
Colombo 11.
Tel: 330053

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்யாலய
தமிழ் மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி. J. சிந்துஜா

ஆண்டு 10[A]

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்யாலய
தமிழ் இலக்கிய மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி. மதுஜன் திருஞானசுந்தரி

ஆண்டு 9[B]

With Compliments from

A/L 99

Miss. J. Dorine Amutha

A/L 99

With Compliments from

Miss. Vidusha

6[C]

With Compliments from

ST. ANTHONY'S STORES.

No. 290/21,
Sri Sangaraja Mawatha,
Colombo 10.

With Compliments from

TELISHAN TRADERS

Dealers in TELESONIC Clocks,
Fans, Gas Cookers,
Iron & Radio Cassette Etc,,

CRYSTAL PALACE (Supper Market)
2nd Floor,
100-2/19, Keyzar Street,
Colombo - 11.
Tel : 441778

With Compliments from

SAVID GRAM STORES
SAVID GRAM STORES
SAVID GRAM STORES

214, Gaswork Street,
Colombo-11
Tel: 434601, 335024

With Compliments from

R.T.S

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய
தமிழ் மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி. K. சிந்துஜா

ஆண்டு 11^{B}

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய
தமிழ் இலக்கிய மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி. K. சங்கீதா

ஆண்டு 10^{A}

With Compliments from

A/L 2000

Miss. E. Mary Mifred
Miss. J. Rose Mary
Miss. Vanith
Miss. C. Vergin Thusyanthy

With Compliments from

Miss N. Komugi
E. N. Nava
120, St. Anthony's Mw.
Colombo - 13.

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய
தமிழ் மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி. T. தனிதா

ஆண்டு 7B

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய
தமிழ் இலக்கிய மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி P. ப்ரியா

ஆண்டு 11B

With Compliments from

Miss. J. Theebajini

With Compliments from

MISS. VERGIN NIRANJALA.N

A/L 99

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய
தமிழ் மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி. K. சுபாசினி
உயர்தரம் 2000

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய
தமிழ் இலக்கிய மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி P. வினோதா

ஆண்டு 10^{B}

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய
தமிழ் இலக்கிய மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

செல்வி. தேன்மொழி
செல்வி. நீரஜா
செல்வி. அமுதசுரபி
செல்வி. சௌமியா

ஆண்டு 9^{C}

With Compliments from

புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய
தமிழ் இலக்கிய மன்றத்திற்கு எமது இதய பூர்வமான
நல்வாழ்த்துக்கள்.

ஆண்டு 9C

With Best Compliments from

We sincerly Wish the Tamil Literary Association of

St. Anne's Girls Maha Vidyalayam

for
Good Achivement
All the Success

Well Wishers

With Best Compliments from

Top Tex

Wholesale & Retail Dealers in Textiles and specialist in Imported and Local Sarongs
Distributors of 'TIP TOP" LOCK Brand and Harricane Brand Sarong

PARTNER OF TECHNO ENTERPRISES
FIELD OFFICER OF INSURANCE CORPORATION OF SRI LANKA

Showroom :
33A, J.P. Super Market,
3rd Cross Street,
Colombo -11.
Mobile: 071-50701
Tel : 337312

Residence :
69/19, Cotta Gardens,
Cotta Road,
Colombo - 08.
Tel : 692766, 699380
Fax : 432977

உள்ளத்து உணர்வுகளுடு உதிர்க்கும் நன்றிகள் பல கோடி.....

* எமது முத்தமிழ் விழாவை சிறப்பிக்க பிரதம அதிதியாக எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்த பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கட்கும், அவரது பாரியார் திருமதி சந்திரசேகரம் அவர்கட்கும்,

* மற்றும் எமது அழைப்பை ஏற்று வருகை தந்த சிறப்பு விருந்தினர் நீதி இன விவகார அமைச்சு திருவாளர் கே.எம். எம். ஷெரிவ் அவர்கட்கும்,

* எமது வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். சண்முகதாஸ் அவர்கட்கும்,

* இந்நூலை சிறப்புற வெளியிடுவதற்கு உதவி புரிந்த எமது பாடசாலை அதிபர் அவர்கட்கும்,

* தமது ஒத்துழைப்பை வழங்கிய எமது தமிழ் மன்ற பொறுப்பாசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்,

* இவ்விதழை வெளியிடுவதில் தமது தோள் கொடுத்துதவிய எமது மன்ற உறுப்பினர்களுக்கும், மாணவ தலைவிகளுக்கும், மாணவ மணிகளுக்கும்,

* தம்மால் இயன்ற பண உதவி புரிந்த அனைத்து மாணவர்களுக்கும்,

* மற்றும் தமது ஆக்கங்களையும் ஆசிச்செய்திகளையும் வழங்கி இந்நூலை சிறப்பித்த அனைத்து பெரியார்களுக்கும், பேராசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும்,

* இந்நூலை குறித்த நேரத்தில் வெளியிடுவதற்கு ஒத்தாசை புரிந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும்,

* மற்றும் விளம்பரங்களை தந்துதவிய அனைத்து விளம்பரதாரர்களுக்கும்,

* மற்றும் இவ்விதழை சிறப்புறவும், குறித்த நேரத்தில் அச்சிட்டு வெளியிட உதவிய நியூ வீனஸ் பதிப்பகத்திற்கும்,

* தமது நன்கொடைகளை வழங்கி உதவிய அனைத்து நலன் விரும்பிகளுக்கும்,

எமது தமிழ் மன்றத்தின் சார்பில் உளமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

பாடசாலை கீதம்

புனித அன்னம்மாள் கலைக்கூடமே ~ என்றும்
எம் வாழ்வில் ஒளித்தீபமே

அமல மரி அன்னையாய், அன்பர் யேசு பாட்டியாய்
இலங்கும் புனித அன்னாளே இன்பம் பொழியும் தாயாரே
எங்கள் கலா சாலையின், இனிய பாது காவலி
போற்றி, போற்றி, போற்றியென்றே போற்றுகின்றோம்.

(புனித .....

பல்லாண்டு காலமாய் பெரியோர் பலர் முயற்சியால
நல்லாயன் பாதையில், நலமுடனே நடந்திட
சொல்லாமல் துணை புரியும் தூய வழி காட்டியே
வாழ்க வாழ்க, வாழ்கவென்ற வாழ்த்துகின்றோம்

(புனித .....

அஞ்ஞான இருள் நீக்கி, மெஞ்ஞானம் சொல்லித்தரும்
விஞ்ஞான விளையாட்டை வீரமுடன் நடத்திட
எக்னஸ் திரேசா மெட்கலின் இல்லமுன்றில் நாமிணைந்து
ஆற்றுவோம் சேவைகள், ஏற்றியென்றும் மகிழ்ந்திடுவோம்

(புனித .....

ஆய கலை அத்தனையும் அற்புதமாய் பயிற்றுவிக்கும்
நேய கலைக் கூடமது, நித்தமும் நாம் நினைந்திட
நேரியராய் நாம் வாழ்ந்து நெஞ்சில் அதை நினைந்திட
போற்றி, போற்றி, போற்றியென்றே பாடுகின்றோம்

(புனித .....

ஆல் போல் தழைத்து, அறுகு போல் வேரூன்றி
மூங்கில் போல் ஓங்கி, மாணவர் ஆசிரியர்
முறியாமல் நாம் வாழ்வதற்கு, ஆசியை நாம் வேண்டி
அகிலம் புகழ் ஆண்டவனை அடி பணிந்து வேண்டுகிறோம்.

(புனித .....

With Best Compliments from

Dr. S. Pentalian Fernando

General Secretary

No. 25, Brassfounder Street,
Colombo 13.
Tel: 338921/077-308826
Res. 173/38, Wolfendal Street,
Colombo 13.

தமிழ் இலக்கிய மன்றம். புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு - 13.

Printed by NEW VEENUS PRINTER, 107/18 V, Bandaranayaka Mawatha, Colombo - 12. Tel : 430195